மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,

திருநெல்வேலி - 12.

# மொழி வரலாறு

முதுகலைத்தமிழ் முதலாமாண்டு

**LTPC2404**

## மொழி வரலாறு

**நோக்கம்:**

1. மொழியின் தோற்றம், வளர்ச்சி பற்றிக் கற்பித்தல்.
2. தமிழ் மொழியின் வரலாற்றை அறியச் செய்தல்.
3. மொழிகளில் நிகழ்கின்ற மாற்றங்களைக் கற்பித்தல்.

**அலகு - 1**

மொழியின் தோற்றம் - பண்பட்ட நிலை, ஆராய்ச்சி - சைகை மொழி - உணர்ச்சி மொழி - பேச்சு மொழி, எழுத்து மொழி, உணர்ச்சி - அறிவு - செயல் - போலச்செய்தல் - பேச்சு மொழியைக் கற்றல் - தாய்மொழி இலக்கணம் - ஒட்டுநிலை - உட்பிணைப்பு நிலை.

**அலகு - 2**

மொழியினங்கள் - ஆரியமொழியினம் - திராவிட மொழியினம் - கடன் வாங்கல் - கிளை மொழி - பொதுமொழி - சிறப்பு மொழி - குறு மொழி - குழந்தை மொழி.

**அலகு - 3**

தமிழின் தொன்மைச்சிறப்பு - செம்மொழி, பெருமொழி, ஆரியக்கலப்பு - தென்திராவிட மொழி, நடுத்திராவிடமொழி, வடதிராவிட மொழி ஆகியவற்றின் சிறப்பும் வழங்கும் இடங்களும்.

**அலகு - 4**

தமிழ் மொழி வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றுகள் - மூலத்திராவிட மொழி - சங்க காலத் தமிழ் - பல்லவர், சோழர், நாயக்கர் காலத் தமிழ்.

**அலகு - 5**

தமிழ் மொழியின் புற வரலாறு - இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் - தற்காலத்தமிழ் - மொழி வளர்ச்சியும் திட்டமிடலும்.

# அலகு - 1

**முன்னுரை**

**மொழி வரலாறு** என்பது மனிதர் எப்போது மொழியைப் பயன்படுத்த தொடங்கினர் என்பது பற்றியும் குறிப்பிட்ட மொழிகள் எப்போது தோன்றி மருபின என்பது பற்றியும் வரலாறு ஆகும். மனிதமொழியானது இயற்கையான மொழியாகும். மொழியினை கற்க முற்படும் அறிவியலுக்கு **மொழியியல்** எனப்பெயர். மனிதமொழி உற்பத்தித்திறன், இடப்பெயர்ச்சி ஆகிய இயல்புகளைக் கொண்டது. அத்துடன் அது சமூக மரபுகள், கற்றல் ஆகியவற்றில் முழுமையாகத் தங்கியுள்ளது. மொழி என்பது இணைப்புக் கருவியாகும். இது சிக்கலான தொடர்பால் முறைமைகளைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்குமான வல்லமை ஆகும். குறிப்பாக இது இதற்கான மனித வல்லமையைக் குறிக்கும். தனியான ஒரு மொழி மேற்குறித்த முறைமை ஒன்றுக்கான ஒரு எடுத்துக்காட்டு ஆகும். இது ஒரு தொகுதி குறியீடுகளையும் அவற்றை முறையாகக் கையாளுவதற்கான விதிமுறைகளையும் உள்ளடக்குகிறது. மொழியின் தோற்றம், பண்பு, இயல்பு, வகை, போன்றவற்றைக் குறித்து இனி கீழே காண்போம்.

## மொழியின் தோற்றம்

‘‘உலகை அறிவால் அறிதலே மனிதனின் தொல்லையான முயற்சியாக இருந்தது. மனிதன் தன்னை மேம்படுத்திக்கொள்ள இயற்கையுலகத்திலிருந்து மன உலகத்திற்குக் மாற முயற்சித்தான். மன உலகத்தை விரிவடையச் செய்யவும் மனிதன் முயன்றான். அது ஒரு புதிய உலகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் ஆயிற்று. இத்தோற்றம் காலத்தினை ஒட்டியே இயைந்ததாக அமைந்தது.

காலத்தை உணர்த்தும் கருவியாக ஒலி துணை நின்றது. இயற்கைக் கருவியாக ஒலி உதவ, இந்தப் புதிய உலகம் தோற்றம் கொண்டது. தன் கருத்தைப் பரிமாறிக் கொள்ள இயற்கைக் கருவியாக ஒலி அமைந்தது. ஒலிக்கும் முயற்சியாலும் மரபுகளாலும் தன்னைச் சுற்றியுள்ள நிகழ் பொருள்கள் காலத்து நிகழ்முறைகள் இரண்டையும் ஒலியால் புலப்படுத்த முயன்ற மனித முயற்சி வெற்றி பெற்றது. இவ்வாறு, இடமாகவும் காலமாகவும் உள்ள உலகத்தை உணர்த்தத் தக்க தனிக் கருவியாக மனிதன் ஒலியை அமைத்துக்கொள்ளலானான்.

## பண்பட்ட நிலை

**மொழி** என்பது மக்களின் மனத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். எழுதப்படும் மொழியோ, ஓடும் காலத்தை வடித்துக் காட்டும் முயற்சியாகும். இடத்தைப் பொறுத்த அளவில் இயங்கா நிலை அமைய, அந்நிலையிலும் காலம் மாறி மாறிச் சென்று கொண்டிருக்க, அதை வடித்துகாட்டுவது எழுத்து மொழியாகும். இயக்கம் நிலைபேறு இரண்டையும் ஒன்றாக்கி இரண்டன் தன்மையும் கெடாமல் காக்கும் முறை - உரிமையும் உணர்வும் கொண்ட மனத்தின் சிறந்த கருவியாக மொழியை ஆக்கிக் கொண்ட முறை - போற்றத்தக்கது. உலகத்தின் மற்ற எல்லாத் தத்துவங்களிலிருந்தும் இது வேறுபட்டு நிற்கின்றது. இதுவே மொழியின் இணையற்ற சிறப்பியல்பாகும் என்று அறிஞர் **வில்ஸன்** என்பவர் '*மொழியின் பிறப்பு*' என்னும் தம் நூலின் முடிவில் கூறும் கருத்துக்கள் இங்குக் கருதத் தக்கன.

மக்களின் கருத்துக்கள் விரைந்து மாறுகாலத்தில் மொழியும் அதற்கேற்ப மாறுகின்றது. மக்களின் கருத்துக்கள் மாறாமல் தேங்கிக்கிடக்கும் போது மொழியும் மாறாமல் கிடக்கிறது. இவ்வாறு மொழியைப்பற்றி அறியும்

கருத்துக்கள் எல்லாம் வளர்ந்து பண்பட்ட மொழியைப்பற்றியனவே அல்லாமல் தொடக்கத்தில் இருந்த மொழியைப்பற்றியவை அல்ல. மொழி எவ்வாறு தொடங்கியது என்பதை அறிய, இந்தக் கருத்துக்களை எல்லாம் விட்டுவிட்டு, மனிதன் எப்படி வளர்ந்தான் என்ற முற்கால வரலாற்றை - வரலாற்றிற்கு எட்டாத வரலாற்றை ஆராய்தல் வேண்டும்.

## ஆராய்ச்சி

ஆராய்ச்சி என்பது பெரும்பாலும் தெரிந்தவற்றைக்கொண்டு தெரியாதவற்றை அறிய முயல்வதே ஆகும். மொழி எப்படித் தோன்றியது என்பதை அறிவதற்காகப் பல்வேறு காலங்களில் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன. அவ்வப்போது எடுத்துரைக்கப்பெற்ற கொள்கைகள் பலவும் வெறுங் கற்பனைகளாக நின்றனவே அன்றி, உண்மையை விளக்குவனவாக இல்லை. அதனால் ஆராய்ச்சியாளர்க்கிடையே பகைமையும் பூசலும் தோன்றவே, இத்தகைய ஆராய்ச்சிக்கே மதிப்பு இல்லாமற் போயிற்று. சென்ற நூற்றாண்டில் பிரெஞ்சு அகடெமி என்னும் ஆராய்ச்சிக் கழகத்தினர் இனி இத்தகைய முயற்சிக்கு இடந்தருவதில்லை என்று துணியவேண்டிய நிலை ஏற்பட்டது.

பழங்காலத்தில் மொழியின் தோற்றத்தைப் பற்றி ஒருவகையான நம்பிக்கை இருந்து வந்தது. வடமொழியைப் **பாணினி** ஆக்கி வளர்த்தார் என்றும், தென்மொழியாகிய தமிழை **அகத்தியர்** கொணர்ந்து வளர்த்தார் என்றும் இந்நாட்டில் உள்ளது போலவே, ஐரோப்பாவிலும் நம்பிக்கைகள் இருந்து வந்தன. இத்தாலி மொழி **தாந்தே** என்னும் கவிஞராலும், ஆங்கிலம் **சாஸர்** என்னும் புலவராலும், ஜெர்மன்மொழி **லூதர்** என்னும் - அறிஞராலும் டச்சுமொழி **கிறிஸ்தியெர்ன் பெடெர்ஸன்** என்பவராலும் ஆக்கி வளர்க்கப்பட்டன என்று ஐரோப்பியர்கள் நம்பி வந்தனர். ஆராய்ச்சிமுறை தலையெடுத்தபின்னர், இந்த

மொழிகளின் தோற்றத்திற்கு இவர்கள் காரணம் அல்லர் என்றும், மற்றப் புலவர்களுக்கு முன் தோன்றி இம் மொழிகளை வளர்த்த பெருமையே இவர்களுக்கு உரியது என்றும் உண்மை உணர்ந்தனர்.

மொழித்துறையில் இத்தகைய ஆராய்ச்சி போதிய பயன் தரவில்லை. இன்று மொழி பேசுவோர் அறிவு வளர்ச்சி மிக்கவர், தொடக்கத்திலே பேசியவர் அறிவு வளரப் பெறாதவர். மொழியைப் பேசுவதில் இன்றைய மக்களின் அனுபவம், பழங்கால மக்களின் அனுபவத்திற்கு வேறு பட்டதாகும். ஆதலின் அறிவு வளராத பழங்கால மக்கள் மொழியை எவ்வாறு பேசினர் என்பதை இது கொண்டு அறிய முடியவில்லை.

மொழியின் தோற்றத்தை ஆராய்வதற்கு வேறுவகையான முயற்சிகள் பல செய்யப்பட்டன. ஆயினும் வெற்றி கிட்டவில்லை. எகிப்து மன்னர் ஒருவர் புதிதாகப் பிறந்த இரண்டு குழந்தைகளை இடையன் ஒருவனிடம் ஒப்படைத்து, அவற்றிற்கு ஆட்டுப்பால் தந்து வளர்க்குமாறும் அவற்றின் எதிரில் ஒரு சொல்லும் பேசாதிருக்குமாறும், அவைகளே எந்தச் சொல்லை முதலில் பேசுகின்றன என்று கவனிக்குமாறும் ஏற்பாடு செய்தார். இத்தகைய முயற்சியே ஸ்காட்லாண்டில் நான்காம் ஜேம்ஸ் என்னும் மன்னனாலும் மொகலாய மன்னன் ஒருவனாலும் இரண்டாம் பிரடெரிசு என்னும் ஐரோப்பிய மன்னனாலும் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

## சைகை மொழி

சைகைகளிலிருந்தே மொழி தோன்றியதாகச் சிலர் கூறுகின்றனர். சைகைகள் அறிவை அடிப்படையாகக் கொண்டவை. சைகைகள் மக்களிடமே காணப்படுகின்றன. சுட்டிக்காட்டுதல் போன்ற எளிய சைகையும் எந்த விலங்கினிடமும் காண முடியாது. ஆனால் எல்லா இனத்து மக்களும் அந்தச்

சைகைகள் செய்ய வல்லவராய் இருக்கின்றனர். ஆகையால், மக்கள் மக்களாய் இருப்பது மொழிக்கு அடிப்படையான சைகைகள் செய்ய வல்லவராய் இருத்தல்பற்றியே என்று கொள்ளலாம்.

ஓர் இடத்தையோ பொருளையோ காட்டுவதற்குச் சுட்டு விரலை நீட்டிப் பயன்படுத்துதல், பசித்தவன் தன் கையால் வயிற்றைத் தொட்டுக் காட்டுதல், உண்ணுவதைத் தெரிவிப்பதற்கு வாய்க்கு அருகே கைவிரல்களைக் குவித்து வைத்துக் காட்டுதல், அடித்தலைப் புலப்படுத்துவதற்குக் கையை நீட்டி ஓங்குதல், பேச வேண்டா என்பதற்கு வாயைக் கையினால் மூடிக் காட்டுதல், இசைவைத் தெரிவிப்பதற்கு ஒருவகையாகவும் மறுப்பைத் தெரிவிப்பதற்கு மற்றொரு வகையாகவும் தலையை அசைத்தல், வரவழைப்பதற்குக் கைவிரல்களை உயர்த்தி உயர்த்தி மடக்கிக் காட்டுதல், வேண்டா என்பதற்கு உயர்த்திய கைவிரல்களை ஊசல்போல அசைத்துக் காட்டுதல், போகச் செய்வதற்குக் கைவிரல்களைச் சாய்த்து அசைத்துக் காட்டுதல், விரைந்து போகச்செய்வதற்கு அவற்றை விரைவாக அசைத்துக் காட்டுதல் முதலாக மனிதன் கற்றுள்ள சைகைகள் எத்தனையோ உள்ளன. இவற்றை மனிதன் வேண்டும்போது வேண்டியவாறு பயன்படுத்துகிறான். விரும்பிச் செய்யும் (Intentional) இயல்பின இவை எல்லாம். ஆயின் சினம் வரும்போது படபடப்பான ஒலி எழுப்புதல், வெறுப்பு வரும்போது சகர ஒலி (சீ, சே, உச்) எழுப்புதல், துன்பம் மிகும் போது அழுதல், மகிழ்ச்சிமிக்க போது ஆரவாரம் செய்தல் முதலானவை இயல்பூக்கத்தால், அமைந்தவை ஆகும். விலங்குகளும் பறவைகளும் அறிந்த மொழிகள் இவ் வகையைச் சார்ந்தன. மேலே குறித்த மேலே குறித்த சைகை மொழிகள் விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் எட்டாதவை பழங்கால மனிதர் சைகைமொழிகளைத் தக்கவாறு பயன்படுத்தும்

ஆற்றல் பெற்றிருந்தமையாலேயே குரலில் எழும் ஒலிகளையும் தக்கவாறு பயன்படுத்திக் கற்றனர்.

## உணர்ச்சி மொழி

வெறுப்பு, வெகுளி, மகிழ்ச்சி, அழுகை முதலிய உணர்ச்சி வயமாக இருக்கும் போது பிறக்கும் ஒலிகள் மொழிக்குக் காரணம் என்பர் ஒருசாரார். இதனை உணர்ச்சி மொழி அல்லது குறிப்பு மொழி பற்றிய கொள்கை என்பர். ஆ, ஓ, அன்னோ, அந்தோ, முதலிய சொற்கள் அவ்வாறு பிறந்தன எனலாம். இந்த கொள்கையும் குறைவுடையதே. உணர்ச்சி பற்றிப் பிறக்கும் ஒலிகள் மிகச் சில சொற்களுக்கே காரணமாக இருக்கின்றன. தவிர, இச் சொற்கள் உணர்ச்சியை உணர்த்துமே ஒழியக் கருத்தை அறிவிப்பதில்லை. சொற்கள் உணர்ச்சிக்குக் கருவியாய் இருக்கும் நிலை குன்றி அறிவுக்குப் பயன்படும் நிலை வந்தால்தான் மொழி வளர்கிறது எனலாம். சுருங்கக் கூறினால், உண்மையான பேச்சு மொழி உணர்ச்சியால் பிறக்கும் ஒலிகளைக் கடந்ததாகவே உள்ளது.

## பேச்சு மொழி

பேசப்படுவதும் கேட்கப்படுவதுமே உண்மையான மொழி. மிகப் பழங்காலத்தில் வாழ்ந்திருந்த சில விலங்குகளின் உடலமைப்பு இன்னதெனக் காட்டும் கல்படிவுகளைப் (Fossils) போன்றவை வழக்கிறந்த மொழிகள். விலங்குகளின் உடல் உறுப்புக்கள் கல்லில் படிந்து விளங்குவது போல், ஒரு காலத்தில் மக்களால் பேசப்பட்டுவந்த ஒரு மொழி இலக்கிய வடிவில் ஓர் அளவிற்கு அழியாமல் நின்று அதன் தன்மையைக் காட்டுகின்றது.

புலன்களால் உணரப்படும் குறியீடுகள் உடையது மொழி எனலாம். பொருள்களுக்கு உரிய ஒலிவடிவான குறியீடுகள் கொண்டது பேச்சுமொழி ஆகும். கற்றவர்களே மொழியாராய்ச்சி செய்தல் கூடும். அவர்கள் மொழியாராய்ச்சி செய்யத் தலைப்பட்டபோது, பேச்சு மொழியை மதிக்காமல், கற்ற புலவர்கள் எழுதிய இலக்கியங்களையும் எழுத்து வடிவு பெற்ற மற்றவற்றையுமே மொழியாக மதித்து, ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார்கள். அத்தகைய ஆராய்ச்சியால் போதிய பயன் விளைவதில்லை. உண்மைகான இயலவில்லை. தடுமாற்றமும் தவறுமே கண்ட பயன்கள்.

மொழி என்பது உண்மையாக நோக்கின், ஒருவர்க்கு ஒருவர் நேரே நின்று கருத்தை உணர்த்தும்போது பயன்படும் கருவியே ஆகும். பேச்சுமொழி ஒருவரின் உடல்போன்றது எனலாம். மொழியாராய்ச்சிக்கு எழுத்துமொழி எவ்வளவு பயன்பட்ட போதிலும், பேச்சுமொழி இன்றியமையாததாக உள்ளது. இதுபற்றியே மொழியின் உயிர், வாய்க்கும் செவிக்கும் இடையே உள்ளது என்று கூறுவர்.

மொழியியல் ஆராய்ச்சிக்கு மிகுதியாகப் பயன்படுதல் பேச்சுமொழியே ஆகும். மொழியியல் ஆராய்ச்சியாளர் ஒரு மொழியின் சிறப்பு வேறு என்றும் அதில் அமையும் இலக்கியத்தின் சிறப்பு வேறு என்றும் இரண்டையும் தனித்தனியே பிரிப்பர். படித்த மக்களின் பேச்சில் உள்ள இலக்கணம் படிக்காத மக்களின் பேச்சிலும் உள்ளது. படித்தவர்கள் சொற்களைத் திருத்தமாக ஒலிக்கின்றனர். நாகரிகமான சொற்களைத் தெரிந்தெடுத்துப் பேசுகின்றனர். திருத்தமாக ஒலித்தலும் நாகரிகமாகப் பேசுதலும் இலக்கணம் அல்ல. சொற்களைத் தக்க இடங்களில் அமைத்தலும் சொற்களோடு ஏற்ற உருபு முதலியவற்றைச் சேர்த்தலுமே இலக்கணம் எனப்படும். இத்தகைய இலக்கணம், படிக்காத மக்களின் பேச்சிலும் உள்ளது.

‘பேச்சுமொழி ஓடும் ஆறு போன்றது என்றும், எழுத்து மொழி அந்த ஆற்றில் மிதக்கும் பனிக்கட்டி போன்றது என்றும் **வெண்ட்ரியே** கருதுகிறார்’. பேச்சுமொழி உள்ளத்து உணர்ச்சியின் தூண்டுதலால் இயல்பாகத் தானே வரும் மொழி. எழுத்துமொழி அறிவின் முயற்சியால் ஒழுங்கு செய்து அமைக்கப்படும் மொழி. பேச்சுமொழியில் அமையும் வாக்கியத்திற்கும் எழுத்து மொழியில் அமையும் வாக்கியத்திற்கும் வேறுபாடு உண்டு. பேச்சுமொழியின் வாக்கியம் சுருங்கியது. எளியது, நேரானது, இயற்கையானது, தெளிவானது. காரணம், பேசுவோர், எண்ணும் எண்ணங்களுக்கு உடனே ஒலிவடிவு கொடுத்து வெளியிடுகின்றனர். ஆகவே சுருங்கிய நேரத்தில் குறைந்த மூளை உழைப்பால் அமைந்தவை அவர்களின் வாக்கியங்கள். ஆகவே பேச்சுமொழி செல்வாக்கு மிகுந்தது என்பதும், அதன் செல்வாக்கு மொழியின் இலக்கணத்திலும் காணப்படும் என்பதும் தெளிவாகிறது.

## எழுத்து மொழி

உண்மையான மொழி என்பது பேசப்படுவதும் கேட்கப்படுவதும் என்று பேச்சுமொழியில் கூறப்பட்டன. ஆயினும் எழுதப்படுவதும் படிக்கப்படுவதும் அடுத்த நிலையில் வைத்துக் கருதப்படும் மொழியாகும். இவைகளே அன்றி வேறுவகை மொழிநிலைகளும் உண்டு. எண்ணப்படுவது, நினைக்கப்படுவது, கனவுகாணப்படுவது ஆகியவைகளும் மொழியே ஆகும்.

வரிவடிவான குறியீடுகள் கொண்ட எழுத்துமொழி செவிப்புலனும் கட்புலனும் பற்றுக்கோடாகக் கொண்டு வழங்கும் மொழிகள் ஆகும். தொட்டு அறியும் குறியீடுகளால் அமைந்தது - உற்றறியும் மொழியாக உள்ளது - குருடர் கற்கும் எழுத்து மொழி.

பேச்சுமொழி ஒருவரின் உடல்போன்றது என்றால், எழுத்துமொழி அவருடைய படம் போன்றது எனலாம். ஒருவர்க்கு நேரே நின்று கருத்தை உணர்த்த முடியாதபோது அதற்கு உதவியாக வந்து அமைந்த துணைக்கருவியே இலக்கியம், கல்வெட்டு, கடிதம் முதலிய எழுத்து வடிவங்கள்.

பொதுவாக மக்களுக்குப் பயன்படும் முறையை நோக்கினால், பேச்சுமொழியைவிட எழுத்துமொழியாகிய இலக்கியமே மிகுதியாகப் பயன்படுவது எனக் கூறலாம்.

பேச்சுமொழி எழுத்துமொழி என்ற பாகுபாட்டையும் கடந்து ஒரு மொழியில் தொன்றுதொட்டு அடிப்படையாய் இருந்து வருவது இலக்கணமாகும். நம் முன்னோரிடமிருந்து நாம் கற்றபோது, வாக்கியத்தில் முதலில் அமையும் சொல் இது, முடிவில் அமையும் சொல் இது, இடையே அமைபவை இவை, ஒன்றோடொன்று இயைதல் இப்படி என்பவற்றை எல்லாம் எண்ணிப் பார்க்காமலே கற்றுக்கொள்கிறோம். *'அதைச் செய்து விட்டு வா'* என்று வாக்கியத்தைக் கற்றபோது, அது போன்ற பல வாக்கியங்களின் அடிப்படையைக் கற்றுக் கொண்டோம். பல வாக்கியங்களைக் கேட்டுக் கேட்டு அந்த அடிப்படை நினைவில் ஊறிவிடுகிறது. அதனால் தான் நாமாகப் பேசும்போது, *'படத்தைப் பார்த்துவிட்டுப் போ'* என்கிறோம். இதைப் பேசத் தெரிந்து கொண்டோம் என்றால், பெயர்ச்சொல்லோடு இரண்டாம் வேற்றுமை உருபைச் சேர்க்கும் முறை, வினைச்சொல்லோடு இறந்தகால இடைநிலை சேர்த்து அதை வினையெச்சமாக்கும் முறை, அந்த வினையெச்சத்தோடு இறந்த காலத் துணை வினை சேர்க்கும் முறை, அந்தத் துணைவினையாகிய எச்சத்தை அடுத்து முற்றுவினை சேர்க்கும் முறை முதலிய எவ்வளவோ **இலக்கணக் கூறுகளை நம்மை அறியாமல் கற்றுக் கொண்டவர்களாகிறோம்.** நம் முன்னோர்களும்

இவ்வாறே அவர்களுடைய முன்னோர்களிடமிருந்து கற்றனர். இப்படியே முன்னோர் முன்னோர் என்று பல தலைமுறைகளாக மொழியின் அடிப்படை மாறாமல் கற்கப்பட்டு வந்திருக்கிறது. தாய்மொழியை நினைவு வைத்துக் கொள்வதாகிய அதுவே மொழியின் அடிப்படை என்பர் அறிஞர் பிரீல். இத்தகைய அடிப்படையாக அமையும் இலக்கணத்தை எவரும் புறக்கணிக்க இயலாது, *'படத்தைப் பார்த்துவிட்டுப் போ'* என்பதை *'விட்டுப் போ ஐ படம் து பார்'* என்று மாற்றி இலக்கணத்தைப் புறக்கணித்தால் ஒருவருக்கொருவர் விளங்காத மொழிக் குழப்பம் ஏற்படும். ஒருவர் கருத்து மற்றவர்க்கு விளங்குவதற்காகவே மொழி கையாளப்படுவதலால், இத்தகைய புறக்கணிப்புக்கும் குழப்பத்திற்கும் யாரும் எப்போதும் இடம் தருவதே இல்லை. ஆகவே, எல்லோரும் தம்மை அறியாமலே மொழியின் அடிப்படையாகிய இலக்கணத்தைப் போற்றிக் காப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்துவருகின்றனர் என்பது தெளிவாகிறது.

மொழியைப்பற்றி உளநூலார் பலவகை ஆராய்ச்சிகள் செய்து வருகின்றனர். மூளையில் கருத்துக்களைக் கொள்ளும் வகைகளுக்கும் மொழியில் உள்ள இலக்கணக் கூறுகளுக்கும் ஏதாவது தொடர்பு உண்டா என்று ஆராய்ந்துள்ளனர். அத்தகைய தொடர்பு ஒன்றும் இல்லை என்பதே அவர்களின் முடிவு. ஒரு மொழியில் வேற்றுமை எட்டு என இலக்கணக்காரர் கூறுகின்றனர். மற்றொரு மொழியில் ஐந்து என்கின்றனர். இன்னொரு மொழியில் பதினாறு என்கின்றனர். மூளையின் கருத்துக் கொள்ளும் வகைகளை ஒட்டி வேற்றுமைப் பாகுபாடுகள் அமைந்திருந்தால், எல்லா மொழியிலும் வேற்றுமைகள் எட்டாகவோ, ஐந்தாகவோ ஒரே எண்ணிக்கையாக அமைந்திருக்க வேண்டும் அன்றோ? அவ்வாறு இல்லை. இலக்கணக் கூறுகள் எதிர்பாராமல் ஒரு வகையாய்த் தொடக்கத்தில் அமைய, அவற்றை அவ்வாறே தலைமுறை தலைமுறையாகப்

போற்றிப் பயன்படுத்திக்கொள்கின்றனர். என்றோ அமைந்த மண்வெட்டியை இன்று வரையில் அவ்வாறே வைத்துப் பயன்படுத்திக்கொள்ளவில்லையா? அதுபோன்றதே இதுவும் ஆகும். எண்களைப் பத்துப்பத்தாக எண்ணுவதும் எதிர்பாராமல் அமைந்த அமைப்பே ஆகும். மனிதனுடைய கைவிரல்களுக்கும் பத்துப் பத்தாக எண்ணும் முறைக்கும் தொடர்பு உண்டே தவிர, மூளைக்கும் அதற்கும் தொடர்பு காணோம். மூவிடங்களுக்கும் மூளையில் கருத்துக்கொள்ளும் முறைக்கும் ஒரு வகையில் தொடர்பு இருப்பதாகக் கருதலாம். ஆனால், பகுதி, விகுதி, இடைநிலை முதலியவற்றோடு தொடர்பு காண முடியவில்லை.

மூளையின் கூறுபாடுகளுக்கும் இலக்கணப் பாகுபாடுகளுக்கும் தொடர்பு கூற முடியாவிடினும், மூளை வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும் தொடர்பு உள்ளது எனலாம். அறிவு வளர்ச்சி மிக்க மக்கள் பேசும் மொழி பலவகைச் சொல்வளம் பொருள்வளம் பெற்று விளங்கக் காணலாம். அத்தகைய வளர்ச்சி இல்லாத மக்கள் பேசும் மொழி, சொல்வளம் பொருள்வளம் குறைந்த மொழியாக உள்ளது. ஆகவே, ஒரு மொழியின் சொற்பொருள் வளமும் வறுமையும் பேசுவோரின் மனவளத்தையும் வளமின்மையையும் ஒட்டி அமைவதாகக் கூறலாம்.

## உணர்ச்சி - அறிவு - செயல்

மொழி, கருத்தை உணர்த்துவதற்காக மட்டும் ஏற்பட்டது அன்று. சிந்தனையாளர்கள் கருத்து மிக்கவர்கள். அவர்கள் தம் கருத்தை உணர்த்துவதற்கு மொழியைப் பயன்படுத்துவது உண்மையே. ஆனால், மக்கள் பலர் ஒருவரோடு ஒருவர் கூடிப் பழகி மகிழ்வதற்காகவே பெரும்பாலும் மொழியைப் பயன்படுத்துகின்றனர். குழந்தைக்கு நாக்கு ஒரு விளையாட்டுக் கருவியாக உள்ளது என்றும், அதைக்கொண்டு பலவகை ஒலிகளை ஒலித்து

மகிழ்கின்றது என்றும் கூறுவர். குழந்தைக்கு மட்டும் அல்லாமல், வளர்ந்த மனிதனுக்கும் மொழி அத்தகைய கருவியாகவே உள்ளது. ஒருவர் மற்றவர்களோடு பழகி மகிழ்வதற்கு முன்குறிப்புப் போதவில்லை, கை முதலியவற்றின் செயல்களே மிகையாக உள்ளன. பேச்சு ஒன்றே அளவுடன் அமைந்த நாகரிகக் கருவியாக உள்ளது. மனிதன் தனித்து ஒதுங்கி வாழமுடியாதவன். ஆகையால், சமுதாயத்தில் கலந்து பழகுவதற்கு இத்தகைய பேச்சைப் பயன்படுத்திக் கொள்கிறான். நான்கு பேர் கூடியுள்ள இடத்தில் ஒருவரோடு ஒருவர் பேசாமல் இருத்தல் இயலாத, பேசாமல் இருத்தல் குற்றமாகவும் பகை அல்லது வெறுப்பின் அறிகுறியாகவும் உள்ளது. அந்தநிலையில் பேச்சு அவர்களுக்கு உதவியாக வந்து அமைகிறது. புதிதாக ஒருவரைக் கண்ட போது, தலையில் உள்ள தொப்பியை தூக்கி அசைத்தல் முதலியவை துணை செய்கின்றன அல்லவா? அவை போலவே, **"எப்போது வந்தீர்கள்?" "நலமாக இருக்கிறீர்களா?" "என்ன செய்தி?" "அங்கெல்லாம் மழை எப்படி?" "வெயில் இப்போதே கொடுமையாக உள்ளது, பார்த்தீர்களா?"** முதலானவற்றில் ஒன்றையோ இரண்டையோ சொல்லுதல், அவருடன் பழகுவதற்குத் துணை செய்கிறது. இந்த வினாக்களுக்கு விடை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தைவிட, வந்தவரிடம் வாய் திறந்து பேசிப் பழக்கத்தைப் புலப்படுத்த வேண்டும் என்ற ஆர்வமே மிகுதியாக இருத்தலை உணரலாம்.

இவ்வாறு பேசிப் பழகமுடியாமல், வேற்று மொழியாளர் ஒருவர் எதிர்ப்பட்டபோது, மனம் அமைதியிழத்தலையும் காணலாம். இக்காரணம் பற்றியே, காட்டுமிராண்டிகள் தம் மொழி தெரியாதவர்கள் எல்லோரையும் பகைவராகக் கருதினர் போலும்!.

கருத்தைப் பிறர்க்கு உணர்த்துவதற்கு உரிய கருவி மொழி என்பது பலரும் கூறிவரும் விளக்கம். **டாலிராண்ட்** என்பவர், அதற்கு மாறாக, கருத்தைப் பிறர் அறியாமல் மறைப்பதற்கு உதவுவது மொழி என்றார். **சோவென்கிர்க்கெர்ரெட்** என்பவர், இவ்விரண்டையும் விட்டு, தமக்குக் கருத்து ஒன்றும் இல்லை என்பதை மறைக்கப் பலர் மொழியைப் பயன்படுத்துகின்றனர் எனக் கூறுகிறார்.

பொதுவாக ஆராய்ந்து நோக்கினால், மொழி மூவகையில் பயன்படுதல் காணலாம். முதலாவதாக, அது கருத்துப் புலப்படுத்துவதற்கு உதவும் கருவியாகும். இரண்டாவதாக, சிந்தனை வளர்ச்சிக்கு அது துணை செய்கிறது. மூன்றாவதாக, மறைக்கப் படுவனவற்றை மறவாமல் காக்கும் கருவியாகவும் வேண்டியவற்றை வேண்டியபோது அறிய உதவும் கருவியாகவும் பயன்படுகிறது. இவ்வாறு உதவும் கருவியாகப் பயன்படும் போது அது இலக்கியமொழி என்று கூறப்படுகிறது.

மக்களின் வாழ்வில் அறிவுடன் உணர்ச்சியும் இடம்பெற்று விளங்குவது போல், மொழியிலும் அறிவின் கூறுகளும் உணர்ச்சியின் கூறுகளும் அமைந்துள்ளன. மனிதர் காட்டு மிராண்டிகளாக வாழ்ந்திருந்த காலத்தில் உணர்ச்சி மிக்கவர்களாக இருந்தனர். அப்போது அவர்களின் மொழியிலும் உணர்ச்சியின் கூறுகளே மிக்கிருந்தன. நாகரிகம் எவ்வளவு வளர்ந்த போதிலும், மனிதரின் வாழ்வில் உணர்ச்சி குறைந்து குறைந்து ஓரளவு இருந்து வருவது போல், மொழியில் அறிவின் கூறுகள் மிக்க போதிலும், ஓரளவு உணர்ச்சியின் கூறுகள் இருந்தே வருகின்றன. **'அந்தோ அந்தோ' 'என்னே என்னே'** என்று தேர்ந்த எழுத்தாளர் எழுதும் பகுதிகள் உணர்ச்சியின் கூறுகளே ஆகும். எழுத்திலேயே இவை காணப்படும்போது, பேச்சு மொழியில் இன்னும்

பெருகியிருத்தல் இயல்பே யாகும். சே! ஆ! ஓ! முதலியவை உணர்ச்சியைப் புலப்படுத்துவன. ‘இன்னும் வரவில்லையே’ என்னும்போது ஏகாரம் ஏமாற்ற உணர்ச்சியைப் புலப்படுத்துகிறது. ‘வந்தார் வந்தார்’ என்று இருமுறை கூறுதலும் உணர்ச்சியை வெளியிடுவதேயாகும்.

உணர்ச்சி மொழியில் (Affective Language) சொல்லிலக்கண மாறுதல் ஒன்றும் இல்லை. சொற்கள் வேறு வகைச் சொற்களாக இருக்கலாம். அல்லது வாக்கியத்தில் சொற்கள் நிற்கும் இடம் மாறலாம். ‘அவன் வெறுக்கத்தக்க மனிதன்’ என்னும் அதையே உணர்ச்சி மொழியில் ‘சே! சே!’ அவன் மனிதனா?’ என்பர். ‘அவன் பொல்லாதவன்’ என்பதை, ‘பொல்லாதவன் அவன்’ என்று உணர்ச்சி தோன்ற மாற்றிக் கூறுவர். ஆகவே, சொற்கோவை, வாக்கிய அமைப்பு ஆகியவற்றில் சில மாறுதல் செய்து உணர்ச்சி மொழி அமைகின்றது.

மொழி, பொதுவாக ஓரளவு உணர்ச்சி கலந்தே வழங்குகின்றது. எனினும், பேச்சுமொழியில் உணர்ச்சி மிகக் கலந்துள்ளது என்றும், எழுந்து மொழியில் உணர்ச்சி அவ்வளவாகக் கலப்பதில்லை என்றும் கூறலாம். பேசும்போது ஒருவன் தான் கலந்து பேசுகின்றான். ஆயின் அவனே எழுதும்போது இன்னொருவனுடைய கருத்துக்களை எழுதுவதுபோல் தான் கலவாமல் தனித்து நின்று எழுதுகின்றான். இதுவே இவ்வேறுபாட்டுக்குக் காரணமாகும்.

பேசுவோர் எழுத்துமொழியைக் கற்பதாலும், எழுதுவோர், பேசுவோராகவும் பேச்சைக் கேட்போராகவும் இருத்தலாலும், உணர்ச்சி மொழியும் அறிவு மொழியும் வேறு வேறாகத் தனித்து நிற்க முடிவதில்லை. எழுத்து மொழியில் சில வேளைகளில் தெளிவுறுத்துவதற்காக, உணர்ச்சிமொழியின் முறை கலப்பது

உண்டு. கற்ற நூல்களின் பழக்கத்தால், பேசும் மொழியில் அறிவு மொழியின் அமைப்புகள் இடம் பெறுவதும் உண்டு.

‘மற்று கொல், அந்தோ, மதி, மன், தில்ல’ முதலான இடைச் சொற்கள் பழந்தமிழில் கலந்திருந்தமைக்குக் காரணம் அக்காலத்து உணர்ச்சி மொழியின் செல்வாக்கே. விழைவு, இரக்கம் முதலான பொருள்கள் சில இடைச் சொற்களுக்கு இருத்தலும் இங்குக் கருதத்தக்கது. இவைகள் எல்லாம் பேச்சுமொழியில் கண்ட உணர்ச்சிக் கூறுகளுக்கு இலக்கணக்காரர் வகுத்த வரையறைகள் எனலாம்.

மனிதர் சிலர் தம் விருப்பு வெறுப்புக்களைப் பேச்சில் மென்மை. வன்மையான ஒலிகளாலும் மிகப்படுத்தும் மிக எடுத்தும் ஒலித்தலாலும் புலப்படுத்துவர். நாகரிகம் குறைந்த மக்களின் பேச்சில் இவ்வியல்பு மிகுதி. ஓர் இனத்தாருள்ளேயே, ஆண்களின் பேச்சைவிடப் பெண்களின் பேச்சில் இந்தக் கூறுகள் மிகுதி என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன். இவை எல்லாம் உணர்ச்சி மொழியைச் சார்ந்தவை எனலாம். பொதுவாக மொழிகளை ஒப்பீட்டு ஆராய்ந்தால், ஆங்கில மொழியில் இத்தகைய உணர்ச்சிக் கூறுகள் குறைவு, ஆங்கிலேயர் உணர்ச்சி மிகுந்தபோதும் உணர்ச்சி அற்றவர்கள் போல் பேசும் கலையில் தேர்ந்தவராக உள்ளனர். மற்ற மொழிகளில் விளக்கத்துடன் ஒலித்துப் புலப்படுத்த வேண்டிய உணர்ச்சிக் கூறுகளை ஆங்கிலம் மிக நுட்பமான சிறுசிறு ஒலிமாறுதல்களால் உணர்த்துகிறது.

அறிவு, உணர்ச்சி, செயல் மூன்றுமே வாழ்க்கைப் பகுதிகள். ஆகையால், அறிவுமொழி, உணர்ச்சி மொழி ஆகியவற்றோடு செயல் மொழியும் இருப்பதாகக் கொள்ளல் வேண்டும். அதைப் பற்றிய ஆராய்ச்சி இன்னும் வளரவில்லை. நாகரிகம் வளர வளர, அறிவு பெருகி அறிவுமொழியே பெரும்பங்கு ஆகின்றது.

உணர்ச்சி மொழி சிறிதளவாக நிற்கிறது. செயல்மொழியோ தொடக்கத்தில் இருந்த அந்த அளவிலேயே இன்றும் காணப்படுகிறது. ‘வா, போ, நட, இரு, முதலான ஏவல் வினைகளும் ‘குழந்தாய், தம்பீ, அம்மா’ முதலான விளிப்பெயர்களும் செயல்மொழி எனக்கூறத்தக்கவை ஆகும்.

எழுவாய் முன்னும் பயனிலை பின்னுமாக ‘அவன் போனான்’ என்று சொல்லும் வாக்கியம் பல தலைமுறைகளாக அனுபவப்பட்டு அமைந்த அறிவுமொழியின் முறை, ‘போனான் அவன்’ என்று சில வேளைகளில் விரைந்து கூறுகிறோம். அது உணர்ச்சியின் விளைவாகும்.

‘பாம்பு அங்கே ஓடுகிறது’ என்று சொல்வது அறிவுக்கு இயைந்த வாக்கிய அமைப்பு. உணர்ச்சி வயப்பட்டபோது வினைமுற்று இல்லாமலே ‘பாம்பு பாம்பு பாம்பு’ என்று அலறுகிறோம். அடுக்குத் தொடராக வருவன எல்லாம் உணர்ச்சி மொழியின் பாற்படுவனவே.

இவ்வாறு உணர்ச்சியின் பயனாக மொழியில் ஏற்படும் மாறுதல்களை எல்லாம் கண்டு அவற்றிற்கும் இலக்கணத்தில் இடம் கொடுத்து முறைப்படுத்துவது தமிழிலக்கண நூலாரின் சிறப்பியல்பாகும். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியத்திலும் அடுக்குத் தொடர் முதலியவை இடம்பெற்றிருத்தல் போற்றத்தக்கது.

**“இசைநிறை அசைநிலை பொருளொடு புணர்தலென்று**
**அவைமூன் றென்ப ஒருசொல் அடுக்கே”**

எனவரும் அடுக்கத்தொடரை இசைநிறை அசைநிலை, பொருளுடையன என மூவகைப்படுத்திக் கூறியுள்ளார்.

வலியுறுத்திக் கூறுமிடங்களில் சொல்லை இருமுறை, மும்முறை, கூறுதலாகிய வழக்கம் உலகத்திலுள்ள எல்லா மொழிகளிலும் உள்ளது. மிகமிக நன்று. என்பவை போன்றவை எல்லா மொழிகளிலும் உள்ளன.

ஒரு சொல்லின் முற்பகுதியை மட்டும் இருமுறை கூறுதலாகிய இரட்டைக்கிளவி என்பதும் எல்லா மொழிகளிலும் காணப்படுவதாகும். **கலகல**த்துவிட்டது, **குறுகுறு**த்தது முதலிய தொடர்கள் பல தமிழில் வழங்குகின்றன.

**"இரட்டைக் கிளவி இரட்டிற்பிரிந் திசையா"**

## போலச்செய்தல்

**மக்களின் சிறப்பியல்பு**

விலங்குகளும் பறவைகளும் இயற்கையிலேயே சில வகைத் திறமை பெற்றவைகளாக, சில இயல்பூக்கம் பெற்றவைகளாகப் பிறக்கின்றன. அதனால்தான் சில பிறந்தவுடன் நடக்கின்றன. கத்துகின்றன. ஓடுகின்றன. வேறு சில பிறந்த சில நாட்களில் தம் வாழ்வுக்கு உரியன எல்லாம் அறிந்தனவாக உள்ளன. சில நாட்களில் தாயை விட்டுத் தனியே வாழும் ஆற்றல் பெற்றுவிடுகின்றன. மனிதன் நெடுங்காலம் பெற்றோரையும் மற்றவர்களையும் அடுத்து வாழ்ந்து பலவற்றைக் கற்க வேண்டியவனாக உள்ளான். பிறவியிலேயே மனிதன் அறிந்த அறிவு தாய்ப்பாலை உறிஞ்சிக் குடித்தல் ஒன்றுதான் போலும், மற்றொன்று உண்டு எனில், சிறிது வளர்ந்த பிறகு மற்றவர்களைப் பார்த்து அவர்கள் செய்வதுபோல் செய்யும் ஆற்றல் தான். 'போலச் செய்தல்' Imitation என்னும் இந்தச் சிறப்பியல்புதான், மனிதனை முன்னேறச் செய்துள்ளது. பிறவியில் இயற்கையாக அமையாத ஆற்றல்களை எல்லாம் பார்த்தும் கேட்டும்

அறிந்து கற்றுக்கொண்டு மனிதன் உயர்வதற்கு உறுதுணையாக இருப்பது இதுவே.

ஒருவர் செய்வதைப் பார்த்து அவ்வாறே செய்கின்ற- போலச் செய்கின்ற- இந்தப் பண்புதான் மக்களின் நாகரிக வளர்ச்சிக்கே காரணம் என்று கூறத்தக்கது. ஒருவரைப் போல் மற்றவர் ஒழுக முயல்வதால்தான், சமுதாயத்தில் ஒற்றுமை நிலவ முடிகின்றது. மக்களில் ஒரு சாரார் சேர்ந்து சமயம் என ஒன்றை அமைத்து வளர்ப்பதற்கும் அதுவே காரணம். அரசியல் அமைப்புக்கள் ஏற்படுவதற்கும் அதுவே காரணம். நடை உடை முதலியவைகளில் புதியன பல ஒரே வகையாகப் பரவி நாகரிகமாகப் போற்றப் படுவதற்கும், ‘போலச் செய்தல்’ என்னும் இந்தப் பண்பே காரணம் ஆகும்.

**கற்றல் எவ்வாறு**

ஒருவர் ஒலித்ததுபோல் மற்றவர் ஒலிக்க முடிந்ததால்தான் பேச்சுமொழி ஏற்பட முடிந்தது. ஒருவர் எழுதியது போல் மற்றவர் எழுத முடிந்ததால்தான் எழுத்துமொழி ஏற்படலாயிற்று. இன்னும் மொழி என்பது பலர்க்கு உரியதான பொதுத்தன்மை பெற்று வளர்வதற்குக் காரணம், ‘போலச் செய்தல்’ என்னும் இந்த மக்கட் பண்பே ஆகும்.

நெடுங்காலமாகத் தமிழ்மொழி பேசிவந்த ஓர் இனத்துள் சிலர், ஆங்கிலமொழி பேசும் மக்களுடன் பழக நேர்ந்த பின், ஆங்கிலமும் பேசத் தொடங்கினர். ஆங்கிலேயரைப் போல் ஒலிக்க முயன்று கற்ற முயற்சியின் வெற்றியே அது. மக்களிடையே இத்தகைய பண்பு அமைந்திருக்க, விலங்குகளிடத்தில் இதைக் காண்பதற்கில்லை. தொல்காப்பியனார் காலத்தில் தமிழ்நாட்டு மாடும் ஆடும் காக்கையும் குரங்கும் எவ்வாறு ஒலித்தனவோ, அவ்வாறே இன்றும் ஒலித்து வருகின்றன. அந்த ஒலிகளும் அவைகள் கற்ற

ஒலிகள் என்று கூறுவதற்கில்லை. உண்ணுதல், தன்னைக் காத்துக்கொள்ளல், உறங்குதல் என்பனவற்றை அவைகள் கற்காத இயற்கைத் திறமையாகப் பெற்றிருப்பதுபோல், அந்தந்த ஒலிகளை ஒலிக்கும் தன்மையையும் இயற்கையாகப் பெற்றுள்ளன. இளங்கன்று பிறந்த சில நாட்களில் எவ்வாறு ஒலிக்கின்றதோ அதுபோலவே சாகும் வரையிலும் ஒலித்து மாய்கிறது. அதில் ஒரு மாறுதலும் இல்லை. கற்கும் ஆற்றல் அதற்கு இல்லை என்பதற்கு இது சான்று. கற்றல் என்பதற்கு அடிப்படையாக வேண்டுவன, ஒருவர் ஒலிப்பது கேட்டு அதைப்போல் ஒலித்தல், ஒருவர் எழுதுவது கண்டு அதைப்போல் எழுதுதல், ஒருவர் செய்வது போல் செய்தல், ஒருவர் உணர்வதுபோல் உணர்தல் முதலியவை. சுருங்கக்கூறின் கல்விக்கும் நாகரிகத்திற்கும் அடிப்படையாக வேண்டுவது 'போலச் செய்தல்' என்னும் பண்பே ஆகும்.

**விலங்கிற்கு இல்லை**

குல்லாய்க்காரன் ஒருவன் மரத்தடியில் படுத்திருந்ததாகவும் மரத்திலிருந்த குரங்கு ஒன்று கீழே வந்து அவனருகே இருந்த குல்லாய் மூட்டையைப் பிரித்து ஒரு குல்லாயை எடுத்துத் தலையில் மாட்டிச் சென்றதாகவும், அதைப் பார்த்த மற்றக் குரங்குகள் ஒவ்வொன்றும் இவ்வாறே ஒவ்வொரு குல்லாயைத் தலையில் மாட்டிச் சென்றதாகவும் குல்லாய்க்காரன் விழித்தெழுந்து திகைத்ததாகவும் கதை ஒன்று உள்ளது. இந்தக் கதையைக் கொண்டு 'போலச் செய்யும்' ஆற்றல் குரங்குக்கு இருப்பதாகக் கூறமுடியாது. உளநூல் அறிஞர்கள் இந்தக் கதையை நிகழக்கூடியதாக உடன்படுவதில்லை. எழுதியவரின் கற்பனை இது. குரங்குக்கு இந்த ஓர் ஆற்றல் - போலச் செய்யும் திறன் - இருக்குமாயின், இனமாகக் கூடி அமைப்புக்கள் பல ஏற்படுத்தி மனித இனத்தையே எதிர்த்திருக்க கூடும். அதற்கு மாறாக, குரங்குகளோ மிகப் பழங்காலம் முதல் ஒரு சிறு முன்னேற்றமும்

இல்லாமல் அன்று இருந்தபடியே இன்றும் உள்ளன. அவற்றின் ஒலிகளிலோ செயல்களிலோ மாறுதலோ முன்னேற்றமோ ஒரு சிறிதும் காணோம்.

விலங்குகளில் அறிவில் மிக்கது என்று கருதப்படும் குரங்குகளிடம் இல்லாத இந்த ஆற்றல், மனிதருள் குழந்தையினிடமும் எளிதில் அமைந்திருக்கிறது. அதனால்தான் குழந்தை பல ஒலி ஒலித்துப் பல செயல் செய்து வளர முடிகிறது. ‘போலச் செய்தல்’ என்னும் இந்த ஆற்றலே குழந்தையின் வளர்ச்சிக்குக் காரணமாக உள்ளது. பேச்சிலும் செயலிலும் அதனிடம் இத்தன்மை காணப்படும் போதெல்லாம் பெற்றோரும் மற்றோரும் வளர்ச்சி என உணர்ந்து மகிழ்கின்றனர். மக்கள் எந்த எந்தத் துறையில் வளர்ச்சி பெற்றுள்ளனரோ, அந்த அந்தத் துறையில் அவர்கள் பெற்றுள்ள வளர்ச்சிக்கெல்லாம் காரணம், ‘போலச் செய்தல்’ என்னும் இந்தத் தனிப் பண்பே ஆகும்.

## பேச்சுமொழியைக் கற்றல்

வேற்றுமை உருபுகளை என்னென்ன பொருளில் எவ்வெவ்வாறு வழங்குவது என்றும், எவ்வெவ்வாறு சொற்களோடு இயைத்து எவ்வெவற்றோடு முடிப்பது என்றும், இலக்கண நூல்கள் பக்கம் பக்கமாக விரித்துரைக்கின்றன. அவற்றைக் கற்கும்போது உருபுகளைச் சேர்த்து வழங்குவது பெருமுயற்சி போல் தோன்றும். ஆயின், கல்லாத மக்கள் பேசும் பேச்சில் ஒருவித முயற்சியும் இன்றி எளிதில் வழங்குகின்றனர், இன்ன சாரியை இதனோடு சேர்க்க வேண்டும் என்று ஆராய்ந்து எண்ணிப் பேசுவதில்லை. கருத்துத் தோன்றியவுடன், அதற்கு மொழி வடிவு தந்து சொற்களை அமைத்துப் பேசுகின்றனர். மிக விரிவான இலக்கண விதிகளையும் நோக்கி, அவற்றைப் பற்றிக் கவலை இல்லாமல் எளிதில் பேசும் மக்களின் அறிவுத் திறனையும் நோக்கின் பேச்சு மொழியின் அடிப்படை

ஒப்புமையாக்கம் என்று விளங்குகிறது. பலமுறை கேட்டுக் கேட்டு, பல முறை பேசிப் பேசி, சில வாய்ப்பாடுகள், ‘மாதிரிகள்’ மக்களின் நினைவில் பதிந்துவிடுகின்றன. இந்த நினைவாற்றலால் தான் மக்கள் எளிதில் பேச முடிகின்றது. இலக்கண விதிகள் போன்றவற்றை அவர்கள் எண்ணுவதே இல்லை.

## தாய்மொழி இலக்கணம்

சாரியைகள் விகுதிகள் உருபுகள் முதலியவற்றை எவ்வெவ்ச் சொற்களோடு எவ்வெவ்வாறு சேர்த்திட வேண்டும் என்று இலக்கண நூல்கள் கூற முயல்கின்றன. ஆயின் முற்றிலும் கூற முடிவதில்லை. முற்றிலும் கூறுவதானால், இலக்கண நூல்கள் அளவின்றிப் பெருகும். இவ்வளவு விரிவாக உள்ள விதிகளை எல்லாம் கற்காமலே மக்கள் சாரியைகளையும் விகுதிகளையும் உருபுகளையும் தக்க இடங்களில் தக்கவாறு சேர்த்துப் பேசுதல் வியக்கத் தக்கதே ஆகும். மக்கள் இதை ஒரு சுமையாகவோ தொல்லையாகவோ கருதுவதாகத் தோன்றவில்லை. சில வாய்ப்பாடுகளை நினைவில் வைத்துக்கொண்டும் இயல்பாகப் பேசிப் பழகுகின்றனர். இதுவே தாய்மொழியின் நன்மையாகும். இளமை முதல்கொண்டே இந்த அமைப்புக்கள் நினைவில் ஊறிவிடுவதால், முயற்சி எளிதாகிறது. பிற மொழி கற்கும் போது விதிகளை நினைவில் வைத்துத் தொடங்குவதால் சுமையாகிறது. சைக்கிள் ஓட்டுபவர்க்குக் கைகால்கள் தாமே கடமையைச் செய்வது போல், பின்னல் வேலை செய்பவர்க்குக் கைவிரல்கள் தாமே வேண்டியவாறு ஊசியை இயக்குதல் போல், தாய்மொழி பேசுபவர்க்குச் சொற்களின் அமைப்பெல்லாம் தாமே எளிதில் வந்து அமைகின்றன.

**ஒட்டுநிலை**

அடிச்சொற்கள் (roots) இரண்டு சேருங்காலத்தில் அவற்றுள் ஒன்று சிதையாமல் நிற்க, மற்றொன்று சிதைதல் உண்டு. இவ்வாறு அடிச்சொல் இரண்டு பலவும் ஒட்டி நிற்கும் நிலை, ஒட்டுநிலை (Applutination) என்பது 'கண்ணன் பார்த்தான்' என்னும் தமிழ் வாக்கியத்தில் 'கண்ணன்' என்ற சொல் ஒட்டு நிலையாக அமைந்ததே. 'கண்' என்ற சொல்லும் 'ஆண்' (அன்) என்ற சொல்லும் ஒட்டி முன்னது சிதையாமல் நிற்க, பின்னது குறுகிக் கண்ணன் என்று ஆயிற்று. பார்த்தான் என்பதிலும் பார் என்பதோடு வேறு சில சேர்ந்து நின்றன.

இச்சொற்களில் முதலில் நிற்கும் கண், பார் என்பவற்றை இலக்கண நூலார் பகுதி என்பர். மொழி நூலார் அடிச்சொல் (root) என்பர். அவற்றோடு சேர்ந்த விகுதி இடைநிலை முதலியன இடைச்சொல் எனப்படும். இடைச்சொல் தமக்கென்று பொருளில்லாதவை. தாம் சாரும் பெயர்வினைகளின் பொருளைத் தெளிவாக்குவன. முதலில் இடைச்சொல் என்று ஒருவகைச் சொல் இல்லை என்பதும், பெயர்வினைகளே நாளடைவில் சிதைந்து அவ்வாறு பயன்பட்டன என்பதும் மொழிநூலார் கொள்கை. முழுச் சொற்களாக இருந்த இவை சிதைந்து இடைச் சொற்களாகப் பெயர்வினைகளோடு ஒட்டி நிற்றலே ஒட்டுநிலை என்பது.

உலகில் உள்ள மொழிகளில் பெரும்பாலான இந்நிலையில் உள்ளன. சித்தியமொழி என வகுக்கப் பெற்ற மொழிகளும் இவ்வகையினவே, திராவிட மொழிகளும் இவ்வகையினவே. தமிழ் மொழியின் பகுதிகள் பலவும் ஓரசையாக இருத்தலும், அவை இடைச்சொற்களோடு ஒட்டி நிற்றலும் காண்க.

தென் ஆப்பிரிக்காவின் பழங்குடி மக்களின் பண்டு (Bantu) மொழி, ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களின் மொழி, மலேசியா பாலினேஷியன் மொழி, ஜப்பானிய மொழி, கொரிய மொழி, பின்னிஷ் (Finnish) மொழி பாஸ்க் (Basque) மொழி, முதலான பல மொழிகளும் ஒட்டுநிலையினவே.

**உட்பிணைப்பு நிலை**

அடிச்சொல் இரண்டு சேருங்காலத்து இரண்டும் சிதைந்து ஒன்றுபட்டு நிற்றல் உண்டு. இந்நிலையே உட்பிணைப்பு நிலை (inflection) என்பது. இவ்வகை மொழியில் அடிச்சொல் தெளிவாய் நிற்றல் இல்லை. பகுதி விகுதி முதலியவற்றை எளிதில் பிரித்தறிய இயலாது. ஐரோப்பிய மொழிகள் பலவும் வடமொழியும் இவ்வகையைச் சார்ந்தவை. இவற்றில் பகுதி ஒன்றே பலவகையாய்த் திரிந்து பலவகைப் பொருள் உணர்த்தும். கிரேக்க மொழியில் ஒரு வினைப்பகுதி 268 வகையாய்த் திரியும் என்றும் வடமொழியில் ஒரு வினைப்பகுதி 891 வகையாய்த் திரியும் என்றும் கூறுவர்.

இத்தகைய மொழியின் வாக்கியங்களில் சொற்களின் இடம் (Word - order) பற்றிக் கவலையில்லை. எந்தச் சொல்லும் எங்க வேண்டுமாயினும் இருக்கலாம். ஏதோ ஒரு மரபு பற்றி மாற்றியமைத்து (அந்வயப்படுத்திப்) பொருள் செய்துகொள்ளலாம். லத்தீன், ஜெர்மன் முதலான மொழிகளில் எழுவாய் பயனிலை முதலியவை வாக்கியத்தில் கண்ட இடமெல்லாம் காணப்படும். முறையினைச் சொற்களின் ஒளிப்பாட்டம் (Hide-and-Seek) என்கின்றார் யெஸ்பர்ஸன்.

# அலகு - 2

## மொழியினங்கள்

**மக்களும் மொழியும்**

மொழி ஒன்றாகத் தோன்றாமல் பலவாகத் தோன்றி வளர்ந்துள்ளமைக்குக் காரணம் மக்களுக்குப் பேசும் ஆற்றல் வளர்ந்த போது, அவர்கள் ஓர் இடத்தில் ஓர் இனமாக ஒத்த அறிவினராகக் கூடி வாழாமையே ஆகும். நாடு முதலியனவாக அமைந்திருந்த பிரிவுகளுக்கு ஏற்றவாறு வெவ்வேறு மொழிகள் தோன்றின.

தோற்றத்தைப் பொறுத்தவரையில் இதைக் கூற முடியுமே தவிர, பேச்சுத்திறனும் நாகரிகமும் வளர்ந்த பிறகு மொழிகள் வெவ்வேறு வகையாய்ப் பிரிந்து வளர்வதற்கு இதைக் காரணமாகக் கூற முடியாது. தொடக்கத்தில் காரணமாக இருந்த இட வேறுபாடும், இன வேறுபாடும் அறிவு வேறுபாடும் பிற்காலத்தில் அவ்வளவு காரணமாக இல்லை. ஒரே இடத்தில் வெவ்வேறு மொழிகள் பேசப்படுகின்றன. வெவ்வேறு இடத்தினர் ஒரே வகை மொழி பேசுதலும் காண்கிறோம். ஒரே இனத்தார் வெவ்வேறு மொழி பேசுதலும் வெவ்வேறு இனத்தார் ஒரே மொழி பேசுதலும் இன்று காண்கிறோம். அறிவில் ஒற்றுமை உடையவர் தங்கள் கருத்துக்களை வெளியிட வெவ்வேறு மொழிகளைப் பயன்படுத்த, வேறுபட்ட அறிவு நிலையினர் ஒரே மொழி பேசிப் போராடுதலும் காண்கிறோம். ஆகவே, தொடக்கத்தில் மொழிகள் பிரிந்து வேறுபடுதற்கு எவை காரணமாக இருந்தனவோ, அவற்றின் செல்வாக்கையும் கடந்து மொழிகள் இன்று வளர வல்லனவாக உள்ளன.

**மக்களினங்கள்**

இந்தியாவிலும் மேற்கு ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ள மக்கள் காக்கேசிய இனத்தவர் என்றும், மெல்லிய தலைமயிரும் நீண்ட தலையும் முன்கையும் அவர்களை வேறுபடுத்துவன என்றும் கூறப்படும். சீனாவிலும் ஜப்பான் ஜாவா முதலிய தீவுகளிலும் வாழ்வோர் மங்கோலிய இனத்தவர் என்றும், மஞ்சள் நிறமும் தட்டை மூக்கும் வட்டத் தலையும் அவர்களின் சிறப்பியல்புகள் என்றும் கூறப்படும். ஆப்பிரிக்க மக்கள் நீகிரோ இனத்தவர் என்றும், கம்பளி மயிரும் கருநிறமும் நீண்ட தலையும் அவர்களை வேறுபடுத்துவன என்றும் கூறப்படும். இவ்வாறு மக்களை இனம் இனமாகப் பாகுபாடு செய்திருந்தனர். இன்று காக்கேசிய இனமும் மங்கோலிய இனமும் கலந்த கலப்பே மிகுதியாக உள்ளது என்கின்றனர். **எளிதில் கலப்பு நேராதது உடல்: எளிதில் கலப்பு நேர்வது மொழி.** உடலளவிலேயே இனங்களுக்குள் கலப்பு மிக நேர்ந்துள்ளது எனின், மொழிகளிடையே சேர்ந்துள்ள மாறுதல்கள் பற்றிக் கூற வேண்டுவதில்லை. அன்றியும் மக்களின் உடலமைப்பின் ஒற்றுமை வேற்றுமைகள் அந்தந்த நாட்டுத் தட்ப வெப்ப நிலைகளாலும் படிப்படியே மாறியமைகின்றன. ஆதலின் அவை ஆராய்ச்சிக்கு அவ்வளவாகத் துணை செய்வனவும் அல்ல.

இந்தியாவில் உள்ள மக்களையே சிலர் எழுவகை இனமாகப் பாகுபாடு செய்துள்ளனர். துருக்கி - ஈரானியர், இந்திய - ஆரியர், சித்திய - திராவிடர், ஆரியத் - திராவிடர், அல்லது இந்துஸ்தானியர், மங்கோலியத் - திராவிடர் அல்லது வங்காளியர், மங்கோலாய்ட், திராவிடர் என்று எழு வகையாகப் பகுத்துள்ளனர்.

இடையிடையே பல இனத்தார் வந்து கலந்துள்ள கலப்பு முறையை இப்பாகுபாடே அறிவிக்கிறது. தென்னிந்தியாவில் இக்கலப்பு மிகக்குறைவு ஆகையால், இங்குள்ள மக்களை மட்டும் திராவிடர் என்ற கலப்பற்ற பெயரால் வழங்க முற்பட்டனர். ஆயினும், சென்னைப் பகுதியிலுள்ளவர்கள் எல்லோரும் திராவிடர்கள் என்றோ வங்காளத்திலுள்ளவர்கள் எல்லோரும் மங்கோலியத் திராவிடர்கள் என்றோ துணிந்து கூறிவிட முடியாது என்றும், எங்கும் கலப்பு உள்ளது என்றும் கிரியர்ஸன் கருதுகிறார்.

**மொழியினங்கள்**

இந்திய மக்களை பகுத்த ஐரோப்பிய அறிஞர்கள் இந்திய நாட்டு மொழிகளை வேறுவகையாகப் பாகுபாடு செய்துள்ளனர். ஆரியம், திராவிடம், முண்டா, மான்குமேர், திபெத்தோ சீனம் என்று ஐவகை மொழிகள் இந்தியாவில் இருப்பதாகக் கூறியுள்ளனர். இக் கொள்கையை இவ்வாறே ஏற்றுக்கொள்ள வேண்டுவதில்லை. 'இல்லாத ஊர்க்கு இலுப்பைப்பூச் சர்க்கரை' ஆதல்போல், ஒருவகை ஆராய்ச்சியும் இல்லாத நிலையில், ஏதேனும் ஒரு பாகுபாடு போற்றப் படுவதாயிற்று. இந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என்றும், ஆரியத் திராவிட மொழிகள் என்றும் ஆரிய மொழிகள் என்றும் மூவகையாகப் பாகுபாடு செய்தலே இன்று மொழியாராய்ச்சிக்குப் பொருந்துவதாக உள்ளது.

உலகில் உள்ள மற்ற மொழிகளை ஆராய்ந்தால், சீனமொழி மிகப் பழைமையானது. கொச்சின் சீனா, கம்போடியா முதலிய இடங்களில் உள்ள மொழிகள் அதனோடு உறவு உடையன. அவை அன்னாமியினம் (Annamese group) எனப்படும். சயாம் காட்டில் பேசப்படுவது தை மொழி எனப்படும். அதுவும் சீன மொழியோடு இயைந்ததே. பர்மிய மொழியும் திபேத் மொழியும் அதனோடு உறவு உடையனவே.

ஐரோப்பாவில் பின்லண்டு முதல் கிழக்கே ரஷ்யா வரையில் வழங்கும் மொழிகள் சித்திய மொழிகள் எனப்படும். துருக்கியிலிருந்து ரஷ்யா வரையில் உள்ள நாடுகளில் வழங்கும் மொழிகள் துரானிய மொழிகள் எனப்படும். அவையும் இந்தச் சித்திய இனத்தைச் சார்ந்தனவே.

ஆரியம் என்று சொல்லப்படுவன வடமொழியாகிய சமஸ்கிருதமும் அதைச்சார்ந்த வட இந்திய மொழகளும் மட்டும் அல்ல, கிரீக், லத்தீன், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம், வெல்ஷ் முதலிய ஐரோப்பிய மொழிகள் பலவும் ஆரிய இனத்தைச் சார்ந்த மொழிகளே, பாரசீகமும் அதைச் சார்ந்ததே.

பாபிலோனிய மொழி, யூத மொழி, ஹீப்ரு மொழி, பீனிசிய மொழி, அரபி மொழி, எகிப்து மொழி, அபிசீனிய மொழி, எத்தியோப்பிய மொழி முதலியவை செமிட்டிக் (Semitric) இனம் எனக் கூறப்படும் இவை அரேபியாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் வழங்குவன.

பார்னு, பூலா, புஷ்மன் முதலிய மொழிகள் மத்திய ஆப்பிரிக்காவில் வழங்குவன, உலாப்(Wolof) இனம் எனப்படும். ஜப்பான் மொழி தனி வகையானது. ஐரோப்பாவில் ஸ்பெயினுக்கு வடக்கே வழங்கும் பாஸ்க் மொழியும் தனி வகையானது. எஸ்கிமோப் பேச்சுக்களும் வேறு வகையானவை.

அமெரிக்காவில் நாகரிகம் இல்லாத மக்கள் பேசிவந்த மொழிகள் வெவ்வேறு பெயரால் வழங்கப்படுகின்றன.

ஆஸ்திரேலியாவின் பழங்குடி மக்களின் மொழிகள் திராவிட மொழிகளோடு தொடர்பு உடையன என்று கருதி வந்தனர். போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. மலேசியா, ஜாவா, பாலினேஷிய மொழிகள் வேறு வேறாக உள்ளன.

**மக்களினமும் மொழியினமும்**

மக்களைச் சில இனங்களாகப் பாகுபாடு செய்த முறைக்கும் மொழிகளைச் சில இனங்களாக வகுத்த முறைக்கும் பழங்காலத்தில் தொடர்பு இருந்தது. ஏன் எனின், அக்காலத்தில், மக்களினங்களின் கலப்பு ஏற்படவில்லை. இன்று உலகில் பல பகுதிகளிலும் பலவகை மக்கள் கலந்துவிட்டனர். ஆகையால், இருவகைப் பாகுபாட்டுக்கும் தொடர்பு இல்லாமல் போய்விட்டது. இன்ன இனத்து மக்களின் நிறம் இன்னது, அவர்களின் உடலுறுப்புக்களின் இத்தகையன என்று ஒருவாறு எடுத்துக் கூறலாம். ஆனால், இன்ன இனத்து மக்களின் மொழி இன்னது என்று எடுத்துரைப்பதற்கு இக்காலம் அவ்வளவாக இடம் தருவதில்லை. உடல் நிறம், உறுப்புக்களின் அமைப்பு முதலியவற்றை ஒருவர் விருப்பம் போல் மாற்றிக் கொள்ள முடியாது. ஆயின், சமயம், பழக்க வழக்கம் முதலியவற்றை மாற்றிக்கொள்ள முடியும். அவை போலவே ஒருவர் தம் தாய்மொழியை மறந்து மற்றொரு மொழியைக் கற்க முடியும். ஒரு நாட்டில் குடியேறிய மக்களின் நிறமும் உறுப்புக்களின் அமைப்பும் எளிதில் மாறுவதில்லை. பல தலைமுறைகளாகப் பிறருடன் கலந்துவிட்டாலும், மாறுதல் மிகுதியாக ஏற்படுவதில்லை. ஆயின், சமயம் மொழி முதலியவற்றை ஒரே தலைமுறையில் மாற்றிக் கொள்ள முடிகின்றது. வட இந்தியாவில் பஞ்சாப் போன்ற ஒரு மாநிலத்தை எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால், அங்கே பலவகை மக்கள் குடியேறிக் கலந்தும் கலக்காமலும் வாழ்ந்து வருகின்றனர். ஆயின் எல்லோரும் ஒரு மொழியையே பேசி வருகின்றனர். தென்னிந்தியாவில் பெரும்பாலோர் ஒரே வகையான இனத்தைச் சார்ந்த மக்கள், ஆயின், அவர்கள் பேசும் மொழிகளில் வேறுபாடுகள் உள்ளன. ஆகவே, மக்களிடையே இனங்களின் உறவும் கலப்பும் ஒரு வகையாய்ச் செல்ல, மொழியினங்களின் தொடர்பும் கலப்பும் வேறுவகையாய் அமைந்து வருகின்றன எனலாம். எதிர் காலத்தில் உயர்ந்த

நாகரிகம் பரவி ஒத்த உரிமை உண்மையாய் விளங்குமாயினும் உலக மக்களுக்குள் எவ்வகையான வேறுபாடும் இல்லாமல் ஒழியுமாயினும் அப்போது நாட்டுக்கு நாடு வெவ்வேறு மொழிகள் வழங்கிவரும் என்றே தோன்றுகின்றது. ஆகவே மக்களினமும் மொழியினமும் வளர்ச்சியிலும் கலப்பிலும் வெவ்வேறாக உள்ளன எனலாம்.

**பொதுவான அடிப்படை**

மனித உடலமைப்பிலும் வளர்ச்சியிலும் பலவகை வேறுபாடுகள் இருந்தபோதிலும் அடிப்படையான பொதுத் தன்மை ஒன்று இருந்துவருகின்றது அன்றோ? அதுகொண்டு, மனிதர் என்ற கருதப்படுகின்றனர் அல்லரோ? மூளையமைப்பும் வளர்ச்சியும் மிகப் பல வேறுபாடுகளையுடையன எனினும், அவற்றிற்குப் பொதுவான அடிப்படைத் தன்மை உண்டு. மூளையின் கருவியாக வளர்ந்து அமையும் மொழிகளும் நாட்டுக்கு நாடு வெவ்வேறாக உள்ளபோதிலும், அவை எல்லாவற்றிற்கும் பொதுவான அடிப்படை உண்டு. பெயர் வினை எழுவாய் பயனிலை செயப்படுபொருள் விளிவேற்றுமை இடைச்சொல் முதலிய பலவகையில் உலக மொழிகள் ஒத்திருப்பதற்குக் காரணம் அதுவே ஆகும்.

**பிறமொழிகளை மதியாமை**

ஒவ்வொரு மொழியாரும் மற்ற மொழியாரைக் குறைவாகவும் மற்ற மொழியை நாகரிகம் இல்லாததாகவும் கருதி வந்திருக்கின்றனர். வடமொழி படித்தவர்கள் அது மட்டும் ‘தேவபாஷை’ என்றும், மற்றவை மண்ணுலக மொழி (பிரகிருதம்) என்றும் கருதினர். விந்தியமலைக்குத் தெற்கே அக்காலத்தில் வழங்கிய திருந்தாத் தமிழை (அல்லது திருந்தாத் திராவிட மொழியைப்) **பைசாச பாஷை** என்றனர். ரோமர்கள் இவ்வாறே பிறமொழியினரைப் ‘பிதற்றுவோர்’ என்றும், காட்டுமிராண்டிகள் என்றும் கருதினர். வேங்கடமலைக்குத்

தெற்கே இருந்த பழந்தமிழர், மலைக்கு வடக்கே இருந்த பகுதியில் தமிழ் திரிந்த மொழியே (தெலுங்கு) வழங்குவது அறியாமல் அதை **வடுகர்** மொழி என்று கருதினர். அந்த நிலப் பகுதியை மொழி வேறுபட்ட பகுதி (மொழி பெயர் தேஎம்) என்றனர். அந்த மக்களை ‘வம்ப வடுகர்’ என்றும் ‘கல்லா நீள்மொழிக் கதநாய் வடுகர்’ என்றும் குறித்தனர்.

பழங்காலத்துக் கிரேக்கர், உலக மக்களைக் கிரேக்கர் என்றும் காட்டுமிராண்டிகள் என்றும் இருவகைப் பாகுபாட்டில் அடக்கினர். மற்றவர்களை நாகரிகம் குறைந்தவர்கள் என எண்ணியதோடு அவர்களின் நடை உடை மொழி முதலிய யாவற்றையும் இழிவாகக் கருதினர். கிரேக்கமொழி பேசுவதையே தமக்கு ஒரு பெருமையாகக் கொண்டனர். கிரேக்க மொழியைச் சார்ந்த கிளைமொழிகளையும் அவர்கள் மதிக்கவில்லை. போலந்து மக்கள் தம்மை அடுத்துள்ள ஜெர்மனியரை ஊமைகள் என்னும் பொருள்படும் சொல்லால் குறித்தனர். கிரேக்கர்களும் தம்மை அடுத்துள்ள நாட்டினரைப் பேச்சற்றவர் என்னும் பொருள்படும் சொல்லால் வழங்கினர். இவ்வாறு பிற மொழிகளையும் பிற மொழியினரையும் மதிக்காத கொடிய அறியாமை பழங்காலத்தில் பல நாடுகளில் இருந்து வந்திருக்கிறது.

**பழம் பெருமை**

இன்றும் பல நாட்டினர் தம் மொழியின் பழைய பெருமைகளைப் பாராட்டுவதில் ஊக்கம் கொண்டுள்ளனர். பழைய வரலாற்றை நினைத்துப் பெருமைப்படுவதில் பயன் இல்லை. பழம் பெருமை இன்றைய வாழ்வுக்கு உதவுவதில்லை. பழம் பெருமையை நினைப்பதால் ஊக்கம் வரும் எனின், அதனால் சோர்வும் வளர இடம் உண்டு அன்றோ? இன்றைய சூழ்நிலையும் வளர்ச்சியுமே உயர்வுக்குக் காரணமாக விளங்க முடியும். சமுதாயம், மொழி

இரண்டனுக்கும் இது பொருந்தும். வாழ்க்கையில் காணும் எழுச்சியும் வீழ்ச்சியும் போலவே, மொழி வரலாற்றிலும் அவற்றைக் காணலாம். ஏழெட்டுத் தலைமுறையாகச் செல்வாக்குடன் வாழ்ந்த ஒரு குடும்பத்தார், வீழ்ச்சியுற்று இருக்கும் இடம் தெரியாமல் மட்கிப்போவதும் உண்டு. ஊர் பேர் அறியாமல் மூலையில் ஒதுங்கி வாழ்ந்த குடும்பம் திடீரென்று முன்னேற்றம் அடைந்து நாடறிய வாழ்வதும் உண்டு. ஆங்கில மொழி சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஒருவகைச் சிறப்பும் இல்லாமல் மூலையில் கிடந்தது. இன்று உலக மொழியாக உயர்ந்துள்ளது. இலக்கிய வளமும் நிரம்பியதாக உள்ளது. மிகப் பழங்காலத்திலேயே எழுத்துக் கலை பிறப்பதற்கு ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னரே மொழி கலை முதலிய யாவற்றிலும் நாகரிகச் சிறப்புடன் நிலைத்து நின்ற நாடு சீனா. சீன நாடு உயர்ந்திருந்த மிகப் பழங்காலத்தில் இந்தோ ஐரோப்பிய இனத்து மக்கள் எல்லோரும் நாடோடிகளாய்த் திரிந்த காட்டு மிராண்டிகளாக இருந்தனர் என **விட்டனே** கருதுகிறார். ஆயின், அந்தச் சீனநாடு பல நூற்றாண்டுகளாகத் தாழ்வுற்றுக் கிடந்தது, வேறு எந்தெந்த நாடுகளோ மேம்பாடு பெற்று வாழ்ந்தன. மொழியின் நிலைமையும் அவ்வாறே ஆகும். பழங்காலத்தில் நாடு முழுவதும் தனியாக அரசு செலுத்திய தமிழ்மொழியின் பண்டைப் பெருமையினையும் இன்றைய நிலையினையும் ஒப்பிட்டுக் காணினும் இந்த உண்மையை உணரலாம்.

### விருப்பு வெறுப்பு

மொழிகளைப்பற்றிய ஆராய்ச்சியறிவு மிகப் பிற்காலத்தே தோன்றியதாகும். முற்காலத்தே தம்மைச் சார்ந்தவை எல்லாம் உயர்ந்தவை என்றும் பிறருடையவை எல்லாம் இழிந்தவை என்றும் எல்லாத் துறையிலும் தவறாக மனப்பான்மை வேரூன்றியிருந்தது போலவே, மொழித்துறையிலும் இருந்து வந்தது. தாம் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்னும் அறியாமைக்கு இடையே

இவ்வாராய்ச்சி தோன்ற இடம் ஏது? ‘தன் குஞ்சே பொன் குஞ்சு’ என்னும் மனப்பான்மை இருந்து வந்தமையால், பழங்கால மக்கள் வேறு மொழி பேசுவோருடன் கூடிப் பழக நேர்ந்த போதும், அந்த வாய்ப்பை நேர்மையான ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தவில்லை. தம்தம் விருப்பு வெறுப்பே முடிந்த முடிபுகள் எனக்கொண்டு உண்மை அறியாமல் மயங்கிக் கிடந்த நிலையே அக்காலநிலை.

**இலக்கியச் சிறப்பு**

அதற்கு அடுத்ததாகக் கூறத்தக்க நிலையில், இலக்கிய வளம் உடைய மொழியே சிறந்த மொழி என்றும், இலக்கியம் இன்றிப் பேச்சு வழக்கு மட்டும் பெற்ற மொழி இழிவானது என்றும் கருதப்பட்டு வந்தது. பழங்காலத் தமிழ் அறிஞர் தம் மொழியைத் தென்மொழி என்றும், அதற்கு இணையானது வடமொழி என்றும் கருதி, பிராகிருதம் பாலி முதலிய வடநாட்டுப் பேச்சு மொழிகளைப் புறக்கணித்த காரணம் இதுவே, வேங்கடத்திற்கு அப்பால் பேச்சு வழக்கில் இருந்த (வடுகர் மொழியாகிய) தெலுங்கைப் பற்றியும், அவ்வாறே மேற்கே வழங்கிய கன்னடத்தைப் பற்றியும் கவலை கொள்ளாத காரணமும் இதுவே. இலக்கிய வளம் இல்லை எனினும் பேச்சுவழக்கு உடையதும் மொழியே என்னும் உண்மையை அவர்கள் போற்றவில்லை.

அதற்கு அடுத்த நிலையில், இந்திய வளம் பெற்ற மொழிகளுக்குள் எது சிறந்தது என்று ஆராயும் ஆராய்ச்சி தலையெடுத்தது. சிறந்த புலவர்கள் உயர்ந்த இலக்கியம் எழுதிய மொழியே மேம்பாடு உடைய மொழி என்று கருதும் போக்கு வந்தது. ஐரோப்பாவில் உள்ள பலவகை மொழிகளையும் இத்தகைய மனப்பான்மையோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கும் முயற்சி பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்து வந்தது. விழுமிய மொழியின் தன்மை எத்தகையது

என்பதைப்பற்றியும், ஐரோப்பிய மொழிகள் அதனோடு ஒட்டிக் காணும்போது எவ்வாறு உள்ளன என்பதைப்பற்றியும் சிறந்த கட்டுரை எழுதுவோர்க்குப் பெர்லின் கலைக் கழகம் (The Berlin Academy) பரிசு ஒன்றை ஏற்படுத்தியது. பரிசு பெற்ற கட்டுரையாளர் (Jenisch) ஐரோப்பிய மொழிகளின் தன்மைக்கும் அவற்றைப் பேசும் மக்களின் இயல்புக்கும் உள்ள ஒற்றுமைகளை எடுத்துக் காட்ட முயன்றார். அவருடைய கொள்கைகளை இன்று உடன்படுவார் இல்லை. உயர்ந்த இலக்கியங்கள் உயர்ந்த மொழியில்தான் பிறக்கும் என்று உடன்படும் அறிஞரும் இன்று இல்லை. ஆட்சிச் செல்வாக்கின் காரணமாகச் சிறியதொரு கிளை மொழியும் பெரிய பொதுமொழியாய் வளர்ந்து வளம் பெறுதல் போல், பண்பாடு குறைந்த ஒரு மொழியிலும் உயர்ந்த இலக்கியம் பிறப்பது உண்டு என்று இன்று அறிஞர் கருதுகின்றனர். நாகரிகம் குறைந்த சிறு குடும்பத்தில் உலகை உய்விக்கும் பெருமகன் பிறப்பது இயற்கை. அதுபோல், பண்பாடு இல்லாத மொழியைப் பேசுவோரின் கூட்டத்தில் உயர்ந்த கருத்துக்கள் கொண்ட புலவர் பிறப்பதும் உண்டு, அத்தகைய புலவர் இயற்றும் சிறந்த நூல்களால் பிற்காலத்தில் அந்தச் சிறு மொழிக்கு மேம்பாடு ஏற்படுவதும் உண்டு. ஆகையால் ஒரு மொழியின் இலக்கிய வளத்தை ஒட்டி அதன் மொழித் தன்மையைச் சீர்தூக்குதல் பொருந்தாது.

**சொற்களால் உறவு காணல்**

இதற்கு அடுத்த நிலையில் வளர்ந்த மொழியாராய்ச்சி சொற்களை ஒப்பிட்டு முடிவுகாணும் அளவில் நின்றது. இரண்டு மொழிகளை ஆராயத் தொடங்குவோர், அவற்றின் அகராதிகளை மட்டும் ஆராய்ந்து, அந்த இரண்டு மொழிகளுக்கும் உள்ள உறவையும், எதிலிருந்து எது தோன்றியிருக்கும் என்ற முடிவையும் தெரிவிக்கத் தலைப்பட்டனர். ஒரு மொழி மற்றொரு

மொழியிடமிருந்து சொற்களைக் கடன் வாங்குதல் எளிது என்பதையும் கடன் வாங்கிய காரணத்தாலேயே இது அதிலிருந்து பிறந்தது. என்று பிறப்புப்பற்றி முடிவுகாணுதல் பொருந்தாது என்பதையும் அவர்கள் அறியார். அதனால்தான் அக்காலத்து அறிஞர் சிலர், தமிழ், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் வட சொற்கள் இருத்தலைக் கண்டு, இந்த மொழிகள் எல்லாம் வடமொழியிலிருந்து தோன்றியவை என்று உடனே முடிவு செய்தனர்.

தவிர, சொற்களின் ஒப்புமை காணும் ஆராய்ச்சியில் தவறுகள் நேர்வதற்கும் இடம் உண்டு. இருவேறு மொழிகளில் தனித்தனியே ஏற்பட்டு வழங்கும் சொற்கள் ஒப்புமை உடையன போல் தோன்றக் கூடும். உண்மையில் மொழிகள் உறவு இல்லாதனவாக இருக்கலாம். சொற்களின் வடிவங்களைக் கொண்டு அவற்றிடையே ஒற்றுமை கண்டு தொடக்கம் ஒன்று எனக் கூறுதலோ, வேற்றுமை கண்டு வெவ்வேறு எனக் கூறுதலோ பொருந்தாது. ஒரு குடியில் பிறந்தவர்களின் பல ஆண்டுகளுக்குப் பிறகு அடையாளம் காண இயலாதவாறு உருவம் திரிதலும் உண்டு. வெவ்வேறு குடியில் பிறந்த இருவர், உடன்பிறந்தார் போல் தோன்றுதலும் உண்டு. சொற்களிலும் இத்தகைய நிலை உண்டு. தமிழில் உள்ள **‘எட்டு’** என்ற சொல்லும் ஆங்கிலத்தில் உள்ள **‘எய்ட்’ (Eight)** என்ற சொல்லும் ஒன்றுபோல் தோன்றினும் உறவே இல்லாதவை. தமிழில் உள்ள ‘பெயர்’ என்ற சொல்லும், கன்னடத்தில் உள்ள ‘ஹெஸ்ரு’ என்ற சொல்லும் வேறுபட்டுத் தோன்றினும், இரண்டும் ஒரே சொல்லிலிருந்து பிறந்தவை. ஆகவே, சொற்கோவைகளை ஒப்பிட்டு ஆராய்வோர். இலக்கணக் கூறுகளையும் ஒப்பிட்டு ஆராயாவிடின் பலவகைத் தவறுகளுக்கு இடந் தர நேரும்.

**புதிய வழிகாட்டி**

சொற்கோவைகளை ஒப்பிட்டு ஆராயும் மொழியாராய்ச்சி போலியானது என்னும் உண்மையை முதல் முதலில் தெளிவாக்கினார், ராஸ்மஸ் ராஸ்க் என்னும் அறிஞர். 1816-23 ஆம் ஆண்டுகளில் அவர் ஸ்வீடன், பின்லண்ட், ரஷ்யா, காகஸஸ், பெர்ஷியா, இந்தியா ஆகிய நாடுகளில் சுற்றிப் பலவகை மொழிகளையும் ஆராய்ந்தார். ஆயின், அவர் உடல்நலம் இழந்து பொருள்முடையால் வருந்தி ஆராய்ச்சி முடிவுறும் முன்னரே மறைந்தார். அவர் கண்ட உண்மைகளைத் தம் தாய்மொழியாகிய டேனிஷ் மொழியில் எழுதினார். அது உலகம் அறியாத சிறுபான்மையோரின் மொழியாக இருந்த காரணத்தால், அவருடைய கொள்கைகள் விரைவில் உலகமெங்கும் பரவ முடியாமற் போயிற்று. அவர் இந்திய மொழிகள் எல்லாம் வடமொழியைச் சார்ந்தவை என்னும் எண்ணத்தோடு தான் சுற்றி ஆராய்ந்தார். ஆயின், பழங்கொள்கைகளைக் கண் மூடிப் பின்பற்றாமல் என்றும் விழிப்புடனிருந்து புதிய உண்மைகளைக் காணும் ஆராய்ச்சித் திறனுடையவராக விளங்கியதால் தென்னிந்தியாவில் உள்ள மொழிகள் தனியினம் எனக் கண்டார். தென்னிந்திய மொழிகளைத் திராவிட மொழிகள் என்று அவர் குறிப்பிடவில்லை. தாம் முதலில் கண்டுணர்ந்த நாடும் மொழியும் பற்றித் தென்னிந்திய மொழிகளுக்கு மலபார் மொழிகள் எனப் பெயர் குறித்து, அவைகள் வடமொழியிலிருந்து வேறுபட்டன என நாட்டினார். அவருடைய ஆராய்ச்சி, சொற்களை ஒப்பிட்டுக் கண்ட ஆராய்ச்சி அன்று. கடன் வாங்க முடியாதவைகளாகிய இலக்கணக் கூறுகளை ஒப்பிட்டுக் கண்ட ஆராய்ச்சி ஆகும். அதனால் மொழியாராய்ச்சித் துறையில் அவர் ஒரு புதிய வழி காட்டியாக விளங்கினார்.

**அறிஞர்கள்**

அவர்க்கு அடுத்தாற்போல் கருதத்தக்க மொழியியல் அறிஞர் ஜாகப் கிரிம் என்பவர், சொற்பிறப்பு ஆராய்ச்சியிலும் ஒலியியல் ஆராய்ச்சியிலுமே பெரிதும் காலம் கழித்தார். ஆதலின் அவருடைய முடிபுகள் பல இன்று ஏற்றுக்கொள்ளத் தக்கனவாக இல்லை.

பிரான்ஸ் பாப் என்பவர் அடுத்தாற்போல் கருதத்தக்க மொழியியல் அறிஞர் ஆவார். அவர் பாரிஸ் நகரத்திற்குச் சென்று கிழக்கு நாடுகளின் மொழிகளைக் கற்று ஆராய்ந்தார் விகுதிகளின் பிறப்பை ஆராயும் ஆராய்ச்சியில் தொடங்கிய அவர் இலக்கணங்களை ஒப்பிட்டுக் காணத் தலைப்பட்டார். ஒப்பிலக்கணம் என்னும் ஆராய்ச்சித் துறை அவரால் வளர்ந்தது எனலாம். ஐரோப்பிய மொழிகளுக்கும் வடமொழி முதலா சில இந்திய மொழிகளுக்கும் உள்ள உறவைக் கண்டு, எல்லாவற்றையும் குறிப்பிட இந்தோ - ஐரோப்பிய மொழியினம் என்ற குறியீடு அமைத்தவர் அவரே.

அடுத்தாற்போல் வந்த மொழியியல் அறிஞர் பலர், பத்தொன்பதாவது நூற்றாண்டில் அவர்கள் ஆற்றிய ஒப்பற்ற தொண்டுகள் பல திறத்தன. தென்னிந்தியாவில் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதினார் அறிஞர் கால்டுவெல். மலையாள மொழியை ஆராய்ந்தார் டாக்கடர் குண்டர்ட் (Dr.Gundert) தெலுங்கு மொழியை அறிஞர் பிரௌன் ஆராய்ந்தார். அவரே கன்னட மொழியை ஆராய்ந்தவர். அறிஞர் கிட்டல் என்பவர் குடகு, துளு பிராஹூய் முதலிய மொழிகளையும் வெவ்வேறு அறிஞர் ஆராய்ந்தனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இவ்வாறு வளர்ந்து வந்த மொழியாராய்ச்சித் துறையில் ஒரு குறை இருந்து வந்தது. அந்தக் குறையால் சில உண்மைகள் விளங்காமற் போயின, விளங்கிய சில தெளிவில்லாமற் போயின. அந்தக் குறை

என்ன? எடுத்ததற்கெல்லாம் வடமொழியின் விளக்கத்தை எதிர்பார்த்த குறையே ஆகும். மொழியியல் என்னும் அரிய கலையை ஆராய்ச்சியாளரே அல்லாமல் மக்கள் பிறகும் உணரும் வகையில் பரவுமாறு பெருந்தொண்டு புரிந்த மாக்ஸ் முல்லர் விட்னே ஆகியோரும் இவ்வாறு வடமொழி விதிகளையும் எடுத்துக்காட்டுக்களையுமே கண்மூடிப் பின்பற்றினர். மாக்ஸ் முல்லரின் முறை, ஒரு பெரிய மரத்தின் உதிர்ந்த சருகுகளை ஆராய்வது போன்றது என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன். விட்னேயின் ஆராய்ச்சிகளில் நேர்மையும் தெளிவும் இருந்தபோதிலும் அவருடைய முடிபுகளும் இன்று பெரும்பாலும் தடுமாறி நிற்கின்றன. வடமொழியில் தாது (அடிச்சொல்) பற்றிய விதிகளைக் கண்மூடிப் பின்பற்றி, எல்லாச் சொற்களுக்கும் ஓரசை வடிவில் அடிச் சொற்கள் கண்டு மகிழ்ந்தனர். இன்று அது பொருந்தாத முறை எனக் கைவிடப்பட்டது. இவ்வாறே மற்றவற்றிலும் வடமொழியைப் பின்பற்றிய கண்மூடி முறைகள் கைவிடப்பட்டன.

**உண்மை உணராமை**

போதிய சான்றுகளைத் தேடிக் காணாமலே விரைந்து முடிவு காணும் போக்கும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஓரளவு இருந்து வந்திருக்கிறது. முயன்று தேடியவர்க்கு எளிதில் சான்றுகள் கிடைக்காததே இதற்குக் காரணம் என்று கூறலாம். அபெல் ஹாவலெக் என்பவர், முதல் முதல் தமிழுக்கு இலக்கணம் எழுதியவர் ஒரு டச்சுப் பாதிரியார் என்றும், தமிழிலக்கணத்தை அவர் லத்தீன் மொழியில் எழுதினார் என்றும் அது கி.பி.1716இல் அச்சிடப்பட்டது என்றும் குறித்திருக்கிறார். அவருடைய நூலை மொழிபெயர்த்தவர், அதற்கு ஒரு திருத்தக் குறிப்பு எழுதியுள்ளார். அதில் முதல் தமிழிலக்கணம் தொல்காப்பியம் என்று கூறப்படும் என்றும், அது கி.பி.எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய நூல் என்றும் அதுவே தமிழ் நூல்களில் மிகப் பழமையானது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அந்த ஆசிரியர் திராவிட மொழிச் சொற்களைக் கொண்டு

திராவிட நாகரிகத்தைச் சீர்தூக்க முனைந்து கடவுள், உயிர் இலக்கணம், எழுத்து ஆகியவற்றிற்குச் சொற்கள் இல்லாத காரணத்தால், தமிழர் என்பவர் நாகரிக வளர்ச்சி இல்லாத தாழ்ந்த நிலையினர் என்று குறித்திருக்கிறார்.

விட்னே என்னும் மொழியியல் அறிஞர் தமிழுக்குத் தொன்மையான இலக்கியங்கள் உண்டு எனக் கூறி, கி.பி.எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் தோன்றியவை எனச் சொல்லக் கூடிய பழைய நூல்களும் தமிழில் உண்டு என்கிறார்.

இத்தகைய ஆராய்ச்சியாளர்கள் உண்மை உணராமல் தவறு செய்தனர் என்று கூறுவதைவிட, உண்மை உணர முடியாமல் தவறினால் என்றும், உண்மை உணர்வதற்கு வேண்டிய உறுதுணைகள் அவர்களுக்கு வாய்க்கவில்லை என்றும் கூறலாம். தமிழ்நாட்டுத் தமிழ் அறிஞர்களின் செல்வாக்கின்மையும் சோர்வும், அறிஞர் சிலருடைய பிறமொழி மோகமும் புறக்கணிப்பும் இத்தவறுகளுக்குக் காரணம் எனலாம்.

## ஆரிய மொழியினம்

**வரலாற்றுக் கருத்து**

எந்த இருவகை மொழிகளையும் ஆராய்ந்து அவற்றின் ஒற்றுமை வேற்றுமைகளைக் காண்பதில் ஒரு தீமையும் இல்லை. ஒரு கால் சில உண்மைகள் அவற்றால் விளங்க, அவை ஒரு சில நன்மை பயத்தலும் கூடும். ஆனால், இருவகை மொழிகளுக்குள் சில வகையில் ஒற்றுமை கண்ட அளவிலேயே, இம்மொழி அம்மொழியிலிருந்து பிறந்தது. என்று முடிவு செய்தல் பொருந்தாது. இம்மொழி பேசும் மக்கள் அம்மொழி பேசும் மக்களோடு ஓரினத்தவர் என்றோ, அவர்கள் இவர்களிடமிருந்து பிரிந்த கூட்டத்தினர் என்றோ

முடிபு செய்தல், சிறிதும் பொருந்தாது. சித்திய மொழியினத்தோடு திராவிட மொழியினத்திற்கு உள்ள ஒற்றுமைகளைக் கண்ட கால்டுவெல், அவ்வளவில் விடாமல், திராவிடர்கள் ஆரியர்களோடு நடு ஆசியாவில் இருந்து பிறகு இந்தியாவிற்கு வந்தவர்கள் என்றும். வரும் வழியில் தூரனியருடன் ஒன்றாக இருந்து பிறகு பிரிந்து வந்தவர்கள் என்றும் சில வரலாற்றுக் கருத்துக்களை வெளியிடுகிறார். இவை உண்மை எனக் கொள்வதற்கு இடம் இல்லை.

திராவிடர் ஆரியர்களோடு ஓரினமாக இருந்தவர்கள் என்பதற்குக் கால்டுவெல், திராவிட மொழிகளுக்கும் ஆரிய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளைச் சான்று காட்டுகிறார். நடு ஆசியாவிலிருந்தபோது இவ்வாறு ஒன்றுபட்டிருந்து, பிறகு பிரிந்து துரானிய உக்ரிய மக்களோடு ஒன்றாக இருந்தனர் என்பதற்குச் சித்திய மொழியுடன் காணப்படும் ஒற்றுமைக் கூறுகளைச் சான்று காட்டுகிறார். ஆரிய உறவு மிகப் பழையது. ஆகையால் ஒற்றுமைக் கூறுகள் சிலவாக உள்ளன என்றும், சித்திய உறவு அதற்கு அடுத்து நெடுங்காலம் நிலவியது ஆகையால் அவ்வகையான ஒற்றுமைக் கூறுகள் பலவாக உள்ளன என்றும் கூறுகிறார். ஆயின், இவற்றைக் கொண்டு திராவிடர் ஆரியரில் ஒரு கிளையாக இருந்து பிரிந்து, பிறகு துரானியரிடமிருந்து பிரிந்தவர் என்று கூறல் இயலாது.

**உண்மை எது?**

இதே சான்றுகளை வைத்துக்கொண்டு நேர்மாறாகக் கூறுவதற்கும் இடம் உண்டு. ஸ்லேட்டர் கொள்கைப்படி கடல் கொண்ட லெமூரியா அல்லது குமரி நாட்டில் மக்கள் முதலில் தோன்றினர் என்றும், கடல்கோள் நேர்ந்தபோது ஒரு பிரிவினர் குமரிமலையின் வடபுறத்தே (இன்றைய தென்னிந்தியாவில்) தங்க, மற்றொரு பிரிவினர் மத்தியதரைக் கடற்பகுதியைச் சார்ந்தது ஐரோப்பாவில் பல

இடங்களில் குடியேறி ஆரியர் ஆயினர் என்றும், இன்னொரு பிரிவினர் ஆசியாவில் பல இடங்களில் குடியேறித் துரானியர் அல்லது மங்கோலியர் அல்லது சித்தியர் எனப்பட்டனர் என்றும் கூற இடம் உள்ளது. அவ்வாறு கொண்டால் திராவிட மொழிகளுக்கும் ஆரிய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக் கூறுகளின் காரணமும் விளங்குகிறது. திராவிட மொழிகளுக்கும் சிந்திய மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமைக்கு உரிய காரணமும் விளங்குகிறது. கால்வின் கெபார்ட் என்பவரின் கருத்தும் இதற்கு அரண் செய்கிறது. ஆரிய மொழியின் பல கிளைகளும், துரானிய மொழிகளின் கிளைகளும் ஒரு மொழியிலிருந்தே தோற்றம் கொண்டன என்றும், அந்த அடிப்படை மொழி வங்காளக் குடாக்கடலில் கரையருகே தோன்றியிருக்க வேண்டும் அல்லது, இப்போது தென்னிந்தியாவில் உள்ள திராவிட மக்களின் முன்னோர் பேசிய ஒரு கிளை மொழியிலிருந்து தோன்றியிருக்க வேண்டும் என்றும் அவர் கருதுகிறார். இன்று திராவிட மொழியில் பல கிளை மொழிகள் இருத்தலைப் போலவே அன்று இருந்திருக்க வேண்டும் என்றும் ஆரிய மொழியும் துரானிய மொழிகளும் பழந் திராவிட மொழியின் வெவ்வேறு கிளை மொழிகளிலிருந்து வளர்ந்தன என்றும் கூறுகிறார்.

திராவிடர் வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கு வரவில்லை என்றும், அவர்கள் இந்த நாட்டின் பழம்பெருங் குடி மக்கள் என்றும் கிரியர்ஸன் வலியுறுத்துகிறார்.

**மக்கள் வரலாறு**

மக்கள் முதன் முதலில் எங்கே தோன்றினார்கள், பிறகு எங்கெங்குச் சென்று தங்கினார்கள் என்ற ஆராய்ச்சி பல அறிஞர்களின் முயற்சியை வீணாக்கியுள்ளது. ஒவ்வொருவரும் தம்தம் மனப்போக்கிற்கு ஏற்ப முடிவுகள்

கொள்ளவும், கொள்ளும் முடிபுகளும் ஏற்ற காரணங்களைத் தேடிக் காணவும் இத்துறை இடம் தருகிறது. ஆராய்ச்சிக்கு எட்டாத ஒன்றை எட்டிப் பிடித்துவிட்டாற் போன்ற மயக்கத்தையும் இது ஊட்டுகிறது. தென்னிந்திய மக்களின் வரலாற்றில் மயக்கம் மட்டும் அல்லாமல் சிக்கலும் மிகுதியாக உள்ளது. என்ன முயன்றாலும் சிக்கல் தீர்தல் அரிதாக உள்ளது என்கின்றனர் அறிஞர்.

வால்கா நதிக்கரையில் பிறந்த ஒரு குழந்தைக்கும் காவிரிக்கரையில் பிறந்த ஒரு குழந்தைக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்வதில் தீங்கு ஒன்றும் இல்லை. அறிவுக்கு இன்பமான பொழுதுபோக்கு எனக்கொண்டு அத்தகைய ஆராய்ச்சி செய்யலாம். ஆனால், அந்த ஆராய்ச்சியின் முடிவாகக் காணப்படும் சில ஒற்றுமைகளைக் கொண்டு, இந்தக் குழந்தையும் அந்தக் குழந்தையும் ஒரே தாய்க்குப் பிறந்தவை என்றோ, ஒரே தந்தைக்குப் பிறந்தவை என்றோ விரைந்து முடிபு செய்தல் தீங்காகும். ஒருவர் இத் தீமையைச் செய்யின், மற்றொருவர், தேம்ஸ் நதிக்கரையில் உள்ள இன்னொரு குழந்தையைத் தேடி அதற்கும் இதற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்து, வேறு சில பொருந்தா முடிபுகள் செய்வார். இன்னொருவர் இன்னொரு வகை முடிவுகள் செய்ய, இவ்வாறே எல்லையில்லா வகையில் கருத்துக்கள் வளர, அவற்றால் மக்களிடையே வேறுபாடுகள் பெருக வேண்டாத பூசலுக்கும் பிணக்குக்கும் வித்திடலாகிறது.

**ஒற்றுமை சில**

அறிஞர் போப் தம் நூல் ஒன்றில் திராவிட மொழிகள் ஆரிய மொழிகளோடு நெருங்கிய உறவு உடையன எனக் கூறி, அதற்கு ஏற்ற காரணங்களைக் காட்ட முயன்றுள்ளார்.

உறவே இல்லாதவை எனக் கருதப்படும் சீனமொழி ஆரிய மொழி இரண்டையும் ஒப்பிட்டு, அவற்றிடையே உறவு காட்டியுள்ளார் அறிஞர் **குஸ்தர் ஷ்லேகெல்** என்பவர். இருவகை மொழிகளுக்குள் ஒற்றுமை காணப்படின், அந்த ஒற்றுமை இயற்கையாக அமைந்த ஒற்றுமையாக இருத்தல் கூடும் எனக் கொள்ளலாம். போதிய சான்றுகள் இருந்தால் அவற்றால் விளங்கக்கூடிய மக்கள் வரலாற்றுப் பகுதியை எடுத்துச் சுட்டலாம். போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாத போது, படைப்பில் மனிதர் அனைவரும் ஒரே வகையானவர் என்னும் பொதுவான பேருண்மையை இந்த ஒற்றுமைப் பகுதிகள் காட்டுகின்றன என்று கூறி அமைதல் நல்லது.

**வரலாற்றில் குழப்பம்**

இந்திய நாட்டின் வரலாற்றை எழுதியவர்கள் பலர், அவர்களிடையே நிலவும் கருத்து வேறுபாடுகளும் பல ஆயின், அவர்கள் அனைவரும் கருத்து ஒருமித்துக் குறிப்பிடுவது ஒன்று உண்டு ஆயின், அது இதுவாகும். ஆரியர் நடு ஆசியாவிலிந்து இந்தியாவிற்குள் புகுந்தனர். அப்போது இந்தியாவில் வாழ்ந்திருந்த திராவிடருடன் கலந்தனர். இந்த ஒரு செய்தியை மட்டுமே வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் ஒரே வகையாய்க் கூறியுள்ளனர். ஆயின், வந்த ஆரியரையும் இருந்த திராவிடரையும் ஒப்பிட்டுச் சீர்தூக்கி உயர்ந்தவர் யார் தாழ்ந்தவர் யார் என்பதில் கருத்து வேறுபாடு பெருகப் பலவாறு எழுதியுள்ளனர். திராவிடருடன் போர் நிகழ்த்தி வெற்றி பெற்றுக் கலந்தனரா, அல்லது அன்பு முறையில் அமைதியாக வாழத் தொடங்கிக் கலந்தனரா என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. வந்த ஆரியர்கள் அப்போது அறிந்திருந்த நாகரிகம் எத்தன்மையானது? இருந்த திராவிடரிடமிருந்து கற்றவை யாவை? என்று விளக்குவதிலும் வேறுபாடுகள் பல உள்ளன.

தம்மை உயர்வாகக் கருதிக்கொண்டு பிறரைத் தாழ்த்தும் மனப்பான்மை எல்லாரிடமும் உள்ளது. எனினும் ஆரியருக்கு அது மிகுதி எனலாம். அவர்கள் சென்று தங்கிய இடங்களில் எல்லாம், அங்குள்ளவர்களோடு கலந்து பழகி அவர்களின் நாகரிகப் பழக்க வழக்கங்களையும் கலைகள் முதலியவைகளையும் தம்முடையனவாக ஆக்கிக்கொண்டு, பிறகு உயர்வெல்லாம் தமக்கே என்றும், அங்கு வாழ்வோர் அனைவரும் காட்டுமிராண்டிகள் என்றும் தூற்றும் இயல்பினராக விளங்கினர். சென்ற நூற்றாண்டில் வரலாறு எழுதத் தொடங்கியவரும், அது உண்மை எனக் கருதி மயங்கி அவ்வாறே நூல்களும் எழுதி விட்டனர். நடுநிலை பிறழ்ந்து வரலாற்று ஆசிரியர்களின் மயங்கிச் செய்த அத் தவறுகள், பலவகைப் பூசல்களுக்கும் பிளவுகளுக்கும் பிணக்குகளுக்கும் போர்களுக்கும் காரணமாய் நின்றன. உலகைப் போரால் கலக்கிய ஹிட்லரின் உள்ளத்தே இந்த மயக்கத்தால் ஏற்பட்ட வெறி நிறைந்திருந்தது. இன்றும் பல நாடுகளின் உட்குழப்பங்களுக்கு இது காரணமாக உள்ளது.

ஐரோப்பியர்கள் எழுதிய வரலாறுகளில் குழப்பத்திற்கும் பூசலுக்கும் வித்துகள் பல இருத்தலை உணர்ந்த கவிஞர் ரவீந்த்ரநாத் தாகூர், வந்த ஆரியரைவிட இருந்த திராவிடர் எவ்வகையிலும் தாழ்ந்தவர் அல்லர் என்றும் திராவிட நாகரிகத்துடன் கலப்புற்ற காரணத்தாலேயே இன்றுள்ள இந்து நாகரிகம் என்பது வளம் மிகுந்ததாக உள்ளது என்றும், மெய்யுணர்வுத் துறையில் சிறந்து விளங்காவிட்டாலும் திராவிடர்கள் இசைக்கலை கட்டிடக்கலை முதலிய பலவகைக் கலைகளில் வல்லவர்களாக விளங்கினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**ஆரிய, திராவிட நாகரிகம்**

இந்த உண்மையை விளக்க வேறு பல சான்றுகள் தேவையில்லை. இன்று ஆரிய நாகரிகம் என்று போற்றப்படுகின்றவை. உண்மையாகவே

ஆரியருக்கு உரியவை எனின், இந்தியாவுக்கு வந்த ஆரியர் அவற்றை அறிந்திருந்தது போலவே, ஐரோப்பாவில் வாழ்ந்த ஆரியரும் அவற்றை அறிந்திருக்க வேண்டும். கிரேக்கரும் ரோமரும் மற்ற ஐரோப்பியரும் பழங்காலத்துப் பாரசீகரும் அவற்றை அறிந்திருக்க வேண்டும். எந்த எந்தப் பகுதிகள் ஐரோப்பிய ஆரியர் அறியாமல் இந்திய ஆரியர் மட்டும் அறிந்திருந்தனவாகக் கூறப்படுகின்றனவோ, அந்த அந்தப் பகுதிகள் ஆரியருக்கு மட்டும் உரியவை அல்ல என்றும், இந்திய நாட்டுத் திராவிடருக்கும் உரியவை என்றும் கூறத்தகும். அவ்வாறு, ஆராய்ந்தால் இன்று ஆரிய நாகரிகக் கூறுகளாகப் போற்றப்படும் இந்திய மருத்துவக்கலை, போர்க்கலை, ஆடை, அணிகலன், உணவு, திருமணம், இல்வாழ்க்கை முறை முதலியன ரோமரும், கிரேக்கரும், பாரசீகரும் மற்ற ஆரியரும் அறியாதவை. ஆகையால் அவை திராவிடருக்கே உரியவை என்று கொள்ள நேர்கிறது. இவ்வாறே மொழித் துறையிலும், சில ஒலிகளும் சொல்லமைப்பு முறைகளும் இலக்கணக்கூறுகளும் இலக்கியத் துறைகளும் ஆரியர் திராவிடரிடமிருந்து கற்றவைகளே தவிர. ஆரியருக்கே உரியவை அல்லை. ஆரியரின் உரிமை என்று கருதப்பட்டு வரும் சமயத் துறையிலும் சார்லஸ் எலியட் என்பவர் இத்தகைய கருத்தைக் கொள்கிறார். **இந்திய நாட்டுச் சமயம்** என இன்று கருதப்படுவது ஆரியச்சமயம் என்பதைவிடத் **திராவிடச் சமயம்** என்பது கூறுவதே மிகப் பொருந்தும் என்றும், ஒருபுறம் காணலாம் சிறிது நடுநிலை நின்று காணின் இந்த உண்மை விளங்கும் என்றும் அவர் கூறுகிறார். பாரசீகத்திலோ, கிரேக்க நாட்டிலோ வேறு ஆரிய நாடுகளிலோ இத்தகைய சமய நெறி இல்லாதிருத்தலை அவர் சான்றாக எடுத்துக்காட்டுகிறார். அறிஞர் எஸ்.கே. சட்டர்ஜியும் டாக்டர் ராதாகிருஷ்ணனும் இச் சார்பான கருத்தை எடுத்துரைக்கின்றனர்.

இவ்வாறு ஆராயின், இன்று வடமொழியில் உள்ள பல வகை நூல்களையும் கொண்டு அவை அனைத்தும் ஆரிய நாகரிகத்தின் பெருமையைக் காட்டுவனவாகக் கொள்ளல் இயலாது. அதற்கு மாறாக, அக்காலத்தில் வந்த மக்கள் இருந்த மக்களின் நாகரிக வாழ்வில் கண்டவற்றை எல்லாம் கண்ணும் கருத்துமாகப் போற்றிப் பற்பல நூல்களாக எழுதி வைத்த முயற்சிச்சிறப்பையே போற்ற வேண்டும். இவ்வாறு எழுத்து வடிவில் பல நூல்களைப் பெற்று வடமொழி சிறப்பெய்தி பிறகு இருந்த திராவிட மக்களில் அறிஞராயினோரும் அவைகளை அம் மொழியிலேயே எழுதி வைத்துப் போற்றினர். எனவே வந்த மக்களின் விடா முயற்சியையும் இருந்த மக்களின் கவலையற்ற பெருந்தன்மையையும் போற்றுதல் வேண்டுமே அன்றி, வட மொழியில் உள்ள நூற் பெருக்கைக் கண்டு ஆரிய நாகரிகத்தின் பெருமையை அளத்தல் ஆகாது.

**ஆரியம் திராவிடம் ஒற்றுமைக் கூறுகள் வேற்றுமைக் கூறுகள்**

இனி இவை எல்லாவற்றையும் விடுத்து, ஆரியமொழிகளுக்கும் திராவிட மொழிகளுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கால்டுவெல் கூறுமாறு காண்போம்.

**ஒற்றுமைக் கூறுகள்**

1. இருவகை மொழிகளிலும் படர்க்கைப் பெயரிலும் வினையிலும் பால்பாகுபாடு இருக்கிறது.
2. கிரேக்க மொழியில் னகரம் உடம்படுமெய்யாக உள்ளது, தெலுங்கிலும் உள்ளது.
3. படர்க்கை ஒன்றன்பால் விகுதியாக இருவகை மொழிகளிலும் ‘த’ உள்ளது.

4. பலவின்பால் விகுதி திராவிட மொழிகளில் ‘அ’ லத்தீன் மொழியிலும் அதுவே.
5. இருவகை மொழியிலும் சேய்மைச் சுட்டு அகரமாகவும் அண்மைச்சுட்டு இகரமாகவும் உள்ளன.
6. ‘த்’ என்ற இடைநிலை திராவிட மொழிகளில் இறந்த காலம் உணர்த்துதல் போலவே, பாரசீக மொழியிலும் அதுவே அக்காலத்தை உணர்த்துகிறது.
7. வினைப்பகுதியில ஒரு மெய் இரட்டித்து இறந்த காலம் உணர்த்தல் திராவிட மொழிகளிலும் உள்ளது. ஆரிய மொழிகளிலும் உள்ளது.
8. வினைப்பகுதியில் முதல் உயிர் நீண்டு தொழிற் பெயர் ஆதல் இருவகை மொழிகளிலும் உள்ளது.

**வேற்றுமைக் கூறுகள்**

1. திராவிட மொழிகளில் உள்ள திணைபால் பாகுபாடு சிறந்தது. ஆரிய மொழிகளின் பால்பாகுபாடு செயற்கையானது, கற்பனையாக அமைந்தது. ஆண் பெண் அலி என்ற பால்பாகுபாடு ஆரிய மொழிகளில் உள்ளது. பொருள்களின் தன்மைக்கும் அவற்றினை உணர்த்தும் சொற்களின் பாலுக்கும் தொடர்பே இல்லை.
2. தமிழில் கை என்பது ஆண்பாலும் அன்று, பெண்பாலும் அன்று, அஃறிணையில் ஒருமை அல்லது பன்மை எனப்படும். ஆனால் அப்பொருள் உடைய வடசொல்லாகிய கரம் என்பது வடமொழியில் ஆண்பால், மனைவி, இல்லாள் என்பவை தமிழில் பெண்பால். இப்பொருள் உணர்த்தும் வடசொற்களுள் தாரம் என்பது ஆண்பால், களத்திரம் என்பது

அலிப்பால், இத்தகைய விந்தையான பால்பாகுபாடு எந்தத் திராவிட மொழியிலும் இல்லை.

3. திராவிட மொழிகளில் பெயர்ச்சசொற்களின் பின் வேற்றுமையுருபுகள் சேர்ந்து உருவம் திரியாமலே வேற்றுமைப் பொருள்களை உணர்த்தும், அந்த உருபுகள் ஒருமை பன்மை வேறுபாடு இன்றி வழங்குகின்றன. ஆரியமொழிகளில் உருபுகள் பெயர்ச் சொற்களிலிருந்து பிரிக்க முடியாதவாறு பிணைந்து நிற்கின்றன. ஒருமைக்கும் பன்மைக்கும் வெவ்வேறு உருபுகள் உள்ளன.
4. திராவிட மொழிகளில் அஃறிணைப் பெயர்களுடன் பன்மை விகுதிகள் பெரும்பாலும் சேர்ந்து வழங்குவதில்லை. ஆரிய மொழிகளில் பெரும்பாலும் சேர்ந்தே வழங்குகின்றன.
5. திராவிட மொழிகள் பலவற்றிலும் நான்காம் வேற்றுமை உருபு, கு,கி. கெ: கிரீக், லத்தீன் பிரெஞ்சு, ஜெர்மன் சமஸ்கிருதம் முதலிய எந்த ஆரிய மொழிகளிலும் இந்த உருபு இல்லை.
6. ஆரிய மொழிகளில் முன்னுருபுகள் (Prepositions) வழங்கும் இடங்களில், திராவிட மொழிகளில் பின்னுருபுகளாக இடைச்சொற்கள் பயன்படுகின்றன.
7. திராவிட மொழிகள் பண்புப் பெயரை அடையாக வழங்குவதற்கு உரிய இடத்தில் அதன் பெயரெச்ச வடிவை வழங்குகின்றன. இம்முறை ஆரிய மொழிகளில் இல்லை.
8. திராவிட மொழிகளில் முன்னிலையாரைக் கொள்ளுவது, தள்ளுவது என இருவகையான தன்மைப் பன்மைகள் உள்ளன. ஆரிய மொழிகளில் இந்த அமைப்பு இல்லை.

9. திராவிட மொழிகளில் செயப்பாட்டு வினைக்குத் தனிவடிவம் இல்லை. படு என்னும் துணைவினையே அதனை அமைக்கிறது. ஆரிய மொழிகளில் அதற்குத் தனிவடிவம் உள்ளது.
10. ஆரிய மொழிகள் பல, வினைகளுக்கு இடையில் இணைப்பு இடைச் சொற்களைப் பயன்படுத்துகின்றன. திராவிட மொழிகள் வினையெச்சங்களைப் பயன்படுத்துகின்றன.
11. திராவிட மொழிகளில் உடன்பாட்டிற்கும் எதிர்மறைக்கும் வெவ்வேறு வினைவடிவங்கள் உள்ளன. ஆரிய மொழிகளில் இவ்வாறு இல்லை.
12. ஆரிய மொழிகளில் இணைப்பு இடப்பெயர் உள்ளது. திராவிட மொழிகளில் அதன் இடத்தில் பெயரெச்சமும் வினையாலணையும் பெயருமே உள்ளன.
13. திராவிட மொழிகளில் தழுவும் தொடர்கள் தழுவப்படும் தொடர்களுக்கு முன் அமைதல் இயல்பாக உள்ளது. ஆரிய மொழிகளில் இவ்வாறு இல்லை.

## திராவிட மொழியினம்

### திருந்தியன, திருந்தாதன

திராவிட மொழிகளைத் திருந்திய மொழிகள் என்றும் திருந்தாத மொழிகள் என்றும் (Cultivated Languages and Uncultivated languages) இருவகையாகப் பாகுபாடு செய்கிறார் கால்டுவெல். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு, குடகு என்னும் ஆறும் இலக்கியம் பெற்ற மொழிகள்.

தோத, கோத, படக, கோலமி, பார்ஜி, நாயகி, கோந்தி, கூ, குவி, கோண்டா, மால்டா, ஒரொவன், கட்பா, குருக், என்பவை எழுத்தும் இலக்கியமும் அற்றனவாய் உள்ள திராவிட மொழிகள்.

**தமிழ்**

**'வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுகம்'** என்று பழங்காலத்திலேயே தமிழ் வழியே நாட்டின் எல்லை கூறப்பட்டுள்ளது. இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப் பாணத்திலும் வேறு சில பகுதிகளிலும் தமிழ் பேசப்பட்டு வருகிறது. பினாங்கு, சிங்கப்பூர் முதலிய கிழக்குத் தீவுகளின் பகுதிகளிலும் தமிழ் மிகப் பலரால் பேசப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தமிழ் பேசுவோரின் தொகை ஏறக் குறைய மூன்று கோடி.

தெலுங்கர்களும் கன்னடர்களும் தமிழை அரவம் என்பர். தெலுங்கர் தமிழரை அரவாளு என்பர். அறம் உடையவர் அறவர், அல்லது அருவா நாட்டினர் அரவர், அல்லது ஒலிமிக்கவர் அரவர் எனப் பல காரணங்கள் அப்பெயருக்குக் கூறப்படும்.

திராவிட மொழிகளில் பிறமொழிக் கலப்புக் குறைந்த மொழி, இலக்கிய வளம் மிகுந்த மொழி இதுவே.

**தெலுங்கு**

தமிழ்நாட்டின் வடக்கே உள்ள ஆந்திர நாட்டு மொழி இது. ஹைதராபாத்திலும் பலர் தெலுங்கு பேசுகின்றனர். தெலுங்கு பேசுவோரின் தொகை மூன்று கோடிக்குச் சிறிது மிகுதி.

வடமொழியாளர் தெலுங்கை ஆந்திரம் என்று குறிப்பிடல் வழக்கம். ரிக்வேத ஐத்ரேய பிராமணம் என்ற வடநூல் ஆந்திரரை நாகரிகமற்றவர் என்று கூறுகிறது. ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவுக்கு வந்த ஹியூன் சியாங் ஆந்திர நாட்டில் வேறொரு மொழி வழங்குவதைக் குறிப்பிட்டுள்ளார். பழந்தமிழிலக்கியம்

ஆந்திரரை வடுகர் என்றும், அந்நாட்டை மொழி வேறுபட்ட நாடு என்றும் கூறுகிறது.

தேன் போன்ற இனிமை உடைய மொழி என்னும் பொருளில், தெனுகு > தெலுகு > தெலுங்கு என்று பெயரமைந்திருக்கலாம். கலிங்கம் முதலான மூன்று லிங்கக் கோயில்களை உடையது என்னும் பொருளுடைய சொல்லாகிய **திரிலிங்கம்** என்பது திரிந்து தெலுங்கு ஆயிற்று என்பர் ஒரு சிலர்.

இதன் எழுத்துமுறை தேவநாகரியை ஒட்டி அமைந்தது. தேவநாகரி எழுத்தோடு திராவிட மொழிக்கு இன்றியமையாத றகர எழுத்தும் பெற்றுள்ளது.

வடமொழி அறிஞர்களாகிய நன்னயப்பட்டர், முதலானோர் இதற்கு இலக்கியம் எழுதி வளர்த்தமையால், வடமொழிச் சார்பு மிகுதியாயிற்று. **நன்னயரே தெலுங்கு மொழியின் முதல் புலவர்** எனப் போற்றபடுவர். அவர் வடமொழியின் பாரதத்தைத் தெலுங்கில் மொழி பெயர்த்தார். அம்மொழிபெயர்ப்பில் நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காடு வடசொற்கள் கலந்து எழுதினார். அவர்க்குப் பின் வந்தவர்கள் வடசொற்கள் குறைந்த நடையையே போற்றினர். அதை ‘ஜானு தெலுங்கு’ என்று கூறி வேறுபடுத்தினர். ஆயினும் வடமொழி அறிஞர்களின் முயற்சி தொடர்ந்து நடைபெற்ற காரணத்தால், அதுவே வெற்றி பெற்றது. அதன் பயனாக, இன்று நன்னயர் போன்றாரின் தெலுங்கே மக்களுக்கு விளங்கும் மொழியாகிவிட்டது. மற்றது விளங்குவது அரிதாகி விட்டது.

**கன்னடம்**

மைசூர் மாநிலத்திலும் மராத்தி நாட்டின் தென் பகுதியிலும் பேசப்படும் மொழி இது. நீலகிரியில் உள்ள படகர் என்பவர் பேசுவது பழைய கன்னடம், கன்னடம் பேசும் மக்களின் தொகை ஏறக்குறைய ஒன்றரைக் கோடி .

கர்நாடகம் திரிந்து கன்னடம் ஆயிற்று என்றும் அது வடச்சொல் என்றும் கூறுவர். வடமொழி மோகம் மிக்கவர். டாக்டர் குண்டர்ட் என்பவர் கரு+நாடு+அகம், கருநாடகம் என்ற தமிழ்ச் சொல்லின் திரிபு என்பர்.

சில நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த கன்னடம் தமிழ் போலவே அமைந்திருக்கிறது. அது ஹள கன்னடம் (பழங் கன்னடம்) எனப்படும். இன்று உள்ளது ஹொச கன்னடம் எனப்படும்.

இது **எழுத்து முறை தெலுங்கை ஒட்டி அமைந்ததாகும்.** இதுவும் தெலுங்குபோல் வடமொழிச் சொற்களை மிகுதியாகப் பெற்றுள்ளது.

**மலையாளம்**

தமிழ்நாட்டின் மேற்குப்பகுதியாகிய சேர நாட்டின் மொழி இது. திராவிட மொழகளின் வினைகளில் உள்ள பால் காட்டும் விகுதிகள் மலையாள வினைகளில் இல்லை. மற்றத் திராவிட மொழிகளுக்கும் மலையாளத்திற்கும் உள்ள பெரிய வேறுபாடு இது. வருகிறேன், வருகிறான், வருகிறது முதலிய பல வினைவாய்ப்பாடுகளுக்கு ஈடாக மலையாளத்தில் பால்விகுதி அற்ற ‘வருந்நு’ என்பது ஒன்றே உண்டு.

இதனைத் தமிழோடு ஒத்த இனமொழி என்று கொள்வதை விட, தமிழின் (மிகத் திரிந்த) கிளைமொழி என்று கொள்வது பொருந்தும் எனக் கருதுகிறார்

கால்டுவெல். தொடக்கத்தில் தமிழின் தங்கையாக அல்லாமல், மகளாக இருந்த மொழி என்கிறார். அதற்குக் காரணம் உள்ளது. சில நூற்றாண்டுகளுக்கு முன் சேரநாட்டில் தமிழே பேச்சுமொழியாகவும் இலக்கிய மொழியாகவும் இருந்து வந்தது. **சிலப்பதிகாரம், பதிற்றுப் பத்து** என்னும் நூல்களும் புறநானூற்றில் பல பாடல்களும் சேரநாட்டுத் தமிழ் ஆகும். அந்தத் தமிழே, இலக்கியத் தொடர்பு குறைந்தமையாலும், சோழ பாண்டிய நாட்டுத் தமிழோடு உறவு குறைந்தமையாலும் வடமொழிச் சார்பு மிகுந்தமையாலும் மிகமிகத் திரிபு உற்று வேறொரு மொழியாக வளர்ந்து விட்டது. அவ்வாறு வளர்ந்ததே மலையாளம். அது புதிதாக வந்த வேற்று மொழி அன்று. அந்நாட்டுத் தமிழ் திரிந்த திரிபே ஆதலின் கிளைமொழி எனல் பொருந்தும்.

அதுபற்றித் தமிழைத் தாய் என்றும், மலையாளத்தை மகள் என்றும் கூறுவர். ஓர் இனமொழிகளுள் ஒன்றைத் தாய் என்றும், மற்றவற்றை அத்தாயிடமிருந்து பிறந்தவை என்றும் கூறுவதை அறிஞர் சிலர் கடிகின்றனர். ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழி பிறப்பதில்லை என்பதும், மொழியியலில் தாய்மகள் என்றெல்லாம் பேசுவதில் பொருளில்லை என்பதும் வெண்ட்ரியே என்னும் அறிஞரின் கருத்தாகும்.

ஒரு நாட்டின் கிழக்குப்பகுதியில் மொழி பழையபடியே இருக்க மேற்குப்பகுதியில் வழங்கும் மொழி மிக வேறுபட்டுச் சென்று ஒரு தனிமொழிபோல் தோன்றுமாயின், இது முன்னதன் மகள் என்று சொல்லப்படுவது உண்டு. ஆயின், அது அங்கு வழங்கிய பழைய மொழியின் திரிபே தவிர, அதிலிருந்து பிறந்த இளங்குழந்தை ஆகாது. ஆகவே பழைய தமிழ் தாய் என்றும், இன்றைய தெலுங்கு கன்னடம் முதலியனை மகள் என்றும் கூறுவது பொருந்தாமல் போகிறது. பழைய தமிழ் வேங்கடத்திற்கு வடக்கே ஒரு வகையாகத் திரிந்து தெலுங்கு ஆயிற்று என்றும், மேற்கே மற்றொரு

வகையாய்த் திரிந்து கன்னடம் ஆயிற்று என்றும் சேர நாட்டில் இன்னொரு வகையாய்ப் பிற்காலத்தில் திரிந்து மலையாளம் ஆயிற்று என்றும் கூறுவதே மொழியியலுக்கும் பொருந்திய கூற்று ஆகிறது.

இவ்வாறே ஆரியர் வருவதற்கு முன் இந்தியா முழுவதும் இருந்த பழைய மக்கள் பேசிய மொழிகளையும் தமிழ் என்று கூறுவதைவிட, வேறு பெயரால் வழங்குவது தகும் என்பது அறிஞர் கருத்து. மொஹெஞ்சதாரோ நாகரிகத்தின் மக்கள் பேசின அந்தப் பழைய மொழியைத் திராவிட மொழி என்று கூறாமல் பழந்திராவிட மொழி என்பது பொருந்துவதாகக் கருதுகிறார் அறிஞர் ஹீராஸ்.

காலப் போக்கில் வடமொழிச் சொற்கள் பல கலந்து மலையாளம் மிக வேறுபட்டுவிட்டது. மலையாத்தின் பழைய இலக்கியம் தமிழிலக்கியம் போலவே உள்ளது. தமிழர்க்கு விளங்கும் மொழியாகவே பழைய மலையாளம் உள்ளது. மலையாளத்தின் முதல் இலக்கியமாகிய இராமசரிதம் தமிழ் ஒலியாலாகிய தமிழிலக்கியம் போலவே உள்ளது. பழைய மலையாள இலக்கியத்தில் தமிழ் எழுத்துக்களாகிய பன்னிரண்டு உயிரும் பதினெட்டு மெய்யுமே மிகுதியாக உள்ளன. கிரந்த எழுத்தை ஒட்டி மலையாளத்திற்கு எழுத்துக்கள் அமையவே பிற்காலத்தில் மற்ற ஒலிகளும் மிகப் பயின்று கலப்பற்றன. வடசொற்களும் கணக்கின்றிக் கலந்தன. இந்த மாறுதல் எல்லாம் பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டவைகளே ஆகும்.

ஏறக்குறைய ஒரு கோடி மக்கள் இன்று மலையாளம் பேசுகின்றனர்.

**துளு**

இதனைத் திருத்திய மொழி எனக் கால்டுவெல் பாகுபாடு செய்துள்ள போதிலும், இதற்குக் கிரந்தத்தை ஒட்டிய எழுத்துமுறை உண்டு. தனி இலக்கிய வளம் இல்லை. கிறிஸ்துவப் பாதிரிமார்களே முதல் முதலில் இம் மொழியில்

நூல் எழுதி அச்சிட்டனர். அவர்கள், கன்னட எழுத்துக்களிலேயே அவற்றை எழுதி அச்சிட்டனர்.

மைசூர் மாநிலத்தை அடுத்து ஓடும் கல்யாணபுரி, சந்திரகிரி என்னும் இரண்டு ஆறுகளுக்கு இடையே உள்ள பகுதியில் வாழும் மக்கள் இம்மொழி பேசுகின்றனர். அவர்களின் தொகை எழுநூறாயிரம்.

பிரிகெல் என்னம் ஐரோப்பிய அறிஞர் இதற்கு முதல்முதலாக இலக்கணம் எழுதினார். கன்னடத்திற்கும் இதற்கும் நெருங்கிய உறவு இருப்பதாக அவர் குறித்துள்ளார்.

**குடகு**

இதற்கு எழுத்தும், இலக்கிய வளமும் இல்லை. டாக்டர் மோக்லிங் என்னும் ஜெர்மனி அறிஞர் இதனை ஆராய்ந்துள்ளார். இது கன்னடம் பேசும் நாட்டை அடுத்திருந்த போதிலும், தமிழோடும் மலையாளத்தோடும் உறவு உடையது என்கிறார் அவர். இது பழங் கன்னடத்திற்கும் துளுவிற்கும் இடைப்பட்டது என்கிறார் கால்டுவெல். மேஜர் சொல் என்பவர், இதன் இலக்கணத்தையும் சில பாட்டுக்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். இதைப் பேசுவோர் ஏறக் குறைய ஐம்பதாயினாயிரவர்.

**தோத மொழி**

நீலகிரி மலையில் வாழும் பழங்குடி மக்களின் மொழி இது. அவர்கள் நாகரிகம் குறைந்தவர்கள். இப்பொழுது அரசாங்க முயற்சியின் பயனாகக் கல்வியறிவு பெற்றுத் தீயபழக்கங்களை விட்டுவருகின்றனர். இவர்களின் தொகை ஏறக்குறைய எழுநூறு.

**கோத மொழி**

இம்மொழி பேசுவோர் நீலகிரியில் வாழும் நாகரிகம் குறைந்த மக்களே. இவர்களின் தொகை ஆயிரத்து முந்நூறு.

**படக மொழி**

இம் மொழி கன்னடத்தின் கொச்சைக் கிளை மொழி போல் உள்ளது. நீலகிரி மலையில் வாழ்வோர் பேசுவது.

**கோந்தி மொழி**

நடு இந்தியாவில் சில மலைகளிலும் காடுகளிலும் வாழும் மக்கள் இம் மொழி பேசுகின்றனர். பதினைந்து நூறாயிரம் மக்கள் இதனைப் பேசுகின்றனர்.

**கூ, குவி, கோண்ட்**

ஒரிஸாவின் குன்றுகளில் வாழும் ஐந்நூறாயிரம் மக்கள் பேசும் மொழிகள் இவை.

**கோலமி, பார்ஜி, நாய்கி**

மத்தியப் பிரதேசத்திலும் ஐதராபாத்திலும் உள்ள சிலர் பேசுவது கோலமி, அவர்களை அடுத்த இனத்தார் பேசுவன பார்ஜியும் நாய்கியும்.

**மால்டா**

வங்காளத்தில் ராஜ்மஹால் மலைகளில் வாழும் எழுபதினாயிரம் மக்கள் பேசும் மொழி இது. இம்மொழி பேசுவோர் மாலர் என்றும் இராஜ்மஹாலர் என்றும் கூறப்படுவர்.

**ஓரொவன், கட்பா, குருக்**

சோடா நாகபுரியிலும் அதன் சுற்றுப்பக்கத்திலும் வாழும் எண்ணூறாயிரம் மக்கள் பேசும் மொழிகள் இவை. பாட்ஸ்க் என்னும் பாதிரியார் ஓரொவன் இலக்கணத்தை எழுதியுள்ளார்.

இத் திருந்தா மொழிகளைப் பேசுவோர் அல்லாமல் வட இந்தியாவில் திராவிடர்களாக உள்ளவர்கள் இன்னும் சில வகையினர் உள்ளனர் என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். வங்காளத்திலும் ஒரிஸாவிலும் வாழும் பூயியர்கள், கொச்சர்கள், ஆகியோரும் திராவிடர்களே என்பர். இவர்களின் தொகை ஏறக்குறைய நாற்பது நூறாயிரம்.

**மூவிடப் பெயர்கள்**

மக்கள் முதலில் பேசிவந்த ஒலித்தொகுதியிலிருந்து தனிச் சொற்களாக முதலில் பிரித்தெடுக்க நின்றவை மூவிடப் பெயர்களாக இருக்க வேண்டும். நான் நீ முதலிய மூவிடப் பெயர்கள் மிகத் தொன்மையானவை என்பது மட்டும் அன்று. அவைகள் இயற்கை உணர்ச்சியாற் பிறப்பவை. முதலியவற்றால் விளங்கக் கூடியவை மொழி வளர்ச்சி பெற்ற பிறகு சைகை மக்களின் முன்னோர் ஒரு மொழியை வழங்கியிருக்க வேண்டும் என்று கிரியர்ஸன் கருதுகிறார்.

முண்டா மொழிகள், ஒட்டுநிலை, பற்றி அமைந்த சொற்களை உடையவை. இவற்றில் உயர்திணை அ.்றிணை என்ற திணைப்பாகுபாடு இல்லை, உயிருள்ள இல்லன என்ற பாகுபாடு உண்டு. ஒருமை இருமை பன்மை என மூவகை எண் உண்டு. வேற்றுமை உருபுகள் பெயர்ச் சொற்களுடன் சேராமல் வினைச்சொற்களுடன் சேர்கின்றன. பத்துப் பத்தாக எண்ணும் முறை இல்லாமால், இருபது இருபதாக எண்ணும் முறை உள்ளது. திராவிட

மொழிகளில் உள்ளவாறு முன்னிலையை உளப்படுத்தும் தன்மைப் பன்மையும் உளப்படுத்தாத தன்மைப்பன்மையும் வெவ்வேறாக உள்ளன. இவற்றில் எதிர்மறைவினைகள் இல்லை.

கோ்வாரி, கூர்க்கூ, ஜூவாங், சவாரா, கட்பா என இம்மொழிகள் இடந்தோறும் பலவகைப் பெயர்பெற்று வழங்குகின்றன. இவற்றைப் பேசுவோரின் தொகை ஏறக்குறைய முப்பது லட்சம்.

இவற்றிற்குப் பொதுவான எழுத்துமுறையும் இல்லை, இலக்கியமும் இல்லை.

இவ்வாறு உள்ள திருந்தா மொழிகளில் மட்டும் அன்றி, வட நாட்டில் இன்று செல்வாக்குப் பெற்றுள்ள திருந்திய மொழிகளிலும் திராவிடக் கலப்பு இருத்தலைக் காணலாம். சட்டர்ஜி என்னும் அறிஞர், வங்காளி மொழியாராய்ச்சியில் திராவிடக் கூறுகள் பல கலந்திருப்பதைக் காட்டுகின்றார். வீடி, குண்டா முதலான பல சொற்கள் ஊர்ப் பெயர்களின் இறுதியில் இருப்பதை எடுத்துக்காட்டி அவை திராவிடச் சொற்கள் எனக் குறிக்கிறார்.

## கடன் வாங்கல்

### கலப்பு

ஓர் இனத்தாரிடமிருந்து மற்றோர் இனத்தார் பெறுவன இருவகைப்படும். ஒருவகையானவை நிறம், உறுப்புக்களின் அமைப்பு முதலியவை. அவை இரத்தக் கலப்பால் அன்றி பெறமுடியாதவை. மற்றொரு வகையானவை சமயம், நாகரிகம், மொழி முதலியன. இவை இரத்தக் கலப்பு இல்லாமலே ஒருவரைப் பார்த்து மற்றொருவர் கற்றுக்கொள்ளக்கூடியவை. ஒரு மொழியிலிருந்து சொற்களும் இலக்கணக் கூறுகளும் மற்றொரு மொழி கடன் வாங்கியது

என்றால், அம்மொழியைப் பேசுவோரிடையே ஏதேனும் காரணம் பற்றி நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது எனக் கொள்ளலாம். அரசியல், சமயம், கலை முதலாய காரணங்களும் ஏதேனும் ஒன்றால் அவ்விருவகையார் கூடிப் பழகியதால், மொழிகளிடையே கலப்பு ஏற்பட்டது எனக் கருதலாம்.

மொழிக்கு மொழி கடன் வாங்குதல் என்பது, மக்கள் பணத்தையோ பொருளையோ கடன்வாங்குதல் போன்றது அன்று. மொழியைப் பொறுத்தவரையில், கடன் கொடுப்பவர் தம்மிடமிருந்து இழப்பது ஒன்றும் இல்லை. கடன் பெறுபவர் திருப்பித் தருவதும் இல்லை. இங்குக் கடன் வாங்குதல் என்பது 'போலச்செய்தல்' என்று யெஸ்பர்ஸன் கருதுகிறார்.

**எதிர்ப்பு**

பிறமொழிச் சொற்கள் தம் மொழியில் புகுவதை ஒவ்வொரு மொழியினரும் ஒவ்வொரு காலத்தில் எதிர்த்து வந்திருக்கின்றனர். அதற்குக் காரணம், மிக மிக இன்றியமையாத பழகிய சொற்கள் மொழியில் இயல்பாக அமைவனவாகத் தோன்றுகின்றன. பழகாத புதுச்சொற்களைக் கற்றவர்கள் சிலர் புகுத்த முயலும் முயற்சி செயற்கையாக உள்ளது. பொதுமக்களின் பேச்சுவழக்கில் பரவிக் கலக்கும் பிறமொழிச் சொற்கள், வந்த மொழியின் ஒலிமுறைக்கு ஏற்ப ஓரளவு உருமாறி அமைகின்றன. அதனால் அந்த மொழியினர், தம் மொழிச் சொற்கள் போல் அவற்றை வெறுப்பின்றி ஆளுகின்றனர். கற்றவர்கள் எழுதும்போது செயற்கையாகப் புகுத்தும் சொற்கள் உருமாறுவதில்லை. பிறமொழிச் சொற்களாகவே வேறுபட்டு நிற்கின்றன. இவ்வாறு ஒட்டாமல் நிற்கும் பிறமொழிச் சொற்களின் தொகை மிகும்போது, மொழியின் இயற்கைத் தன்மை கெடுவதாக உணரும் மக்கள் அவற்றை எதிர்க்கத் தலைப்படுகின்றனர்.

**மாறி அமைதல்**

இந்த உண்மையை உணர்ந்த தொல்காப்பியனார், பிற மொழிச் சொற்களைக் கடன் வாங்குவோர் என்றும் போற்றத் தக்க நெறியை எடுத்துறைத்துள்ளார்.

**“வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ**

**எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே”**

எனப் பிறமொழிச் சொற்கள் புகும் மொழியின் ஒலியமைப்புக்கு ஏற்றவாறு மாறியமைய வேண்டும் என்கிறார்.

இவ்வாறு மாறியமைந்த வடசொற்களே ஆணை, விண்ணப்பம், ஞானம், அனுபவம், அமாவாசை, முதலிய சொற்கள், ஆங்கிலத்திலிருந்து தமிழில் புகுந்த சொற்கள் சில. இவ்வாறு சில மாறுதல் பெற்றுத் தமிழுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளன. ஐரோப்பா, இங்கிலாந்து, ஆங்கிலேயர், உயில், கிறிஸ்து, யோவான், விவிலியம் முதலான சொற்கள் எடுத்துக்காட்டு ஆகும். சீன மொழியில் கிறிஸ்து என்ற சொல்லை ‘கிலிசெது’ என்றும், ஜப்பானிய மொழியில் லகரம் அமைந்த பிறமொழிச் சொற்களை ரகரம் வரத் திரித்தும் சிறிது வேறுபடுத்தி ஒலிக்கின்றனர்.

இவ்வாறு அன்றி, பிறமொழிச் சொற்கள் ஒலிவேறுபாடு இன்றி அவ்வாறே கடன் வாங்கப்படவேண்டும் என்னும் கொள்கை இக்காலத்தே வளர்கிறது.

**எதிர்ப்பின் காரணம்**

தேவையும் பயனும் நோக்கி ஒருசில சொற்களைக் கடன் வாங்கும்போது எதிர்ப்புணர்ச்சி எழுவதில்லை. அழகுக்காக, அலங்காரத்திற்காக என்று பிறமொழிச் சொற்களைக் கடன் வாங்கும்போது எதிர்ப்பு எழுகிறது.

இயல்பாகக் கலந்து கருத்தை உணர்த்தப் பயன்படும் சொற்கள் பெரும்பாலும் கற்றவர் கல்லாதவர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லாரிடமும் வழங்குவன. ஆனால், ஒரு மொழியை மிகுதியாகக் கற்றவர், மற்றொரு மொழியை நன்கு கற்காமலே முன்னதிலிருந்து பல சொற்களை இதில், புகுத்துதல் உண்டு. அதற்கு அடிப்படைக் காரணம், இந்த மொழியைக் கற்க முயற்சி செய்யாமலோ, தம் பிறமொழிப் புலமையைப் புலப்படுத்த வேண்டும் என்ற செருக்கு, அல்லது இந்த மொழியை நன்கு அறியாத அறியாமையை மறைக்கும் ஆர்வம் ஆகும். இவ்வாறு இவர்கள் புகுத்தும் சொற்கள், செயற்கையாக ஒரு மொழியில் புக முயல்கின்றன. அவற்றிற்கு அம்மொழியினர் வரவேற்பு நல்குவதில்லை. முதலில் தயங்கி நிற்பினும், நாளடையில் எதிர்க்க முனைகின்றனர்.

**தனித்தமிழ்**

பழங்காலத்திலேயே வடமொழயிலிருந்து தமிழில் புகும் சொற்களைத் தடையின்றி ஏற்றுக்கொள்ள முடியாமல் போன நிலைமை இங்குக் கருதத்தக்கது. தற்சமம், தற்பவம் என்று தமிழில் கலந்துள்ள வடசொற்களை இரு வகையாகப் பிரித்த பிரிவிலும் இந்த உண்மையைக் காணலாம். வடமொழியிலிருந்தே தமிழ் கடன் வாங்கியது என்றும், தமிழினிடமிருந்து வடமொழி ஒன்றும் கடன் வாங்கியதில்லை என்றும், அதனால் தமிழைவிட வடமொழி உயர்வுடையது என்றும் உண்மைக்கு மாறான கூற்றுக்களை வடமொழி கற்றவர் தொடர்ந்து கூறி

வந்த காரணத்தால் வடசொற்கள் தமிழர் நெஞ்சில் அன்பான இடம்பெற முடியாமற்போயிற்று. ஒரு சிலர் **தமிழும் வடமொழியிலிருந்து பிறந்தது என்று செருக்கோடு கூறிவந்ததும்** பகைமையை வளர்த்து வந்தது. நடுநிலைமை பிறழ்ந்து ஒரு சாரார் பரப்பிய கருத்துக்கள் அன்பான இசைவுக்கு இடம் இல்லாமற் செய்துவிட்டன. தமிழையும் வடமொழியையும் ஒப்பிட்டு அவற்றின் உரிமையான வளர்ச்சியையும் சிறப்பியல்பையும் சீர்தூக்கி உணரமுடியாத புலவர் சிலர் வடமொழிச் சார்பாக நடுநிலை இல்லாமல் கூறிய கூற்றுக்கள் பகைமைக்கு வித்திட்டன. ற,ன,ழ,எ,ஒ இந்த ஐந்தெழுத்துக்களே தமிழுக்கு உரிமை என்றும், ஐந்தெழுத்துக்களை மட்டும் உடையது ஒரு மொழி என்று கூற நாண வேண்டும் என்றும் புலவர் ஒருவர் மயங்கிக் கூறியது இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**வடமொழியும் தென்மொழியும்**

தமிழ் வடமொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கியது போலவே, வடமொழியும் தமிழிலிருந்தும் பிற மொழிகளிலிருந்தும் சொற்களைக் கடன் வாங்கியுள்ளது என்பதைக் கால்டுவெல் விளக்கியுள்ளார். கடன் வாங்கிய சொற்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம். அது பற்றிக் கடன் வாங்கவில்லை என்று கூறமுடியாது. ஆங்கில மொழியில் எவ்வளவு பிரிட்டிஷ் சொற்கள் உண்டோ அவ்வளவு திராவிடச் சொற்கள் வடமொழியில் உண்டு என்கிறார் கால்டுவெல்.

**திசைச்சொல்**

தமிழ்மொழியில் இலக்கண முறைப்படி (morphological classification) சொற்களைப் பெயர்ச்சொல், வினைச் சொல், இடைச்சொல், உரிச்சொல், என

நான்குவகையாகப் பகுத்தலேயன்றி, சொற்கோவை முறைப்படி வேறு வகையாகவும் வகைப்படுத்தல் காணப்படுகிறது.

அவற்றுள்,

**“இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல்லென்று**
**அனைத்தே செய்யுள் ஈட்டச் சொல்லே”**

என்னும் தொல்காப்பியம் இதனை விளக்குவதாம்.

இயற்சொல் மக்களின் பேச்சு வழக்கிலுள்ள தமிழ்ச் சொற்கள் என்றும், திரிசொல் பேச்சு வழக்கிறந்து செய்யுள் அளவில் நின்ற தமிழ்ச் சொற்கள் என்றும், வடமொழியிலிருந்து தமிழுக்கு வந்தன வடசொல் என்றும், பிறமொழிச் சொற்கள் எல்லாம் திசைச் சொற்கள் என்றும் வகைப்படுத்தலே ஈண்டு நோக்கமாகும்.

**“இயற்சொல் தாமே**
**செந்தமிழ் நிலத்து வழக்கொடு சிவணித்**
**தம்பொருள் வழாமை இசைக்கும் சொல்லே”**

என்பது தொல்காப்பினார் இயற்சொல்லைப் பற்றிக் கொண்டே கருத்தைத் தெளிவாக்குகின்றது.

முகம்மதியர் ஆட்சிக் காரணத்தாலும் ஆங்கிலேயர் ஆட்சிக் காரணத்தாலும் தமிழில் புகுந்த சொற்கள் பல. சலாம், சபாஷ் முதலிய சில சொற்கள் இலக்கியத்திலும் புகுந்தன. இவையெல்லாம் பிற மொழிகளிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொற்கள்.

**வடசொல்**

வடமொழியிலிருந்து கடன் வாங்கப்பட்டவை வட சொற்கள் எனப்பட்டன. சங்க காலத்தில் நூற்றுக்கு இரண்டு என்னும் அளவில் இருந்த வடசொற்கள், பதினெண் கீழ்க்கணக்கிலும் சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் நூற்றுக்கு நான்கு ஐந்தாகப் பெருகியுள்ளன. ஆழ்வார் நாயன்மார் காலத்தில் நூற்றுக்குப் பத்துப் பதினைந்தளவும் மிகுந்தன. பிறகு நெடுங்காலம் அந்நிலையே நீடித்தது. மணிப்பிரவாளம் செல்வாக்குப் பெற்ற காலத்திலேயே வடமொழிக் கலப்பு அளவின்றிப் பெருகியது. ஆயினும் நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் தமிழிலக்கியம் என்ற நினைவுடன் எழுதப் புகுந்தபோதெல்லாம் வடசொற் கலப்பு மிகக் குறைந்தே வந்தது. இன்றும் நாட்டுப் புறங்களில் பேச்சுத் தமிழில் வடசொல் குறைவு. நகரங்களில் தான் நூற்றுக்குப் பத்து அளவில் வடசொல் கலந்து பேசப்படுகின்றது. பத்திரிகைகளில் எழுதப்படும் தமிழிலும் பல சொல் கலப்பு உண்டு. எனினும் தெலுங்கு மலையாள மொழிகளில் உள்ளது போல் கலப்பு அளவின்றி மிகுதற்கு வழியில்லை.

இவ்வாறு கலந்த வடசொற்களைத் தற்சமம் என்றும் தற்பவம் என்றும் இருவகைப் படுத்துவர் பிற்காலத்து இலக்கண நூலார். தமிழுக்கும் வடமொழிக்கும் பொது எழுத்துக்களால் ஆகிய வடசொற்கள் தமிழில் புகில் அவை தற்சமம் எனப்படும். தமிழில் இல்லாத வடமொழிக்கே உரிய எழுத்துக்களையுடைய வடசொற்கள் தமிழில் வந்து வழங்குவன தற்பவம் எனப்படும்.

**வடமொழியில் திராவிடச் சொற்கள்**

தமிழ்ச் சொற்களாக உள்ள சில சொற்களையும் வடசொற்கள் எனக் கூறுவதில் இந்நாட்டறிஞர்க்குப் பெரியதோர் ஆர்வம் இருந்துவந்தது. ஆயினும்,

அவர்களிடையே சிலர் அவ்வப்போது அவற்றைத் தமிழ் சொற்கள் என்றே உறுதிப்படுத்தி வந்துள்ளனர். எடுத்துக்காட்டாகக் கூறத்தக்கவர் நச்சினார்க்கினியர். அவர், உலகம், காலம் என்னும் சொற்களைப் பிறர் வடசொல்லெனக் கூறினும், அவை தமிழ் சொற்களே என விளக்கினார்.

சென்ற நூற்றாண்டில் முதன்முதலாக டாக்டர் குண்டர்ட் என்பவர் **"திராவிடக் கூறுகள்"** என்ற ஆராய்ச்சிக் கட்டுரையைக் கி.பி 1869ல் ஜெர்மன் கீழ்நாட்டுக் கலைக் கழகத்தின் பத்திரிக்கையில் வெளியிட்டார். பின்னர், டாக்டர் கிட்டல் கி.பி.1872இல் **"வடமொழி அகராதிகளில் திராவிடச் சொற்கள்"** என்ற கட்டுரை வரைந்தார். அவர் தாம் எழுதிய கன்னட அகராதியில் வடமொழி கடன் வாங்கின சொற்கள் என நானூற்றிருபது சொற்களை எடுத்து வெளியிட்டார். அவருக்குப் பின்னர், அவ்வாராய்ச்சியில் ஈடுபட்டவர், ஒப்பிலக்கணம் எழுதிய டாக்டர் கால்டுவெல் ஆவார்.

**ஆராய்ந்து காணும் முறை**

வடமொழிக்கும் திராவிட மொழிக்கும் பொதுவாக வழங்கும் சொற்களில் சிலவற்றைப் பின்வரும் முறையில் ஆராய்ந்து, திராவிடமொழிச் சொற்கள் எனக் கூறலாம் என்கிறார் கால்டுவெல்.

- ✓ ஒரு சொல் வடமொழியில் தன் இனமான சொற்கள் இல்லாமல், அடிச்சொல்லும் இல்லாமல், அதிலிருந்து வளர்ந்தமைந்த சொற்களும் இல்லாமல் இருக்கலாம். ஆனால், அதற்கு இனமான சொற்கள், ஒத்த பிறப்புடைய சொற்கள், அல்லது அதிலிருந்து வளர்ந்தமைந்த சொற்கள் திராவிட மொழிகளில் இருந்தால், அது

வடமொழிக்கு உரியதன்று என்றும் திராவிடச் சொல் என்றும் துணியலாம்.

- ✓ ஒரு சொல்லின் பொருளை உணர்த்த வேறு பல சொற்கள் வடமொழியில் இருக்க, திராவிட மொழிகளில் அப்பொருளுக்கு உரியதாய் அந்த ஒரு சொல் மட்டுமே இருந்தால், அது திராவிடச் சொல்லெனத் துணியலாம்.
- ✓ ஒரு சொல் வடமொழியில் மட்டும் காணப்பட்டு, வட மொழிக்கு இனமான ஐரோப்பிய மொழிகளில் காணப்படாமல், திராவிட மொழிகளில் பண்பட்டவை பண்படாதவை எவற்றிலும் வழங்குவதாக இருப்பின், அதுவும் திராவிடச் சொல் எனப்படும்.

இவ்வாறு ஆராய்ந்தால், வடமொழியில் உள்ள சொற்களில் எவை எவை திராவிடச் சொற்கள் என உணரலாம் என்று கால்டுவெல் ஆராய்ந்து கூறுகிறார்.

இக்காரணங்களுள் ஒன்றோ பலவோ இருப்பின், எச் சொல்லாயினும் திராவிட மொழிகளிடமிருந்து வடமொழியிற் கலந்த சொல்லென்று துணிதல் தகும்.

**வரையறை**

எவ்வகையிலும் ஒருசில சொற்கள் பிறமொழியிலிருந்து வந்து கலவாமல் ஒரு மொழி நிலவுதல் அரிது. கலைச் சொற்களாக உள்ள பிறமொழிச் சொற்களை எந்த மொழியும் ஓரளவு கடன்வாங்க வேண்டியுள்ளது. அச்சொற்களைக் கலக்கும்போது முன்குறித்த எதிர்ப்பும் இடர்ப்பாடும் இல்லை. காரணம், கலைச்சொற்களைக் கற்க முயல்வோர் மிகச் சிறுபான்மையோரே. பெரும்பாலோருடைய மொழியை அது எவ்விதத்திலும் கெடுக்காததால், அவர்கள் இந்தக் கலையுலகத்துப் போக்கில் தலையிடுவதில்லை. இத்தகைய தவிர, மற்ற

இடங்களில் பிறமொழிச் சொற்களை வேண்டும் என்றே அழகு கருதிப் புகுத்தலும் தவறு. நம் மொழியில் சொற்கள் இருக்கும்போது பிற மொழிகளிலிருந்து புதுச் சொற்களைக் கொண்டுவந்து புகுத்தலும் தவறு. சுருங்கக் கூறின் பிறமொழிச் சொற்களை வரையறையின்றி எந்தக் காலத்திலும் எந்த நூலிலும் புகுத்துவது தவறாகும். பிறமொழிச் சொற்கள் எக் காரணத்தாலும் புகாதவாறு ஒரு மொழியைக் காத்திடுதலும் இயலாததாகும்.

**செல்வாக்கு**

இரு மொழிகளுக்குள் கலப்பு ஏற்படும்போது, ஒத்த செல்வாக்கு உடையவைகளாக இருப்பின், இரண்டும் வாழும், இல்லையேல், செல்வாக்கு மிகுந்தது வாழ, மற்றது மறைந்து விடும்.

இரு மொழிகள் கலக்கும்போது எது செல்வாக்கு உடையதாக இருக்கும் என்று சொல்வது அரிது. இரண்டும் பேச்சு மொழிகளாக ஒத்தநிலையில் இருப்பின், நெடுங்காலம் வரையில் படிப்படியாகக் கலப்பு நிகழ்ந்தவாறே இருக்கும். ஒன்று எழுத்துவழக்கு அற்ற பேச்சு மொழியாகவும், மற்றொன்று பேச்சுவழக்கு அற்ற எழுத்து மொழியாகவும் இருப்பின். முன்னது விரைவில் மாறும், புதுமொழியாக உருப்பெறும் ஒன்று எழுத்துவழக்கும் பேச்சுவழக்கும் உடைய மொழியாகவும் மற்றொன்று பேச்சுவழக்கு அற்ற மொழியாகவும் இருப்பின், முன்னது பல சொற்களைக் கடன்வாங்கிக் கொள்ளளும். பின்னது ஒரு சில சொற்களையே கடன்வாங்கும்.

ஒத்த நிலையில் பேச்சு வழக்கில் உள்ள இருமொழிகள் கலந்தால், உயர்ந்த மொழியிடமிருந்து உயர்வற்ற மொழி கடன் வாங்குதல் போலவே, உயர்வற்ற மொழியிடமிருந்து உயர்வுடைய மொழியும் கடன்வாங்குதல் உண்டு. இரண்டில் ஒன்றே வாழ்வது என்ற நெருக்கடி ஏற்படும்போதும், உயர்வுடையது

மறைய, உயர்வற்ற மொழி வெற்றிபெறுதலும் உண்டு என்கிறார் அறிஞர் யெஸ்பர்ஸன். அரசியல் துறையில் செல்வாக்கு உடைய மொழி வெற்றி பெற்று, செல்வாக்கு அற்ற மொழி மறைதலும் உண்டு. அமெரிக்காவில் ஆங்கில மொழி வாழ, மற்ற ஐரோப்பிய மொழிகள் இடம் பெறாமற் போனதற்கு ஆங்கிலேயரின் அரசியல் செல்வாக்கே காரணம் எனலாம்.

**கடன் வாங்கக் காரணம்**

யெஸ்பர்ஸன் கருத்துப்படி சொற்களைக் கடன்வாங்குவதற்குரிய காரணங்கள் மூன்று ஆகும். முதலாவது, தம்மிடம் இல்லாத புதிய பொருள்களைப் பயன்படுத்தும் போது அவற்றின் பிறமொழிப் பெயர்களைக் கடன்வாங்குதல். இரண்டாவது, ஒருமொழியாரிடமிருந்து செல்வாக்கோ உயர்வோ பெற்றுள்ள ஒரு துறையைக் கற்கும் போது அதற்கு உரிய அம்மொழிச் சொற்களையும் கற்றுக் கையாளுதல். மூன்றாவது, மொழிபெயர்ப்பாளர்கள் சோம்பலின் காரணமாக, தம் மொழிச் சொற்களைத் தேடிக் காணாமல் பிறமொழிச் சொற்களை அப்படியே கொண்டு வந்து கலந்து சேர்த்தல்.

ஒரு நாட்டின் சிறந்த பொருள் ஒன்று புதிதாக இயற்றப்படுமானால், அந்தப் பொருளைத் தருவித்துக் கொள்வது மட்டும் அல்லாமல், அதற்கு அவர்கள் இட்ட பெயரையும் அடுத்த நாட்டு மக்கள் பயன்படுத்திக்கொள்கின்றனர். சைக்கிள், மோட்டார், டெலிவிஷன் முதலிய சொற்கள் தமிழில் வழங்கும் காரணம் அதுவே. புதுப்பொருள் போலவே, புதுக்கருத்தையும் இவ்வாறே போற்றிக் கற்பதும் அவ்வகையில் அமைந்துள்ள பெயர்ச்சொற்களைக் கடன்வாங்கிக்கொள்வதும் மக்களின் இயல்பாகும்.

பிரெஞ்சு மொழியில் உள்ள பாராளுமன்றத்தின் தொடர்பான பல சொற்கள் ஆங்கிலித்திலிருந்து கடன் வாங்கப் பட்டவை. அதற்குக் காரணம்

பாராளுமன்றத்தை முதல் முதலில் உருவாக்கிச் சிறப்பித்தவர் ஆங்கிலேயர், ஆகவே அவர்களிடமிருந்து கற்ற கலைக்கு ஏற்ற சொற்கள் பிரெஞ்சு மொழியில் புகுந்தன.

பழைமையை அவ்வளவாகப் போற்றாமல் பழக்கவழக்கங்களை விரைவில் மாற்றும் இயல்பு, மக்கள் சிலரிடத்தில் உள்ளது. தம்மைத் தாமே தாழ்வாகக் கருதி, தம்மிடம் பழகும் அயலாரை உயர்வாக மதிக்கும் தாழ்வு மனப்பான்மை சிலரிடம் உள்ளது. புதிதாக வரும் எதையும் கண்மூடிப் போற்றும் வேகம் மக்கள் சிலரிடம் காணப்படுகிறது. இத்தகைய இயல்புகள் ஒரு நாட்டு மக்களிடம் மிகுதியாக இருக்குமானால், இந்த இயல்புகள் அவர்கள் பேசும் மொழியிலும் இடம்பெறும் இவர்கள் பிறமொழிச் சொற்களைத் தயங்காமல் கடன் வாங்குவர்.

ஒரு மொழியிடமிருந்து மற்றொரு மொழி இவ்வாறு கடன் வாங்கியபோது, கடன் வாங்கிய சொற்களின் எண்ணிக்கையை விட அவற்றின் சிறப்பியல்பு அந்த இரு மொழியார்க்குள் இருந்த உறவை நன்கு விளக்கவல்லதாகும். தக்க முறையில் ஆராய்ந்தால், இன்ன துறையில் இன்ன மொழியார் சிறப்புப் பெற்று விளங்கினர் என்பதையும் இன்ன வகையில் இன்னார் கருத்துவளம் பெற்றிருந்தனர் என்பதையும் கடன் வாங்கிய சொற்களைக் கொண்டே தெளிந்து கூறலாம்.

**கடன் வாங்கப்படுவன**

இவ்வாறு ஒரு மொழி கடன் வாங்கியதைப் பற்றி ஆராயும் போது, இன்ன அளவிற்குக் கடன் வாங்கியது என்று ஆராய்தல் வேண்டும். இன்ன வகையில் கடன் வாங்கியது என்று ஆராய்தலும் வேண்டும். பெரும்பாலும் கடன் வாங்கப்படுபவை, பொருள்களின் பெயர்களும் பண்புப் பெயர்களும் ஆகும்.

வினைச்சொற்கள் மிகக் குறைந்த அளவிலே கடன் வாங்கப்படுகின்றன. இடைச் சொற்களைக் கடன் வாங்குதல் அரிது. துணைவினை முதலியவற்றைக் கடன் வாங்கல் இல்லை எனலாம். வேற்றுமை யுருபுகள் வினைவிகுதிகள் முதலியவற்றைக் கடனாகப் பெறுதல் சிறிதும் இல்லை எனலாம். ஒரேவழி எண்ணுப் பெயர்களில் ஒருசில கடன் வாங்கப் படுதல் உண்டு.

மூவிடப் பெயர்கள் முதலியவற்றை ஒரு மொழி கடன் வாங்குதல் அரிது. அவ்வாறு கடன் வாங்கியிருந்தால், அது இருமொழியாளரும் கலந்த பழக்கத்தால் மட்டும் அல்லாமல், அவர்கள் மிகக் கலந்து ஒன்றுபட்ட தன்மையும் காரணம் எனக் கூறலாம்.

ஆங்கிலத்தில் உள்ள they, them, their, என்னும் இடப்பெயர் வகைகள் ஸ்காண்டிநேவியன் மொழியிலிருந்து வந்தவை என்றும், இரண்டு இனமும் ஒன்றாகக் கலந்த கலப்பால் ஏற்பட்டவை என்றும் கூறப்படுகின்றது.

மூவிடப் பெயர்கள் மொழியின் உயிரான இலக்கணம் போல் அடிப்படையோடு இயைந்து நிற்பவை. பிறமொழிச் சொற்களைக் கொண்டு தம் மொழியில் அழகுபடுத்த வேண்டும் என்று தவறாக நினைப்பவரும் இவற்றைக் கடன் வாங்கத் துணிவதில்லை. இவை மொழியில் அவ்வளவு ஆழமாக வேரூன்றியுள்ளன எனலாம்.

**வெற்றி தோல்விகள்**

ஒரு நாட்டை வென்று கைப்பற்றியவர் மிகச் சிறுபான்மையோராக இருப்பின், அவர்களின் மொழி மிக்க செல்வாக்கு உடையதாக இருந்தும், வென்றநாட்டில் இடம் பெறாமல் போவதும் உண்டு. வென்ற சிறுபான்மையோர் தம் மொழியோடு பெரும்பான்மையோரின் மொழியையும் கற்று இரு

மொழியினராக வாழத் தலைப்படுவர், நாளடைவில் அவர்களின் தாய்மொழியை நெகிழவிட்டு, அந்நாட்டு மொழியை மட்டுமே போற்றத் தொடங்குவர். இங்கிலாந்தை வென்ற நார்மன் வகுப்பார் தம் பிரஞ்சு மொழியைக் கைவிட்டு ஆங்கிலம் கற்றுக் கலந்துவிட்ட வரலாறு இதை உணர்த்தும்.

ஒரு நாட்டின் ஆட்சியில் பெரிய மாறுதல் ஒன்றும் நேராமல் அமைதி நிலவும் காலத்திலும், நாட்டு மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லாமலும் வெளிநாட்டு மக்கள் இந்நாட்டுக்குள் அடிக்கடி வராமலும் குறிப்பிட்ட எல்லைக்குள் கிடந்து வாழும் காலத்திலும் இந்நாட்டு மொழியில் மாறுதல் அவ்வாறு நேராது. வெளிநாடுகளில் இவர்கள் குடியேறிப் பரவும் காலத்திலும், வெளிநாட்டார் இங்குக் கலந்து பழகும் காலத்திலும், ஆட்சிமுறையில் மாறுதல் நேரும் காலத்திலும் சமயம் முதலிய துறைகளில் புதிய இயக்கங்கள் எழும் காலத்திலும், வாணிபம் முதலிய காரணங்களால் புதிய செல்வாக்குப் பெறும் காலத்திலும் மொழியில் பல மாறுதல்கள் விரைவில் ஏற்படுதல் உண்டு. மலையோரமான பகுதிகளிலும் பிறநாட்டாரின் போக்கு வரவு அற்ற தொலைவான மூலைப்பகுதிகளிலும் மக்களின் மொழியில் மாறுதல் அவ்வளவாக ஏற்படுவதில்லை. பல வகை மக்கள் கலந்து வாழ இடம் அளிக்கும் பெரிய நகரங்களிலும் பிறநாட்டு எல்லையை அணுகி அமைந்துள்ள நகரங்களிலும் மாறுதல் மிகுதியாக ஏற்படும்.

## கிளைமொழி

### ஒருமொழியே பலவகை

தமிழ் நம் தாய்மொழி என்கிறோம். அது ஒன்றா பலவா? பேச்சுத் தமிழ், எழுத்துத் தமிழ் எனப் பாகுபடுத்துகிறோம். எழுத்துத் தமிழைப் பத்திரிகைத் தமிழ், கடிதத் தமிழ், இன்றைய உரைநடைத் தமிழ், பழைய இலக்கியத் தமிழ்

எனப் பல்வேறு வகையாகக் காண்கிறோம். இலக்கியத் தமிழ் என்று கொள்ளும் ஒன்றையும் சங்கத் தமிழ், இடைக்காலத் தமிழ் எனவும், காவியத் தமிழ், உரையாசிரியரின் தமிழ் எனவும் பகுத்துணர்கின்றோம். பேச்சுத் தமிழைப் பற்றிக் கூறவேண்டுவதே இல்லை. அது ஒன்று எனக் கூறுவார் ஒருவரும் இலர். நாட்டுக்கு நாடு, மாவட்டத்திற்கு மாவட்டம், ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு, இனத்துக்கு இனம் எனப் பேச்சுத்தமிழ் பலவகைப்படுகின்றது. ஒரே குடும்பத்தை எடுத்துக்கொண்டு ஆராய்ந்தாலும் பல்வேறு இடங்களில் பயின்று வீட்டிற்குத் திரும்பும் கணவனுடைய தமிழுக்கும் பக்கத்தாருடனும் சுற்றத்தாருடனும் பயின்று வீட்டினுள் வாழும் மனைவியின் தமிழுக்கும், வயதிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவாறு பயின்று கற்றுவரும் மக்களுடைய தமிழுக்கும் வேறுபாடுகளைக் காணலாம். ஆகவே தமிழ் என்பது ஒன்று என்று கூறத் தயங்கவேண்டிய நிலையும் உள்ளது.

இவை அனைத்திற்கும் அடிப்படையாய், அனைத்திலும் ஊடுருவி விளங்கிக் காலம் கடந்து வாழ்ந்துவரும் ஒன்று தான் நம் தாய்மொழியாகிய தமிழ் எனக் கூறலாம். ஆயின் அந்த ஒன்று இதுதான் எனச்சுட்டிக்கூற இயலாததாய், ஓரளவு நம் கருத்திற்கும் எட்டாததாய் உள்ளது. வெண்ட்ரியே என்னும் பிரெஞ்சு ஆசிரியர் கூறுமாறு, அது ஆற்றலுடன் இயங்கிக் கொண்டே உள்ளது. இன்ன போக்கில் செல்கின்றது என்று மட்டும் கூறமுடியும். அதைப் பேசுவோரும் எழுதுவோருமாகிய நாம் பல்வேறு வகையாக வேறுபடுத்திப் பேசுகிறோம், எழுதுகிறோம். நினைவில்லாக்குறை, தவறுபட ஒலிக்கும் முறை, நாவின் வழு முதலிய காரணங்களால் அந்த ஒரு மொழியே பலவாறு திரியவும் நேர்கின்றது.

ஒருவர் பேசிவரும் மொழியும் ஒரே வகையாக மாறாமல் நிலைத்திருக்க முடியாது என்பது அறிஞர் கொள்கை. காரணம் என்ன? முதலாவதாக, ஒருவர்

ஒரே தொடரை முதல்முறை சொல்வதற்கும் பத்தாம் முறை சொல்வதற்கும் வேறுபாடு உண்டு. ஆகவே பல முறை திரும்பத் திரும்பப் பேசும்போது பேச்சுச் சிறிது திரிபடையும், இரண்டாவதாக, பேசும் அவருடைய எண்ணத்தில் படிப்படியே வளர்ச்சியும் மாறுதலும் உண்டாகின்றன. அவருடைய மூளை நாளுக்கு நாள் வளர்ந்து மாறிவருவதால், பேச்சிலும் அதற்கு ஏற்ற மாறுதல் நிகழ்கிறது. மூன்றாவதாக அவருடைய செவியில் விழும் பிறருடைய சொற்களும் தொடர்களும் அவர் பேசிப் பழகும் மொழியுடன் சேரும்போதும் மாறுதல் நேர்கிறது.

மொழி பல எனக் கூறத் தொடங்கினும், வரையறை இல்லாமற் போகின்றது. இடத்தாலும் பழக்கத்தாலும் சமயம் முதலிய காரணங்களாலும் ஒரு மொழி பேசும் மக்களிடையே எத்தனை வகையாகக் குழுக்கள் உள்ளனவோ அத்தனை வகையாக அந்த மொழி உள்ளது எனக் கூறலாம். அன்றி ஒவ்வொருவர் பேசும் மொழியிலும், வேறுபாடு காணப்படுதலால், மக்களின் தொகை எவ்வளவோ, அவ்வளவு மொழி வேறுபாடு உண்டு எனக் கூறலாம். இந்த இருவகையில் மொழியின் பன்மை அடங்குவதன்று. ஒரே மனிதன் அலுவலகத்தில் பேசும் மொழி வேறாகவும், கடைத்தெருவில் பேசம் மொழி வேறாகவும், வீட்டில் வளர்ந்தோரிடத்தில் பேசும் மொழி வேறாகவும், சிறுவரிடத்தில் பேசும் மொழி வேறாகவும், மேடையில் பேசுவது வேறாகவும், கடிதத்தில் எழுதுவது வேறாகவும் கட்டுரையில் எழுதுவது வேறாகவும் இருத்தலால், மக்களின் குழுத்தொகைகளைவிட, மக்களின் எண்ணிக்கையை விட, மொழி மிகப் பலவாக வேறுபட்டுள்ளதெனக் கூறலாம்.

**இயல்பாக வேறுபடுவது**

கிளைமொழி என்பது என்ன? ஓர் இடத்தார், அல்லது ஓர் இனத்தார், அல்லது ஒரு கூட்டத்தைச் சார்ந்தவர், அல்லது ஒரு தொழிலைச் சார்ந்தவர் தமக்குள் தடையின்றி விளங்குமாறு இயல்பாகப் பேசிவரும் மொழியாகும். எவ்வகையான வேறுபாடும் அதைப் பேசுவோர்க்குத் தெரியாதவாறு அவ்வளவு இயல்பாக அமையும் மொழியாகும்.

ஒரு கட்சியார் அல்லது ஒரு தொழில் நிலையைத்தைச் சார்ந்தவர் பேசும் மொழியும் கிளைமொழியே. குப்பங்களில் வாழும் ஏழை மக்களின் மொழி ஒரு வகையானது. ஒரு குப்பத்தார் பேசும் மொழிக்கும் மற்றொரு குப்பத்தாரின் மொழிக்கும் வேறுபாடு இருத்தலால், அவை வெவ்வேறு கிளைமொழிகள் ஆகும். ஆற்றின் இந்தக் கரையில் வாழ்வோர்க்கும் அந்தக் கரையில் வாழ்வோர்க்கும் இத்தகை மொழிவேறுபாடு உண்டு. தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு மாவட்டத்தாரின் மொழி ஒருவகை. திருநெல்வேலி மாவட்டத்தாரின் மொழி ஒரு வகை. இவ்வாறே கிளை மொழிகள் பல காரணம் பற்றிப் பலவகையாய் அமைகின்றன. எல்லாம் இயல்பாக அமைந்தவைகளே, செயற்கையாக, வேண்டும் என்றே அமைத்தால், அவைகள் கிளை மொழி என்று கூறப்படுவதில்லை. குறுமொழி என்று வேறு பிரித்துக் கூறப்படும்.

**பழக்கம் காரணம்**

வெவ்வேறு கிளைமொழி பேசும் இரு கூட்டத்தார்க்கு இடையே உறவும் பழக்கமும் மிகுமாயின் அந்தக் கிளை மொழிகளுக்கு இடையே உள்ள வேற்றுமை குறைந்து வரும். அந்த கூட்டத்தார் கலந்து பழகும் வாய்ப்புக் குறைந்தால், கிளை மொழிகளுக்கு இடையே வேறுபாடு பெருகும். இரண்டு மாவட்டத்தார் நெருங்கிப் பழகினால், அந்த மாவட்ட மொழிகள் கலந்து

ஒன்றுபடத் தொடங்கும். இல்லையேல், வேறுபாடு மிகும். மேற்குத் தொடர்ச்சி மலைக்குக் கிழக்கே இருந்த தமிழர்க்கும் மேற்கே இருந்த தமிழர்க்கும் பழக்கம் மிகுதியாக இருந்துவந்த காலம் சங்ககாலமும் இடைக்காலமும். ஆகையால் அக்காலங்களில், இருபுறமும் தமிழ் வழங்கியது. இருவகையாரின் தமிழுக்கும் வேறுபாடு வளரவில்லை. நான்கைந்து நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்த நிலைமை மாறியது. மேற்குப் பகுதியார்க்கும் கிழக்குப் பகுதியார்க்கும் இடையே உறவு குறைந்தது. பழக்கம் குறைந்தது. ஆகவே மொழி வேறுபாடு மிகுந்தது. அதனால்தான் அந்தப் பகுதியாராகிய சேர நாட்டார் பேசிய மொழி பெரிதும் வேறுபட்டு மலையாளம் என்று வேறு பெயருடன் கூறப்படும் நிலைமை வந்தது. திருநெல்வேலி மாவட்டத்தாரின் மொழியும் வட ஆர்க்காடு மாவட்டத்தாரின் மொழியும் அவ்வாறு மிகுதியாக வேறுபடவில்லை. இரண்டு மாவட்டத்தார்க்கும் இடையே போக்குவரவு கொள்ளல் கொடுத்தல் பழக்கம் ஆகியவை என்றும் இருந்து வருகின்றன. கற்கும் நூல்களும் பொதுவாக இருந்துவருகின்றன. ஆகையால் இந்த மாவட்டக் கிளைமொழிகள் வெவ்வேறு மொழிகளாய் மாறவில்லை. எல்லாம் தமிழின் கிளைமொழிகளாகவே இருந்து வருகின்றன.

**கிளைமொழிகள் குறைதல்**

கிளைமொழியின் வாழ்வு வரவரக் குறுகி வருவதாகக் கூறலாம். இன்று அறிவியல் முன்னேற்றத்தால் ஏற்பட்டுள்ள போக்குவரவுக் கருவிகள், விரைவில் பரவும் செய்தித்தாள், திரைப்படம், வானொலி முதலியவை பொதுமொழி விரைவில் ஆற்றலுடன் பரவுதற்குத் துணை புரிகின்றன. மக்களின் வாழ்விலும் பொதுத் தேவைகள் மிகுதியாகிக் கொண்டு வருகின்றன. குடிசைக் கைத் தொழில்கள் குறைந்து யந்திரத் தொழிற்சாலைகள் பெருகுவதாலும், இவ்வாறே மற்றச் சிறுசிறு அமைப்புக்கள் குறைந்து பெரிய பெரிய நிலையங்கள் வளர்வதாலும் மக்கள் சிறுசிறு கூட்டமாகப் பிரிந்து வாழ்வதற்கு இடம் இல்லாமற்

போகின்றது. முற்காலத்தில் ஒருவன் குடும்பத்தில் பழகும் காலம் மிகுதியாகவும் பொது இடங்களில் பழகும் காலம் குறைவாகவும் இருந்து வந்தன. இன்று ஒருவன் குடும்பத்தில் பழகும் நேரம் குறைந்து வருவதால், மனிதன், குடும்ப மனிதனா வாழும் நேரத்தைவிட, ஊர் மனிதனாக வாழும் நேரம் மிகுதி. பலருடைய வாழ்வில், நாட்டு மனிதனாக வாழும் நேரமே மிகுதி. ஒரு சிலருடைய வாழ்வில் உலக மனிதனாக வாழும் நேரம் மிகுதியாக உள்ளது. இவற்றால் வேற்றுமைப்பான்மைக்கு உரிய வாய்ப்புக்கள் குறைந்து போவதால், இனிக் கிளைமொழிகள் வளர்வதற்கு வாய்ப்புக் குறைவு ஆகும்.

சென்ற நூற்றாண்டில் இவற்றை ஆராய்ந்த மொழி நூலார், நாகரிக மக்களிடையே காணப்படும் கிளைமொழிகளைவிட, நாகரிகம் குறைந்த காட்டுமிராண்டிகளிடையே காணப்படுவன மிகுதி என்று குறித்தனர். இன்றைய நிலையில் நாகரிக மக்கள் பொதுவாழ்வில் பெற்றுவரும் வேகமான வளர்ச்சியை நோக்கினால், அவர்களிடையே கிளைமொழிகள் விரைவில் குறைந்துவரும் என்பதை உணரலாம். இன்ன குடும்ப மொழி, இன்ன தெருவின் மொழி, இன்ன ஊரின் மொழி என்று குறிக்கப்படும் பலவகைக் கிளைமொழிகள் எதிர்காலத்தில் இல்லையாகிவிடும், ஒரு சில கிளைமொழிகள் மட்டும் நிற்றல் கூடும். மக்கள் கூடிப் பழகவும் கருத்துக்கள் கலந்து பரவவும் பழங்காலத்தில் வாய்ப்புகளும் காரணங்களும் குறைவு இக்காலத்தில் மிகுதி என்னும் இவ்வுண்மையை உணர்ந்தே கிளைமொழிகளின் பழங்கால வரலாற்றையும் வருங்கால வாழ்வையும் ஆராய வேண்டும். மக்கள் ஒரு நாட்டினராய்த் திரண்டு அமையும் அமைப்புக்கு முன்னர், குடும்பங்கள், வகுப்புகள், சாதிகள், இனங்கள் என்று சிறு சிறு பிரிவுகளாய் வாழ்ந்ததுபோல், பொதுமொழியாக ஒன்று அமைவதற்கு முன் பல்வேறு சிறு சிறு கிளைமொழிகள் இருந்துவந்தன என்னும் உண்மையையும் இங்கு கருதவேண்டும்.

**கிளைமொழியும் பொதுமொழியும்**

கிளைமொழிகளுக்குள் வேற்றுமைப் போக்கு ஒரு புறமும் ஒற்றுமைப்போக்கு மற்றொரு புறமும் இருந்து ஒன்றை ஒன்று ஈர்த்து வருதல் இயற்கை. மாறுபட்ட இந்த இரண்டும் போக்குகளுக்கும் இடையே மொழி தன்னைக் காத்துக்கொண்டு வளர்ந்து வருகிறது. சமுதாயமாய்ப் பழகும் மக்களுக்கிடையே சிலவகைப் பாகுபாடுகள் அமைந்து, அந்தந்தக் குழுவினர் தமக்குள் நெருங்கிப் பழகுவதால், புதிய கூறுகள் சில ஏற்பட்டு, வேற்றுமைப் போக்கு வளரத் தொடங்கும். ஆயின், எந்தக் காலத்திலும் வேற்றுமைப் போக்கு முற்றிலும் வளர்வதில்லை. அவ்வாறு வளர்ந்தால், பிறர்க்குக் கருத்தை உணர்த்த முடியாமற் போவதால் மொழி பயன் இல்லாமற் போகிறது. ஒரு குழுவினர் மற்றவர்களோடு பழகும் தேவையின் காரணமாக அவர்களுக்கு விளங்கும் வகையில் பேச நேர்வதால், ஒற்றுமைப் போக்கு வளர்கிறது. ஆகவே, இந்த இரு வகைப் போக்குகளுக்கு இடையே தான், பொதுமொழியின் வாழ்வும் கிளைமொழிகளின் வாழ்வும் அமைகின்றன. பொதுமொழியின் செல்வாக்கு மிகும்போது, கிளைமொழி தன்னைச் சிறிது மாற்றிக்கொண்டு அதை நெருங்கிச் செல்கிறது. கிளைமொழி விரைந்து வளர்ந்து பரவத் தொடங்கும்போது, பொதுமொழி அதன் கூறுகள் சிலவற்றைத் தான் மேற்கொண்டு நெருங்கி வருகிறது. இவ்வாறு ஒரு வகை சமநிலை காக்கப்பட்டு வருகிறது.

டாஸ்மேனியாவில் வாழ்ந்த பழங்குடிமக்கள் சிறு தொகையினர். ஆயினும், நாகரிகமில்லாத மக்கள் ஆகையால், அந்தச் சிறு தொகையினர்க்குள் நான்கு கிளைமொழிகள் இருந்து வந்தன. கண், காது, தலை முதலிய உறுப்புக்களை உணர்த்துவதற்கும் அந்த மொழிகளில் வெவ்வேறு சொற்கள் இருந்து வந்தனவாம்.

எஸ்கிமோக்களின் பேச்சிலும் கிளைமொழிகள் பலவாக இருந்தனவாம். ஒவ்வோர் இடத்தாரும் ஒவ்வொரு கிளைமொழியைப் பேசினார்களாம். கடைசியில் அவர்களுக்குப் பொதுவாக ஆண்டுதோறும் சந்தைவிழா ஒன்று நடத்த ஏற்பாடு செய்யப்பட்ட பிறகு தான் அவர்கள் எல்லோரும் பொதுவாக உணர்ந்துகொள்ளக்கூடிய மொழி வளர்ந்ததாம். மக்கள் ஒன்றுசேரத் தலைப்பட்டதால், இவ்வாறு பொது மொழிகள் வளர வழி அமைகிறது.

**மாறுதல் இயற்கை**

கிளைமொழிகளுக்குள்ளும் நாளுக்கு நாள் வேறுபாடுகள் பலவாய்ப் பெருகுவதற்குக் காரணம், சமுதாயத்தில் உள்ள பலவகைக் குழுக்கள் ஒன்றோடொன்று பழகுவதிலும், தனிமனிதர் பல குழுக்களோடு பழகுவதிலும் உள்ள பலவகை வேறுபாடுகளே ஆகும். இவ்வேறுபாடுகளே கிளைமொழிகள் வேறுபடுவதற்கும் மாறுவதற்கும் காரணமாக அமைகின்றன. ஒருவர் தம் கூட்டத்தைவிட்டு மற்றொரு கூட்டத்துடன் பழக நேரும் போது, தம் கூட்டத்தார் பேசும் கிளைமொழியின் கூறுகள் சிலவற்றை அங்குக் கொண்டு சென்று பரப்புகிறார். இவ்வாறு கிளைமொழிகள் ஒன்றோடொன்று கலந்தவண்ணம் மாறுதல்கள் மெல்ல மெல்ல ஏற்பட்டுக் கொண்டிருத்தல் இயல்பாகிறது.

## பொதுமொழி

**பொதுமொழி அமைதல்**

பல்வேறு குடும்பத்தார், பல்வேறு கூட்டத்தார் என முதலில் மக்கள் பிரிந்து பிரிந்து அமைந்திருத்தலே இயற்கை. அதற்குப் பிறகு நாளடைவில் பேரினமாய்த் திரண்டு, முடிவில் நாடு - ஒரு நாட்டினர்- எனப்படும் நிலைமை ஏற்படுகிறது. மொழித்துறையிலும் இவ்வாறே தொடக்கத்தில் பலவகை வேறுபாடுகள் உடைய

சிறுசிறு கிளைமொழிகளாகத் தோன்றி வளர்ந்து, நாளடைவில் அத்தனைக்கும் பொதுமொழியாய் ஒன்று தலையெடுக்கின்றது. இனங்களுக்கும் இடங்களுக்கும் ஏற்ப வெவ்வேறாக இருந்த மொழிகள் மெல்ல மெல்ல மறைந்து, பொதுவான பெருமொழி ஏற்படுகிறது. அந்தப் பொதுமொழி எது எனில், முன் இருந்த கிளை மொழிகளுள் ஒன்றே. மற்றக் கிளைமொழிகளைவிட இதற்குத் தனிச்சிறப்பு இருந்ததாகவும் கூறமுடியும். ஓர் இனமோ இடமோ வழங்கி வந்த அந்தக் கிளைமொழியையே அடுத்துள்ள இனங்களோ இடங்களோ மெல்ல மெல்லக் கற்றுக் கொள்ளும் சூழ்நிலை அமைந்துவிடுகிறது. மொழிக்கு ஒரு தனிச்சிறப்பு இல்லை எனினும், அதைப் பேசிய மக்களுக்கோ இடத்துக்கோ உள்ள சூழ்நிலைச் சிறப்பால், அந்த கிளைமொழியை மற்றவர்களும் கற்றுப் போற்றும் காரணம் ஏற்பட்டுவிடுகிறது.

தமிழ்மொழி என்று இன்று போற்றப்படும், இது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் ஒரு பகுதியில் பேசப்பட்டுவந்த கிளைமொழியிலிருந்து வளர்ந்திருக்கலாம். அதை அடுத்திருந்த கிளைமொழிகள் படிப்படியே மறைந்து போவதற்கு வேண்டிய காரணங்கள் ஏற்பட்டு, இந்தக் கிளை மொழியே பொது மொழியாய் நாடெங்கும் பரவியது எனலாம்.

**காரணங்கள்**

கிளைமொழியிலிருந்து பொதுமொழியில் இடம்பெறும் கூறுகள் எவை? இடம்பெறாமல் மறைவன எவை? இன்னவை என்று வரையறுத்துச் சொல்வது இயலாது. செல்வாக்கில் உள்ளவர்கள் கூறுவனவற்றிற்குச் சில வேளைகளில் மதிப்பு ஏற்பட்டு, அவை பொதுமொழியில் வாழ்வு பெறுகின்றன. சில வேளைகளில், நாட்டின் தலைநகர் போன்று சிறப்புப் பெற்ற இடங்களில் வழங்குவன வாழ்வு பெறுகின்றன. சில வேளைகளில் இலக்கிய ஆட்சி பற்றிச்

சில கூறுகளுக்கு மதிப்பு ஏற்படுகின்றது. உயர்ந்தவர் எனப்படும் மக்களால் வழங்கப்படுவன ஏற்கப்படுதலும் உண்டு. இலக்கண விகுதிகளுக்கு உட்பட்டவை ஏற்கப்படுவனவும் உள்ளன. பெரும்பான்மையான மக்களால் பேசவும் போற்றவும் படும் கூறுகள் பொதுமொழியில் இடம் பெறுதலும் இயற்கையாகும். காலப்போக்கில், செல்வாக்கு, இடச்சிறப்பு, இலக்கிய ஆட்சி, உயர்ந்தோர் ஆட்சி, இலக்கண அமைதி, ஒலிநயம் முதலிய காரணங்களைவிடப் பெரும்பாலோரின் போற்றுதல் சிறந்த காரணமாக விளங்குகிறது.

**இலக்கியமொழி பொதுமொழியா?**

பொதுமொழி என்று குறிக்கப்படுவது வேறு, இலக்கிய மொழி வேறு. பொதுமொழி மக்கள் எல்லோருக்கும் விளங்குவது. இலக்கியமொழி கற்றுத் தேர்ந்த சிலர்க்கு மட்டும் விளங்குவது. பொதுவாக எழுதத் தெரிந்த எல்லோராலும் எழுதப்படுவது பொதுமொழி. புலமை நிரம்பித் தேர்ந்த சிலரால் எழுதப்படுவது இலக்கிய மொழி. குழூஉக்குறியாக வழங்கும் சொற்களைக் கற்றுக் கொள்ள வாய்ப்பும் பயிற்சியும் தேவையாவது போல், இலக்கிய மொழியைக் கற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பும் பயிற்சியும் தேவை. அதுபற்றி இலக்கியமொழியைச் செயற்கை மொழி என்று கூறுதல் உண்டு. வெண்ட்ரியே என்னும் அறிஞர் இக்காரணத்தால் இலக்கிய மொழியை ஒரு வகைக் குறுமொழி என்றும் குறிப்பிடுகிறார். ஆதலின் இலக்கியமொழி வேறு, பொதுமொழி வேறு எனத் தெளிதல் வேண்டும்.

**சிறப்புக்கள் அமைதல்**

எந்தக் கிளைமொழி சிறந்த அறிஞர்களின் போற்றுதலை பெற்று இனிய ஒலிநயம் மிக்கதாக விளங்குகிறதோ அது மற்றைய கிளைமொழிகளை விடச் சிறந்து விளங்கி, அவை வழங்கும் இடங்களை எல்லாம் கைப்பற்றி அந்நாட்டுப்

பொது மொழியாய் வளர்ந்துவிடும் என்கிறார் அறிஞர் விட்னே. இக்கால மொழி நூலார் இக்கருத்தை உடன்படுவதில்லை. அரசியல் முதலிய செல்வாக்கின் காரணமாக எந்தக் கிளை மொழி தலையெடுத்துப் பொதுமொழியாக வளர்கின்றதோ அதற்கு மேற்கூறிய சிறப்புக்கள் எல்லாம் தாமே வந்து அமைகின்றன என்பர் இன்றைய மொழியியல் அறிஞர்.

**ஒரு பொருட் கிளவிகள்**

பூனையின் இளமைப் பெயராக ஒன்றும், மாட்டின் இளமைப் பெயராக மற்றொன்றும் இலக்கியத்தில் உள்ளன. இவ்வாறு இருக்கக் காரணம் ஒவ்வொரு விலங்கின் இளமைக்கும் ஒவ்வொரு பெயர் இருக்கவேண்டும் என்பது அன்று. பூனையின் இளமைப் பெயராகக் கிளைமொழி ஒன்றில் குட்டி என்பது வழங்கியிருக்கலாம். கிளைமொழியிலிருந்து பொதுமொழிக்குச் சொற்கள் புகுதல் இயற்கையாகையால் குட்டி என்று சொல் இந்தக் கிளைமொழியிலிருந்து புகுந்து பொதுமொழியில் சில விலங்குகளைப் பொறுத்தவரையில் வழங்கி நின்றிருக்கலாம். குட்டி, கன்று என்ற இரண்டு இளமைச் சொற்களையும் ஏற்று பொதுமொழி, முன்னதைச் சில வற்றிற்கும் பின்னதை வேறு சிலவற்றிற்கும் வழங்கியிருக்கலாம். இலக்கியம் எழுதுவோர் அந்த மரபை மறவாமல் போற்றி வந்தனர். அதனால் இலக்கணம் எழுதிய ஆசிரியர் அந்த மரபை ஆராய்ந்து இன்ன இன்னவற்றிற்கு இன்ன இன்ன சொற்கள் என்று விளக்கிச் சென்றனர்.

காலப்போக்கில் சொற்களில் காலத்தைச் செலவிடாமல், கருத்துக்கள் வளர்ந்து அவற்றில் உள்ளத்தைச் செலுத்தும் அறிவு வளர்ச்சி மிக்க நிலையில் பலவகைச் சிறப்புச் சொற்களை விட்டு ஒருசில பொதுச்சொற்களை மட்டும் மக்கள் போற்றத் தலைப்படுகின்றனர். ஐரோப்பாவில் உழவர் ஆயர் வேட்டுவர் முதலானோர் ஒவ்வொரு வகை விலங்குகளுக்கும் ஒவ்வொரு இளமைப்பெயர்

வழங்குகின்றனராம். ஆயின் பொதுமொழியிலோ இலக்கிய மொழியிலோ பொதுவான இளமைப்பெயர் மட்டுமே பயின்று வழங்குகின்றது.

தொடக்கத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு கூட்டத்தார் ஒவ்வொரு பெயர் வைத்திருப்பர். தமிழ் நாட்டிலேயே ஒரு பகுதியினர் ‘மலர்’ என்றும், அதையே மற்றொரு பகுதினர் ‘பூ’ என்றும், இன்னொரு பகுதியினர் ‘வீ’ என்னும் பெயராலும், வேறொரு பகுதியினர் ‘போது’ என்னும் பெயராலும் வழங்கியிருப்பர். இவ்வாறே பல ஊர்களில் பல பெயர்கள் வழங்கியிருக்கக்கூடும். நாளடைவில் ஒலி நயமில்லாத பெயர்கள், செல்வாக்கில்லாதவர்கள் வழங்கிய பெயர்கள், தெளிவில்லாத பெயர்கள் எல்லாம் அழிய ‘மலர்’, ‘பூ’ என்ற இரு சொற்கள் மட்டும் நின்றன. பேச்சு வழக்கை மட்டும் நோக்கினால், பூ என்ற ஒரு சொல் மட்டுமே இன்று உள்ளதாகக் கூறலாம். ‘வீ’ என்ற சொல்லும் ‘மலர்’ என்ற சொல்லும் இலக்கியங்களில் இடம் பெற்றுவிட்டமையால் இன்று வரையில் அறியப்படுகின்றன. அவற்றுள்ளும், ‘வீ’ என்பது பிற்கால இலக்கியங்களில் இடம் பெறாமல் ‘மலர்’ என்ற ஒன்றுமட்டுமே இலக்கிய வாழ்வு பெற்றது. இலக்கியம் இல்லையாயின், அதுவும் மறக்கப்பட்டு ‘பூ’ என்ற ஒரு சொல்லே நின்றிருக்கும். இவ்வாறே தமிழ்நாட்டில் ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறு பகுதியில் பெயர் வழங்க, பல சொற்கள் இருந்திருக்கும், நாளடைவில் செல்வாக்கு, தெளிவு, ஒலிநயம் முதலிய காரணங்களால் ஒன்றுமட்டும் வாழ, மற்றவை அழிந்தன.

இவ்வாறே வினைச்சொற்களிலும் ஒரு கிளைமொழியார் ‘விடு’ என்பதன் இறந்தக்காலமாக ‘விடுத்து’ என்பதை வழங்கியிருக்க, மற்றொரு கிளைமொழியினர் ‘விட்டு’ என்பதை வழங்கியிருப்பர். நாளடைவில் பின்னது பொதுமொழியில் நிலைத்துவிட்டது. ‘விடுத்து’ என்பது இலக்கியங்களில் சில

இடங்களில் மட்டும் காணப்படுகிறது. ‘கொடு’ என்பதன் இறந்தகாலமாகக் ‘கொடுத்து’ என்பதே பொதுமொழியில் வழங்குகிறது. ‘கொட்டு’ என்பது தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் கிளைமொழியில் வழங்கியிருந்து மறைந்திருக்கக்கூடும். இன்றும் கன்னடமொழியில் ‘கொட்டு’ என்பதே இறந்தகால வினையெச்சமாக வழங்கிவரக் காணலாம்.

இவ்வாறு கிளைமொழிகளில் உள்ள வேறுபாடுகள் பொது மொழியில் புகுந்து இடம்பெற்றபோதிலும், அவை படிப்படியாய் மறைய, ஒரு பொதுத்தன்மை நிலவக் காணலாம்.

## சிறப்பு மொழி

**வேறுபடும் வகை**

வழக்கறிஞர்களின் சட்ட நூல்களையும் விளக்கங்களையும் படித்தால், அவர்களின் மொழியில் சிறப்புக் கூறுகள் சில காணலாம். அவர்கள் நீதிமன்றங்களில் வழக்காடும்போது பேசும் பேச்சில் அவற்றை மிகுதியாகக் கேட்கலாம். எல்லோரும் பேசும் பொதுமொழி அவர்களின் எழுத்திலும் பேச்சிலும் உண்டு. அந்தப் பொதுமொழியோடு, இத்தகைய சிறப்புக் கூறுகளும் கலப்பதால், அவர்களின் மொழி வேறுபட்டு நிற்கின்றது.

சமய அறிஞர்களின் எழுத்திலும் பேச்சிலும் இவ்வாறே பொதுமொழியுடன் கலந்துள்ள சிறப்புக்கூறுகள் உள்ளன. அதனால் அவர்களின் மொழியும் வேறுபட்டு நிற்கின்றது.

வாணிகத் துறையிலும் மருத்துவத் துறையிலும் ஈடுபட்டுள்ளவர்களின் மொழியிலும் இத்தகைய சிறப்புக் கூறுகள் சில உள்ளன. தொழிலாளர்களின் மொழிகளும் இவ்வாறே வேறுபடுகின்றன. உழவர்களின் மொழிக்கும்

கொல்லர்களின் மொழிக்கும் வெவ்வேறு சிறப்புக் கூறுகள் உள்ளன. நாட்டுப்புறக் கணக்கர்க்கும் அரசாங்கத்தின் தலைமை அலுவலகங்களின் கணக்கர்க்கும் மொழித்துறையில் வேறுபாடு உண்டு.

இவ்வாறு தொழில் முதலாய காரணம்பற்றி அமையும் குழுவினர்க்குள் மொழியில் அமையும் சிறப்புக் கூறுகளைக் கருதி, அவர்களின் மொழிவகைகளைச் சிறப்பு மொழிகள் எனக் கூறுவர். அவற்றையும் கிளை மொழிகள் என்றோ குறுமொழிகள் என்றோ கூறுவோரும் உள்ளனர்.

இத்தகைய சிறப்புமொழிகளில் பொதுமொழியின் கூறுகள் மிகுந்திருக்கின்றன. சிறப்புக் கூறுகள் சிற்சிலவே உள்ளன. எனவே, இவை யாவும் பொதுமொழியிலிருந்து வளர்ந்தவைகளே என்றும், சட்டம் சமயம் வாணிகம் முதலிய துறைகளுக்குப் பயன்படுமாறு பொதுமொழியைச் சிறிது வேறுபடுத்தி அமைத்துக் கொண்டவைகளே என்றும் உணரலாம். வேறுபாடுகள் எவ்வளவில் நிகழ்கின்றன எனின், சொற்றொடர், சொல்லிலக்கணம் முதலியவற்றில் அல்ல. சில புதிய சொற்கள் இடம்பெறுகின்றன. சில பழைய சொற்களுக்குப் புதிய பொருள்கள் கற்பிக்கப்படுகின்றன. இவ்வளவே வேறுபாடு எனலாம்.

**உயர்வு தாழ்வு**

பொதுமொழியின் மீது வளர்ந்தமைந்த சிறப்புக் கூறுகளுள் உயர்ந்தனவும் உண்டு, தாழ்ந்தனவும் உண்டு. சமய அறிஞர், சட்ட அறிஞர் உரையாசிரியர் முதலியவர் படைத்து வழங்கும் சிறப்புக் கூறுகள் உயர்ந்தவை. பள்ளிச் சிறுவர், இழிதொழிலோர், சிறைக் கைதிகள், போக்கிலிகள் முதலியவர் படைத்து வழங்கும் சிறப்புக் கூறுகள் இழிந்தவை. இத்தகைய இழிந்த கூறுகளை மட்டும் கொச்சைச் சொற்கள் என்ற பெயரால் வழங்குதல் உண்டு. உண்மையை

ஆராய்ந்தால், இந்த உயர்வும், தாழ்வும் அவற்றை வழங்கும் மக்களின் உயர்வுதாழ்வுக்கு ஏற்றவாறு அமைந்தனவே அல்லாமல், அந்தந்தச் சொற்களின் உயர்வு தாழ்வு கருதி அமைந்தன அல்ல. பள்ளிச் சிறுவன் **‘தண்டனை கிடைக்கும்’** என்பதைப் ‘பூசை விழும்’ என்கிறான். குற்றவாளி ‘சிறை’ என்பதை ‘மாமியார் வீடு’ என்கிறான். இவர்களின் நிலையை நோக்கி இவர்கள் வழங்கும் சொற்களைக் கொச்சைச் சொற்கள் என்கிறோம். சமய அறிஞர் உணவைத் ‘திருவமுது’ என்று கூறும்போது அவ்வாறு இழிவுள்ளதாகக் கூறுவதில்லை. சட்ட அறிஞர் முதலானோர் பேசும் சொற்களையும் அவ்வாறு இழிவாகக் கருதுவதில்லை. இவர்களின் உயிர்நிலை நோக்கி, இவர்கள் வழங்கும் சொற்களைச் சிறப்புக்கூறுகள் என்கிறோம்.

வழங்கும் மக்களின் நிலையை மறந்து, இந்தச் சொற்கள் புதிய பொருளுடன் வழங்கப்படும் காரணத்தையும் தன்மையையும் மட்டும் ஆராய்ந்தால், கொச்சைச் சொற்கள் எனவும் சிறப்புக் கூறுகள் எனவும் வேறுபாடு செய்ய வேண்டியதில்லை என உணரலாம். இருவகை மொழிகளையும் ‘சிறப்பு மொழிகள்’ என்ற இப் பெயரால் குறிப்பிடுதல் பொருந்துவதாகும். எல்லாம் அந்தந்தத் துறைகளின் தேவைகளை ஒட்டிப் புத்துணர்ச்சி தரும் வகையில் ஆக்கப்படுவனவே. உயர்ந்தோர் ஆயினும், இழிந்தோர் ஆயினும் தம் தம் சூழலில் சில புதிய கருத்துத் தெளிவை ஏற்படுத்துவதற்காகவே புதிய சொற்களைப் படைக்கின்றனர். அல்லது பழைய சொற்களுக்குப் புதிய பொருள்களைக் கற்பிக்கின்றனர். அறிவியல் முதலிய துறைகளில் கலைச் சொற்கள் என்று படைத்துக் கொள்ளப்படும் சொற்களும் இவ்வகையைச் சார்ந்தனவே ஆகும்.

சிறப்பு மொழிகள் அந்தந்தக் குழுவினர் தமக்குள் பயன்படுவதற்காகத் தாமே வேண்டுமென்று பொதுமொழியுள் சிலவற்றை மாற்றி அமைத்துக் கொண்டவை. மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு நிற்கும் முயற்சியை அடிப்படையாகக் கொண்டவை. எனவே அவை பொதுமொழியின் மீது வளர்ந்து அமைந்தவை எனலாம்.

**கிளைமொழியும் சிறப்புமொழியும்**

கிளைமொழிகள் என்பவை வேறு. அவை இயற்கையாக அமைந்தவை. இயற்கைப் பிரிவுகளாலோ, அரசியல் சமூகப் பிரிவுகளோ அந்தந்த இடங்களில் வாழ்வோர் வேறுபட வழங்கும் மொழிகள் அவை. மற்றவர்களிடமிருந்து வேறுபட வழங்கும் மொழிகள் அவை. மற்றவர்களிடமிருந்து வேறுபட வேண்டும் என்ற முயற்சி இவற்றைப் பேசுவோரிடம் இல்லை. வேறுபாடு அவர்கள் அறியாமல் இயல்பாகவே அமைந்து விடுகின்றது. இயல்பாக வேறுபட்டு நின்று வாழும் இவற்றினின்றும் வளர்ந்த மொழியே பொதுமொழியாகும். எனவே சிறப்புமொழிகள் பொதுமொழியின் மீது வளர்ந்தது பால் அல்லாமல், கிளைமொழிகள் பொதுமொழியின் வளர்ச்சிக்கே அடிப்படையாய் உள்ளவை.

மற்றொரு வேறுபாடும் உள்ளது. கிளைமொழியை ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள எல்லோரும் பேசுவர். ஆயின், சிறப்புமொழி ஒரே இடத்தில் அவரவர் மனப்பான்மைக்கும் தொழிலுக்கும் ஏற்ப வேறுபாடு பெறும். பொருள் விளங்கும் முறையில் கிளைமொழிக்கும் சிறப்பு மொழிக்கும் வேறுபாடு உள்ளது. ஆற்றின் வடகரையில் வாழ்வோர் பேசும்மொழி தென்கரையினர்க்கு ஏறக்குறைய விளங்கும். தென்கரையினரின் கிளைமொழியும் வடகரையினர்க்குப் பெரும்பாலும் விளங்கும். ஆயின், சிறப்புமொழி இவ்வாறு விளங்குதல் அரிது. மருத்துவர் இருவர் பேசிக்கொள்ளும் மொழி மற்றவர்க்கு எளிதில் விளங்காது. வாணிகரின்

பேச்சு வாங்குவோருக்குத் தெரியாது. ஒரு சமயத்தைச் சார்ந்தோரின் சொற்கள் பல மற்றொரு சமயத்தாருக்கு விளங்குவதில்லை. விளங்க வேண்டுமாயின் அவர்களோடு கலத்தலும் சில காலம் பழகுதலும் வேண்டும். கலந்து பழகும் வாய்ப்பு இல்லாவிடின் விளங்க வழி இல்லை. தச்சுத்தொழில், மருத்துவ தொழில் முதலியவற்றில் முதலில் இடம் பெற்று, இடம்பெற்றபின் பழகும் வாய்ப்பும் பெற்றாலன்றி, அந்தந்தத் தொழில் நுட்பங்கள் விளங்குவதில்லை. அதைப்போலவே சிறப்பு மொழியும் அந்தக் குழுவினரிடையே பழகும் வாய்ப்பும் பெற்றவர்களுக்கே விளங்கக் கூடியதாகும்.

**இலக்கிய மொழி**

இந்தக் காரணம் பற்றியே, சட்ட நூல்கள், சமய நூல்கள், மருத்துவ நூல்கள் முதலியவற்றைக் கற்கப் புகுவார்க்கு வல்லார் ஒருவரின் துணை இன்றியமையாததாக உள்ளது. பழங்காலத்து இலக்கியத் துறையிலும் இத்தகைய துணையும் பயிற்சியும் தேவையாக உள்ளன. இலக்கியத்தை ஆக்கி அளித்த புலவர்கள் தம் எழுத்திற்கென்றே தனியாக மொழியைச் செம்மைப்படுத்தி அமைத்துக் கொண்டுள்ளனர். அதனால் பழைய இலக்கிய மொழியும் ஒரு சிறப்பு மொழியே என்பது அறிஞர் வெண்ட்ரியே கருத்தாகும்.

## குறு மொழி

**செயற்கை**

பொதுமொழியிலிருந்து வேறுபட்டு இயல்பாக அமையும் மொழி கிளைமொழி. அதுபோலவே, பொதுமொழியிலிருந்து வேறுபட்டுச் செயற்கையாக அமைக்கப்படும் மொழிக்கூறுகள் சில உண்டு. இவை குறுமொழி எனக் குறிக்கப்படும். இவை இழிந்தோர் வழக்கில் பெரும்பாலும் இருத்தலால்,

பொதுவாககக் கற்றவரால் விலக்கப்படும். பள்ளிகளில் ஒன்று சேர்ந்து விளையாடும் மாணவர்கள், திருடர்கள், கள்ள வாணிபம் செய்வோர் முதலிய பல குழுவினர் தமக்குள் வழங்கும் மொழிகள் இவ்வகையைச் சாரும். பொதுமொழியில் உள்ள சில சொற்களுக்கே இவர்கள் வேறு பொருள்களைக் கற்பித்து வழங்குவர். **'அளக்கின்றான்'** என்றால் நெல் முதலியவற்றைச் சில கருவிகளால் அளக்கின்றான் என்பது பொதுமொழியின் பொருள். ஆயின், **'விரிவாகப் பேசுகிறான்' 'பொய் மிகக் கலந்து பேசுகிறான்'** என்று பொருள்பட இன்று சில வேளைகளில் வழங்கப்படுகிறது. **'நடந்து காட்டு', 'கம்பி நீட்டு'** என்பவற்றிற்கு **'இன்னும் இங்கே நிற்காமல் உடனே போய்விடு'** என்பது பொருளாவதும் அப்படியே ஆகும். இவ்வாறு நோக்கினால் ஒவ்வொரு சாராரிடத்தும் தனிச் சிறப்பாக உள்ள மொழி எல்லாம் குறுமொழியே ஆகும்.

**கவர்ச்சியும் வேறுபாடும்**

மொழிவழக்கை இயல்புவழக்கு, தகுதிவழக்கு என இருவகையாகப் பகுத்து இடக்கரடக்கல் மங்கலம் குழூஉக்கறி என்பன மூன்றும் தகுதிவழக்கு என இலக்கணம் கூறும். இவற்றுள் குழூஉக்குறி என்பது குறுமொழியைச் சேர்ந்ததாகும்.

> **"இலக்கண முடையது இலக்கணப் போலி**
> **மரூஉ என் றாகும் மூவகை இயல்பும்"**
> **"இடக்க ரடக்கல் மங்கலம் குழூஉக்குறி**
> **எனுமுத் தகுதியோடு ஆறாம் வழக்கியல்"**

இக் குறுமொழி, குறுகிய ஒரு கூட்டத்தார் தமக்குள் வழங்கி மகிழ்வதற்காக ஏற்படுத்திக்கொள்ளும் செயற்கை மொழி. பெரும்பாலும் குறும்பு மனப்பான்மையாலும் சிறுபான்மை உயர்வு மனப்பான்மையாலும் படைக்கப்படுவது

பொதுமொழி போலவோ, கிளைமொழி, போலவோ நெடுங்காலம் நின்று வாழும் தகுதியின்றி, குறுகிய காலமே வாழ்ந்து மறைவது பெரும்பாலும் இளைஞர்களும் குறுமக்களாகிய இழிந்தோரும் வழங்குவது. உயர்ந்த மக்களும் சிறிது நேரம் சிறுவர் மனப்பான்மையுடன் பேசுமிடத்து வழங்குவது.

குறுமொழி, இளைஞர்களிடத்து மிகுதியாக வழங்குகிறது என்றும் அவர்களுக்குள்ளும் பெண்களைவிட ஆண்களிடத்து மிகுதி என்றும் சுவையற்றுப்போன பழஞ்சொற்களை விட்டுக் கவர்ச்சியான புதுச்சொற்களைப் பேசும் மொழி விளையாட்டு அது என்றும், மக்களுக்கு இயல்பான வேடிக்கை வேட்கை அதன் அடிப்படையில் உள்ளது என்றும் கூறுவர். குறுமொழிகளைப் படைப்பவர் மற்றவர்களைவிடத் தாம் ஒருவகையில் வேறுபட்டவர்களாக விளங்கவேண்டும் என்று விரும்புவதால் அவ்வாறு தமக்குள் ஒருமொழி படைக்கின்றனர் என்றும் கூறுவர், ஒவ்வொரு சமயத்தாரும் தமக்கெனப் படைத்துக் கொள்ளும் சொல்வழக்குகள் இவ்வகையைச் சாரும் என்பது மொழியியலறிஞர் சிலரின் கருத்தாகும்.

நகைச்சுவையோடு மகிழ்ந்து பொழுதுபோக்கும் போது குறுமொழி மிகுதியாக இடம் பெறுவதுபோலவே, பிறர்மேல் கொள்ளும் வெறுப்பும் குறுமொழிக்குக் காரணமாக அமைதல் உண்டு.

**கொச்சை அன்று**

நாகரிகம் அற்ற கொச்சை மொழி வேறு. குறுமொழி வேறு, இழிவான கொச்சை மொழிகளையே குறுமொழி எனக் கருதுதல் தவறு. இத்தவறு ஏற்படக் காரணம், குறுமொழியாகும் சொற்களைப் படைப்பவர். சிலவேளைகளில் பேச்சுமொழியில் உள்ள கொச்சைச் சொற்களை எடுத்து வழங்கி அவற்றைக் குறுமொழியாக்கும் போக்கே ஆகும். ஒரு சில கொச்சைச் சொற்கள்

குறுமொழியாகக் கொள்ளப்படுதல் பற்றி, கொச்சைச் சொற்கள் எல்லாம் குறுமொழி என்றோ, குறுமொழி எல்லாம் கொச்சை என்றோ கூறுதல் பொருந்தாது.

**பாட்டுமொழி வேறு**

பாட்டில் அமையும் மொழி, குறுமொழியோடு நெருங்கிய தொடர்பு உடையது என்கிறார் யெஸ்பர்ஸன். பழக்கப்பட்டுக் கவர்ச்சி குறைந்துபோன சொல்வழக்குகளை விட்டு உணர்ச்சி மிகுந்த வேறு பல சொற்களையே புலவர்கள் விரும்பி அமைத்துப் பாடுகின்றனர். குறுமொழியில் பெரும்பாலும் விளையாட்டு மனப்பான்மை இருக்கிறது. பாட்டில் கலையழகைப் போற்றி உயர்வை நாடும் மனப்பான்மை இருக்கிறது. இவ்வளவே வேறுபாடு, கவர்ச்சியையும் அதற்காக வேறுவேறு சொற்களையும் நாடுவதில் பாட்டு மொழியின் போக்கும் குறுமொழியின் போக்கும் ஒன்றாகவே உள்ளது எனலாம். பாட்டுமொழி வேண்டுமென்று குறிப்பிட்ட கலைநோக்குடன் படைக்கப்படுகிறது. ஆதலின் அது, சட்டமொழி முதலியவை போல சிறப்புமொழி என்று கூறத்தக்கதாகும்.

## குழந்தை மொழி

**குழந்தையும் பெற்றோரும்**

மொழியின் தோற்றத்தை அறிவதற்குக் குழந்தை மொழி பற்றிய ஆராய்ச்சி பெரிதும் பயன்படும் என்று சிலர் நம்பினர். மொழி முதலில் தோன்றி வளர்ந்த நிலை வேறு, ஒரு குழந்தை, மொழியைக் கற்று வளரும் நிலை வேறு. பல்வகை அமைப்பும் நிறைந்து பண்பட்ட மொழியையே குழந்தை கற்கத்

தொடங்குகின்றது. ஆதலின் குழந்தைமொழியை ஆராய்வது, மொழி கற்கப்படும் முறையை உணர்வதற்கே பெரிதும் பயன்படும்.

மனிதன் தன் வாழ்நாளில் பெறுவதற்கு அரிதாய்ப் பெற்ற பெருஞ்சிறப்பு, மொழி பேசக் கற்ற நிலையே, குழந்தைப் பருவத்தில் முதல் மூன்று நான்கு ஆண்டுகளில் கற்கும் அவ்வளவு கல்வியை வேறு எந்த மூன்று ஆண்டுகளிலும் மனிதன் கற்பதில்லை. இத்துணை முயற்சியும் முயற்சிக்கு ஏற்ற பயனும் உள்ள வாழ்வின் பகுதி ஆராய்ச்சிக்கு உரியதாகும்.

குழந்தைப் பருவத்தில் மொழியைக் கற்கும்போது செய்யப்படும் முயற்சி மிகப் பெரிது. ஆயினும் அது துன்பமாகவே உணரப்படுவதில்லை. எல்லாம் இயல்பாகவே நடைபெறுவதால் எள்ளளவும் துன்பம் இல்லை. அதற்கு மாறாக நாள்தோறும் புதுமையே காணப்படுவதால் அக்கல்வி இன்பம் நிறைந்ததாக உள்ளது. கற்கும் குழந்தையும் இன்புறுகின்றது. கற்றலைக் காணும் பெற்றோரும் இன்புறுகின்றனர்.

குழந்தை கற்கும்போது நேரும் வழுக்களுக்குக் கணக்கில்லை. ஆனால் அவ்வாறு வழு நிறைந்த மழலையே இன்பத்திற்குக் காரணமாக விளங்குகின்றது. வழுக்கள் குறையக் குறைய, பிழையின்றிப் பேசுதல் பெருகப் பெருக, குழந்தையின் பேச்சில் இன்பம் குறைகின்றது. போலும்! இரண்டாம் ஆண்டில் குழந்தை பேசும் பேச்சில் பிறக்கும் அவ்வளவு இன்பம், ஐந்தாம் ஆண்டில் பேசும் பேச்சில் இல்லை யன்றோ?

சிறந்த இனிமை பயப்பனவாகத் தமிழர் கருதியன யாழும் குழலும் ஆகும். திருவள்ளுவர் அவற்றின் இனிமையைக் குறை கூறவில்லை. ஆயினும், குழந்தையின் மழலைச்சொல் பயக்கும் இன்மையைப் பாராட்டும் போது,

**குழலினிது யாழினி தென்பதம் மக்கள்**

**மழலைச்சொல் கேளா தவர்**

என்று போற்றுவாராயினார்.

மொழிக்கு இனிமை நிரம்புதல் இருவகையாலாகும். ஒன்று சொல்லும் சொற்களாலேயே அமையும் ஒலியின்பம், மற்றொன்று அவற்றின் பொருளால் அமையும் கருத்தின்பம். குழந்தையின் மழலையில் யாழிசை போன்ற ஒலியின்பமும் காணோம், அதற்குக் குழந்தையின் கருத்தைப் புலப்படுத்தும் ஆற்றலும் இல்லை. பெற்றோர் அதன் பொருளை அறிய முடியாமலிருந்தும் இன்புறுகின்றனர். இதனை உணர்ந்து வியந்தார் ஔவையார் என்னும் புலவரும் ஆவர்.

**மூவகை நிலை**

குழந்தை மொழியைக் கற்கும் நிலை மூவகைப்படும். அவை அழுநிலை, செங்கீரைநிலை, பேச்சுநிலை எனப்படும்.

**அழுநிலை:** குழந்தை பிறந்ததும் அழுகின்றதா என்று கேட்பதும், அழுகுரல் கேட்டு பெற்றோர் அகமகிழ்வதும் வழக்கம். அழு நிலையில், ஒரு கருத்தை உணர்த்தும் நோக்கம் குழந்தைக்கு முதலில் எழுவதில்லை. இயல்பாகப் பெற்ற அந்த ஆற்றலை நாளடைவில் ஒரு நோக்கத்திற்குப் பயன்படுத்திக்கொள்கிறது.

**செங்கீரை:** குழந்தையின் வாயில் பிறக்கும் ஒலிகள் செவிக்கு இன்பம் பயக்கும் ஒலிகளாகும். இந்த ஒலிகளே அடுத்த நிலையில் சொல்வடிவு பெறுவன. குழந்தை விளையாட விரும்பும் முதல் விளையாட்டில் குழந்தைக்கு விளையாட்டுக் கருவியாய்க் கிடைப்பது அதன் நாக்கே. நாக்கு முதல் அசைந்த அசைவுகள் தன்மையறியாமல் நடைபெற்றன. குழந்தை அந்த நாக்கை

இப்போது கருவியாய்ப்பெற்றது. அதனைக் கொண்டு விளையாடத் தொடங்குகின்றது.

**ஒலி வளர்ச்சி**

படிப்படியே குழந்தை பெற்றோர்போல் ஒலிக்க முயலும், அப்போது புதிய பல ஒலிகளும் அதன் வாய் மலரில் மணக்கும். பால் குடிப்பதோடு வேறு திண்பண்டங்களும் பழக்கங்களும் உண்ணத் தொடங்கி நாக்கும் வாயும் பெற்றுக்கொண்டே வளரும் பெற்றோரின் பேச்சில் கேட்ட பல ஒலிகளைத் தானும் ஒலிக்க முயலும். இதுவே அடுத்த நிலையாகும்.

**சுற்றுப்புற மொழி**

குழந்தையின் பெற்றோர் பேசும் மொழியும் சுற்றுப்புற மொழியும் ஒன்றாகவே இருந்தால், குழந்தை அந்த மொழியை எளிதில் கற்றுக்கொள்ளும். அதனால் தமிழ்நாட்டில் தமிழ்க் குடும்பத்தில் உள்ள குழந்தை தமிழை எளிதில் கற்றக்கொள்ளக் காண்கின்றோம். ஆனால் பம்பாயில் உள்ள ஒரு தமிழ்க் குடும்பத்தின் குழந்தை, வீட்டில் தாய் பேசும் தமிழ்மொழியைக் கற்று வருதல் எளிதன்று. சுற்றுப்புறத்தில் பேசப்படும் இந்தி, குஜராத்தி, மராத்தி, மொழிகள் அதனைக் கவரும். பல மொழிகள் கற்பதால் குழந்தையின் இடர்ப்பாடுகளும் பெருகும். குடும்பத்தில் கற்கும் தாய்மொழியைப் போலவே சுற்றுப்புறத்தில் பேசப்படும் பிற மொழிகளும் எளிதில் பயிலப்படும் என்பது சிலர் கருத்து.

ஆனால், இது குழந்தையின் ஆற்றலையும் அதன் வயதையும் பொறுத்திருக்கின்றது. முதல் மூன்று ஆண்டுகளில் குழந்தையிடம் புதியனவற்றகைக் கற்கும் ஆற்றல் மிகுதியாக உள்ளது. வளர வளர அவ்வாற்றல் குறைந்து வருகின்றது. ஆதலின் அது தாய்மொழியை எப்போது கற்கின்றது.

பிறமொழியை எப்போது கற்கின்றது. எதற்கு மிகுதியான காலம் செலவாகின்றது என்பன போன்ற ஆராய்ச்சியின்றித் துணிய முடியாது.

ஆனால் குழந்தை இருமொழி கற்பதால், அம்மொழிகளுக்கு நேரும் தீங்கைவிடக் கற்கும் குழந்தைக்கு நேரும் இடர்ப்பாடே மிகுதி. இயற்கையாகச் சொல்லும் பொருளும் கற்று உணர்வைப் பெருக்கி அறிவை வளர்க்க வேண்டுவதான வாழ்வு, அகராதி கற்கும் வாழ்வாக மாறுதல் அந்த வயதிற்குத் தீமையே பயக்கும். குழந்தைப் பருவத்தில் இரு மொழி கற்ற எந்தக் குழந்தையேனும் வளர்ந்தபின் தேர்ந்த பேச்சாளனாகவோ, புலவனாகவோ சிறப்புற்றது உண்டோ? என்று யெஸ்பர்ஸன் வினவுகின்றார்.

# அலகு - 3

## தமிழின் தொன்மைச்சிறப்பு

உலகில் பல மொழிகள் தோன்றி வழங்கி மறைந்தொழிந்தன. ஒரு சில மொழிகள் மட்டும் இன்னும் அழியாமல் நிலைபெற்றுள்ளன. அவ்வாறு நிலைத்துள்ள மொழிகளிலும் சில பேச்சு வழக்கு இழந்து இலக்கிய மொழியாக மட்டும் தோன்றி வாழ்ந்து வருகின்றன. இவ்வாறு தோன்றி வளர்ந்து மாயும் மொழிகளுக்ககு இடையே, மிகப் பழங்காலத்திலேயே தோன்றி, செல்வாக்குடன் வளர்ந்து, இன்றளவும் வாழ்ந்து விளங்குவன தமிழ், சீனம் முதலிய சில மொழிகளே. இவற்றுள்ளும் பழைமைக்கும் பழைமையான இலக்கியவளம் உடையதாய் நிற்பதோடு, புதுமைக்கும் புதுமையாய்க் கருத்துச் செல்வம் நிறைந்ததாய் என்றும் இளமைப் பொலிவுடன் விளங்குவது தமிழ் மொழியாகும்.

ஆதலின் தமிழ்மொழி பெருமைமிக்க பழைய வரலாறு உடையதாகும்.

## செம்மொழி பெருமொழி

சுருங்கக்கூறின், சென்ற நூற்றாண்டில் ஆங்கிலேயர் உலக மக்களிடையே பெற்றிருந்த செல்வாக்கான நிலையையும் பெருமையையும் இருபது நூற்றாண்டுகளுக்கு முன்பு தமிழர் பெற்றிருந்தனர். ஒரு மொழி பேசும் மக்கள் ஆட்சி, வாணிகம் முதலாய துறைகளில் தலைசிறந்து விளங்கும் காலத்தில் அந்த மொழியும் பல்லாற்றானும் வளம்பெற்றுச் சிறப்புறுதல் இயற்கை. ஆங்கிலேயர் மாட்சியுற்று உயர்ந்திருந்த சென்ற நூற்றாண்டில் ஆங்கிலம் உயர்ந்தோங்கியது போலவே, இருபது நூற்றாண்டுகளுக்கு முன் தமிழரின் உயர்வால் தமிழும் உயர்வு பெற்றுத் திகழ்ந்தது. ஆயினும், ஒரு வேறுபாடு கூறத்தக்கது. ஆங்கிலம் உயர்ந்தோங்கிய காலத்தில் அச்சுப்பொறி, விஞ்ஞானம்,

போக்குவரவுக் கருவிகள் முதலியவை அதன் ஆக்கத்திற்குத் துணைநின்றன. ஆங்கிலேயரும் தம் வாழ்க்கையை வளப்படுத்தியதோடு தம் மொழியையும் செல்லுமிடம் எல்லாம் நிலைக்கச் செய்தனர். பழந்தமிழர் ஓங்கி உயர்ந்த காலத்தில் தமிழுக்கு இத்தகைய சிறந்த துணைக் கருவிகள் வாய்க்கவில்லை. **தமிழரும் தம் மொழியைப் பரப்புவதில் ஊக்கம் கொள்ளவில்லை,** தக்க கருவிகளும் வாய்த்து ஏற்ற முயற்சியும் செய்யப்பெற்றிருப்பின், இன்று உலகச் செம்மொழிகளுள் ஒன்றாக மட்டும் கருதப்படும் தமிழ்மொழி, உலகப் பெருமொழிகளுள் ஒன்றாகக் கருதப்படும் நிலையையும் பெற்றிருக்கலாம்.

## ஆரியகலப்பு

ஆரியர் வருவதற்குமுன் திராவிடமொழி என்பது இந்திய நாடு முழுவதும் இருந்தது. வடகிழக்குக் கணவாய்களின் வழியாக மங்கோலிய மக்கள் சிலர் வந்து கலந்தனர். பிறகு வடமேற்குக் கணவாய் வழியாக ஆரியர் வந்து சிந்துநதிக் கரையில் குடியேறி அங்கிருந்த திராவிடரோடு கலந்தனர். அவ்வாறு அவர்கள் சிந்துநதிக் கரைக்கு வந்து சேரும் முன்பு திராவிடர்கள் அங்கு நாகரிகமான வாழ்வு நடத்தி வந்தனர். ஒழுங்காக வீடுகளைக் கட்டி ஒழுங்காகத் தெருக்களையும் ஊர்களையும் அமைத்து, சிறந்த கருவிகளைச் செய்து பயன்படுத்தி வந்தனர். எழுத்துமுறை வைத்துக்கொண்டு கலைகளையும் வளர்த்து வாழ்ந்து வந்தனர் என்பதற்கு மொஹஞ்சதாரோ, ஹாரப்பா புதை பொருளாராய்ச்சிகள் சான்றுகளாக உள்ளன.

எந்த நாட்டிலும் மக்களினங்கள் கலக்காமல் இருந்ததில்லை. ஆரியர்கள் வந்து குடியேறியதும், திராவிட மக்களும் கலந்து அவர்களின் நாகரிக வளர்ச்சியையும் பழக்க வழக்கங்களையும் கற்று மேற்கொண்டனர். படிப்படியாக அரசியல் துறையிலும் சமயத் துறையிலும் செல்வாக்குப் பெற்றனர்! திராவிட

எழுத்து முறையை ஒட்டிப் புதிய எழுத்து முறையையும் வகுத்துக் கொண்டனர். கலப்பான பேச்சுமொழிலிருந்து திருத்தமான இலக்கிய மொழி ஒன்று வகுத்துக்கொண்டு அதை சமஸ்கிருதம் என்ற பெயரால் வழங்கினர். அதுவரையில் தம் செவிவாயிலாக உணரும் கலைகளாக கற்றவற்றை எல்லாம், கண்வாயிலாகக் கற்றுணரும் கலைகளாக எழுதி வைத்தனர். திராவிடரிடம் வளர்ந்துவந்த அறிவுத் துறைகளை எல்லாம் புதிய எழுத்துமொழியால் எழுதி வைத்தனர். காலப் போக்கிற்குத் தேவையான மாறுதல்களை எல்லாம் அமைத்துப் புதிய கலைகளாகவும் புதிய துறைகளாகவும் தோன்றச்செய்து அவற்றை மக்களிடையே பரப்பினர். காலத்திற்கு ஏற்ற மாறுதல்கள் அமையப்பெற்ற கலைகளை எந்தக் காலத்திலும் எல்லா நாட்டவரும் வரவேற்றுப் போற்றுதல் இயற்கை. சிந்துநதிக் கரையிலிருந்த திராவிடரும் இவ்வாறு புது வடிவு பெற்று வந்த கலைச்செல்வங்களை ஏற்றுப் போற்றினர்.

## தென் திராவிட மொழிச் சிறப்பும் வழங்கும் இடங்களும்

மனிதன் தன் மனதில் எழுந்த எண்ணங்கள் அல்லது கருத்துக்களைப் பிறருக்கு உணர்த்த விரும்பினான். அதற்காகக் கண்டறியப்பட்ட ஒரு கருவியாக மொழிப் பயன்படுகிறது. அதாவது, மனிதன் தோன்றிய பொழுது மொழி தோன்றவில்லை. அப்பொழுது, மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள், ஆகிய கூறுகளின் அடிப்படையில் மற்றவர்களுக்கு கருத்தை வெளிகொணர்ந்தன. இதை ஊமை மொழிகள் என்றும் அழைத்தனர்.

இப்பின்புலத்தில் மொழி உருவாக்க மரபு என்பது இயற்கை - தட்ப வெப்ப சூழல் - உயிரினங்கள் - உறுப்புகள் - வெளிப்பாடு - ஒலி - குறியீடு ஆகிய தன்மைகளின் ஊடாக மொழி ஆக்கம் பெறும். இவற்றில் ஒரு சில கருத்துக்களை மட்டும் வெளிபடுத்த முடிகிறது. இதில் பருப்பொருட்களை

உணர்த்த, தெரிவிக்க முடிகிறது. ஆனால், நுண்பொருட்களை உணர்த்த, தெரிவிக்க முடியவில்லை. இந்நுண் பொருட்களையும் வெளிபடுத்த மனிதன் ஒரு புதிய பரிமாணங்களை கண்டறிந்தான். அதுவே மொழியாகும்.

1812 ஆம் ஆண்டில் எல்லீஸ் என்பவரால் கோட்டை கல்லூரி உருவாக்கப்பட்டது. இது தமிழியல் ஆய்வுக்கு முக்கியமான முதல் நிறுவனமாகக் கருதலாம். அதாவது, பிரிட்டிஷ் காலத்தில் சென்னையில் அன்று நிலவிய மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்காகத் தான் இக்கல்லூரி பற்றிய சிந்தனையோட்டம் முதன் முதலில் உருவானது. ஆனால், இதற்கு முன்பாகத் தென்னிந்தியாவில் பேசப்பட்ட மொழிகளின் பெயர்களைக் கூட அறிந்திருக்கவில்லை. ஏனெனில் இவர்களின் நோக்கம் வணிகம், சமயம் பரப்புவதாகவே இருந்தன. இது தவிர சமணர்களும் பௌத்தர்களும் சமயத் தொடர்பாகவே தென்னாட்டில் குடியேறினார்கள். ஆகவே தென்னாட்டு மொழிகளைத் தாமும் அறிந்து கொண்டனர். இது மட்டுமல்லாமல் அம்மொழிகளின் வளர்ச்சிக்கும் உதவினார்கள். இவற்றினூடாக, சமயம் வணிகம் செய்ய வந்தவர்கள் எப்படி மொழியே உள்வாங்கி கொண்டார்கள் என்பது புலனாகிறது.

**“தென்னிந்தியாவின் முதன்மை மொழியான தமிழுக்குச் சிறந்த நூல்கள் இருந்தன. ஆனால் இப்போது அவை அருகியே கிடைக்கின்றன”** தமிழின் ‘உயர் வழக்கு’ பிற தென்னிந்திய மொழிகளை அறிய உதவும் ‘திறவுகோல்’ என்று மொழி அறிஞர்கள் கூறுவர்.

தென்னிந்திய பகுதிகளில் வழங்கப்பட்டு வரும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய இருபத்தைந்து மொழிகளைத் திராவிட மொழிகள் என்றழைத்தனர். இந்நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தின் பல்வெறு தனி மொழிகள் பற்றிய

ஆய்வுக் கட்டுரைகள் மொழி நூலறிஞர் பலரால் வெளியிடப்பட்டன. குறிப்பாக, ஸ்டெங்கெனோ என்பவர் 1906 இல் முண்டா மொழிகள் பற்றியும் குவி மொழிகளினை 1913இல் பிட் ஜெரால்டு என்வரும் ஆராய்ந்தனர். 1964 இல் ஜீல்ஸ்பிளாக் என்பவர் திராவிட மொழிகளின் இலக்கண அமைப்பு என்னும் நூலைப் பிரெஞ்சு மொழியில் எழுதி வெளியிட்டார்.

திராவிட மொழியைப் பற்றிய இவரது கொள்கைகள் பலவற்றைப் பேராசிரியர் தாமஸ் பர்ரோ போன்றோர் மறுத்துரைத்தனர். தாமஸ் பர்ரோ என்பவர் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத பேராசிரியராகப் பணியாற்றிய போது திராவிட மொழிகளில் திருந்தாத மொழிகள் குறித்து ஆய்வு நிகழ்த்தியுள்ளார். இக்காலத்தில் தான் திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத் திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் எனப் பிரித்து ஆராய்ந்தனர். இவற்றுள் தென் திராவிட மொழிகள் பற்றியன ஆய்வே இக்கட்டுரையில் பேசப்படுகின்றன. அவை,

- தமிழ்
- மலையாளம்
- இருளா
- கொடகு
- கோடா
- தோடா
- படகா
- கன்னடம்
- துளு

ஆகிய ஒன்பது மொழிகளாக, ஜான் சாமுவேல் தன்னுடைய திராவிட மொழிகளின் ஒப்பாய்வு என்னும் நூலின் வழி அறிந்து கொள்ளலாம். இதில் சு.சக்திவேல் தமிழ்மொழி வரலாறு நூலின் வழி தென் திராவிடம் இருளா, படகா தவிர்த்து மற்ற ஏழு மொழிகளை கொண்டது என்று 1961 ஆம் ஆண்டு மக்கள் கணிப்பு வழி விளக்கியுள்ளார்.

இவற்றுள் தமிழும் மலையாளமும் மிகத் தொன்மையான காலத்தில் பிரிந்ததால் ஒன்றோடொன்று நெருக்கமான உறவுடையனவாக உள்ளன. தமிழ், மலையாளத்திற்கு அடுத்த நிலையில் கோடா, தோடா போன்ற மொழிகள் நெருங்கிய உறவு கொண்டுள்ளதாக எமனோ கருதினார். ஆனால், L.V. இராமசாமி ஐயர் கொடகு மொழி தான் தென் திராவிட மொழிகளில் தமிழ், மலையாள மொழிகளுக்கடுத்த நிலையில் உறவுடையது என்று நிலைநாட்டுகின்றார். தென் திராவிட மொழிகளுள் துளு மொழி ஏனைய மொழிகளிலிருந்து வேறுபடுவதால் எமனோ, பி.எச்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் இம்மொழியினை நடுத்திராவிட மொழிக் கூட்டங்களோடு இணைத்து விட வேண்டிய அவசியத்தைக் கருதினார். அதற்கு பி.எஸ்.சுப்பிரமணியம் இதைத் தென் திராவிட மூல மொழியிலிருந்து துளு மொழி முதலில் பிரிந்த காரணத்தினால் அது தமிழ், மலையாளம் போன்ற மொழிகளிலிருந்து அதிக அளவு வேறுபடுகின்றது என்றும் விளக்கியுள்ளார். இப்படியான உறவுகளைக் கொண்டு மொழிகளின் தன்மைகளை உணர்ந்துக் கொள்ள முடிகிறது.

தென் திராவிட மொழிகளுள் படகா மொழி கன்னடத்தின் கிளை மொழியாக உள்ளது. இதனைப் பேசுகின்ற மக்கள் நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். தோடா, கோடா போன்ற மொழிகளும் நீலகிரி மலைப்பகுதிகளில் உள்ள பழங்குடி மக்களால் பேசப்படுகின்றன. கன்னடம்,

துளு, கொடகு ஆகிய கர்நாடக மாநிலப் பகுதிகளில் வழக்கில் உள்ளன. துளு மொழி 1789 ஆம் ஆண்டில் ஆர்.ஈ.ராபர்ட் என்பவரால் தனி மொழி என்று சுட்டிக்காட்டப்பட்டது. 1837ஆம் ஆண்டில் தோடா மொழி தனி மொழி என்று தெரிய வந்தது.

தென் திராவிட மொழிகள் முதலில் தமிழ் கன்னடக் கிளை என்றும் துளு என்றும் பிரிந்திருக்க வேண்டும். துளு மொழி இவ்வாறு முதலில் தனி மொழியாகப் பிரிந்த பின்னர்த் தமிழ்க் கன்னடக் கிளை தமிழ் - கொடகுக் கிளை என்றும் கன்னடம் என்றும் பிரிந்திருக்க வேண்டும். கன்னட மொழி பிரிந்து சென்ற அடுத்த நிலையில் தமிழ் - கொடகுக் கிளையிலிருந்து கோடா - தோடா மொழிகள் இணைந்த கிளை பிரிந்திருக்க வேண்டும். இவை பிரிந்த பின்னர், தமிழ் மலையாளம் கிளையிலிருந்து கொடகு மொழி தனியாகப் பிரிந்து சென்றது. இறுதி நிலையில் மலையாளம் தனியாகப் பிரிந்திருக்க வேண்டும் என்றும், தென் திராவிடக் கிளையிலிருந்து முறையே துளு, கன்னடம், கோடா, தோடா, கொடகு, மலையாளம் என்பன படிப்படியாகப் பிரிந்திருக்க வேண்டுமென்றும் பி.எஸ்.சுப்பிரமணியம் விளக்கிச் செல்கின்றார்.

இவற்றுள், தெலுங்கு மொழியினை மத்திய திராவிட மொழிகளோடு இணைத்துக் கூறுவது உண்டெனினும் சில அடிப்படைப் போக்குகளில், தெலுங்கு தென் திராவிட மொழிகளோடு நெருக்கமான உறவு கொண்டிருக்கிறதென்ற கருத்தினை மொழியியல் அறிஞர்கள் வலியுறுத்துகின்றனர். இதனை இன்னாசி நூலின் வழி அறிந்து கொள்ளலாம். இவை அனைத்தும் முன்னைத் திராவிடத்தினின்று தோன்றியவை ஆயினும் அத்தகைய மொழிக் கூறுபாடுகளைப் பெரும்பாலும் காட்டவல்லது தமிழே என்பது நன்கு புலனாகும்.

எனவே தான் கால்டுவெல்லும் தமிழை அடிப்படையாக வைத்தே மற்ற மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்தார். இவருடைய ஆய்வு பெரும்பாலும் தென் திராவிட மொழிகளைப் பற்றியதாக இருப்பதால் இவரது நூலைத் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று கூறுவதை விட தென் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்று அழைப்பதே பொருந்தும் என்று தெ.பொ.மீனாட்சிசுந்தரம் குறிப்பிடுகிறார். இவருக்கு முன்பாக ஆய்வு நிகழ்த்திய எல்லீஸ் கூட 'தென்னிந்திய மொழிக் குடும்பம்' என்றே பகுத்து காட்டினார். மேலும் கேம்ப்பெல் அவர்களின் தெலுங்கு இலக்கண நூலுக்கான முன்னுரையில் சுருக்கமான ஒப்பியல் ஆய்வை மேற்கொண்டுள்ளார். மூன்று திராவிட மொழிகளுக்கிடையே உள்ள ஒலிக்கூறுகளை ஒப்பிடுகிறார். இலக்கண அமைப்பை அல்ல' என்ற கால்டுவெல்லின் குறிப்பை ட்ரவுட்மன் மேற்கொள் காட்டுகிறார்.

தென்னிந்திய மொழிகளில் பெரும்பான்மையாகப் பேசும் மொழியாக தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய நான்கு மொழிகளைச் சுட்டலாம்.

## நடுத்திராவிட மொழிச் சிறப்பும் வழங்கும் இடங்களும்

நடுத்திராவிட மொழிகளைத் தெலுங்கு - குவி கிளை என்றும், கொலாமி-நாய்க்கி கிளை என்றும், மொழி நூலார் இருவகை என கூறுவர். தெலுங்கு-குவி கிளையில் தெலுங்கு, கோண்டி, கோண்டா, குயி, குவி, பெங்கோ மற்றும் மண்டா ஆகிய ஏழு மொழிகள் உள்ளன. கொலாமி-நாய்க்கி கிளையில் கொலாமி, நாய்க்கி, பர்ஜி, கடப்பா ஒல்லாரி, கடப்பா சில்லூர் ஆகிய மொழிகள் உள்ளன. இவற்றுள் கடப்பா ஒல்லாரி, கடப்பா சில்லூர் ஆகியன தனிமொழிகள் அல்ல. ஒரே மொழியின் கிளைகள் என்று சிலர் கருதுவர். தெலுங்கு மொழியைத் தென் திராவிட மொழிகளோடு இணைத்து ஆய்வது பழைய மரபு.

ஆனால் இப்போது தெலுங்கு நடுத்திராவிட மொழிகளோடு இணைக்கப்படுகிறது. கொல்லமி, நாய்க்கி, பர்ஜி, கடப்பா, ஆகியன நடுதிராவிட மொழிகளுக்குள் சில தனித்தன்மைகளைக் கொண்டு விளங்குவதால் அவற்றை ஒரு தனி கிளையாக பரோ, பட்டாச்சாரியா, எமனோ ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

**நடுத்திராவிட மொழிகள்**

**தெலுங்கு, தெலுங்கு குவி, பெங்கொ, மண்டோ, குயி, குவி, கோண்டி, கோண்ட், கொலாமி நாயக்கி, கொலாமி, நாயக்கி, பர்ஜி, கடப்பா சில்லூர், கடப்பா ஒல்லாரி.**

**தெலுங்கு**

தமிழைப் போலவே தொன்மைச் சிறப்பிலும் சொல் வளத்திலும் சிறப்புடையதாகத் தெலுங்கு மொழி உள்ளது. ஐரோப்பியர்கள் இம்மொழியினை ஜெண்டு என்று அழைத்தனர். தமிழகத்தின் வடக்குப்பகுதியான ஆந்திரப்பகுதியில் இம்மொழி பேசப்படுகிறது. வடமொழியாளர் இதனை ஆந்திரம் என்று அழைத்தனர். இம்மொழியின் பெயர்க்காரணத்தை ஆராய்பவர்கள் திரிலிங்கம் - தெலிங்கம் - தெலுங்கு மூன்றுகோயில் என்ற சொல்லே தெலுங்கு எனத் திரிந்தது என்றும் இனிமை எனப்பொருள் பயக்கும் தேனுகு - தெனுகு - தெலுங்கு என மருவியது என்றும் பலவிதமாகப் பொருள் கொள்வர். இம்மொழி வடஇந்திய மொழிகளிலிருந்து வேறுபட்டது என்று யுவான் சுவாங் குறிப்பிடுவார், இம்மொழிக்கு மேல்நாட்டாரும் பல இலக்கண நூல்களை எழுதியுள்ளனர்.

நன்னயப்பட்டர் வடமொழி அறிஞர்கள் இம்மொழியில் பல இலக்கியங்களைப் படைத்தமையால் இது வடமொழியுடன் பெரிதும் உறவுடையதாக அமைந்துவிட்டது. தெலுங்கர்கள் ஆந்திரர்கள் என்றும்

கலிங்கர்கள் என்றும் இருவகைப்படுவர். தமிழைவிட மிகுதியும் மக்களால் பேசப்படும் இம்மொழி ஆந்திரப் பகுதியேயன்றி தமிழ்நாட்டுப் பகுதியிலும் வழங்கப்படும் மொழியாக அமைந்துள்ளது. இம்மொழியின் வினையடிகளை பேரா.கிருஷ்ணமூர்த்தி நுணுகி ஆராய்ந்துள்ளார்.

திணை, பால் பாகுபாட்டைப் பொறுத்தவரை ஏனைய நடுத்திராவிட மொழிகளினின்றும் தெலுங்கு வேறுபடுவது கண்கூடு. இருமையில் ஆண்பால் ஆண்பால் அலாதன என்ற பாகுபாடு தெலுங்கில் உண்டு. இந்நிலையினை குருக் மால்டோ உள்ளிட்ட வட திராவிட மொழிகளிலும் காண முடிகின்றது. திராவிட மொழிகளில் இத்தகைய பால் பாகுபாடே தொன்மையானது என்பது பி.எஸ்.சுப்பிரமணியத்தின் கருத்தாகும்.

குயி மொழியோடு தெலுங்கு நெருங்கிய உறவுடையது. இதனை இவ்விரு மொழிகளிலும் ஒத்திருக்கும் ஒலி இடம் பெயர்தலை வைத்துக் குறிப்பிடலாம். பன்மை விகுதிப் பயன்பாட்டைப் பொறுத்தவரை கோண்ட், கோண்டி, குயி, குவி ஆகிய மொழிகளிலிருந்து தெலுங்கு வேறுபடுகின்றது.

**கோண்டி**

கோண்டி மொழியைப் பேசும் மக்கள் கோண்டுவனம் என்று அழைக்கப்படும் மத்திய இந்தியாவின் காட்டுப் பகுதிகளில் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். இவர்கள் தங்களைக் கோயிதார் என்று குறித்துக் கொள்வர். இம்மக்களைப் பற்றிய பல செய்திகளைப் பேராசிரியர் டால்டன் என்பவரின் **“வங்காள மக்களின் வரலாறு”** என்ற நூலால் உணரலாம். பேராசிரியர் ஜே.சி.டிரிபெர்கு, பேரா.சி.ஜி.செனிவிக்ஸ் என்பவரும் எச்.டி.வில்லியம்சன் ஹென்ரீ டிரமண்டு என்பாரும் இம்மொழிக்கு எழுதிய இலக்கண நூல்கள் குறிப்பிடத்தக்கன.

**குவி/கோந்த்**

கோண்டி மக்களைப் போலவே கோந்த் அல்லது குவி மொழி பேசும் மக்கள் கோண்டுவனத்தின் பகுதிகளிலும், ஒரிய மலைப்பகுதிகளிலும் வாழ்கின்றனர். இவர்களைக் கொண்டர்கள், கந்தர்கள் கூ என்று அழைப்பதுண்டு. இம்மொழிக்கென வரிவடிவமோ, இலக்கியங்களோ எதுவும் இல்லை.

**குயி**

ஒரிய கோராபுத் பகுதியில் பேசப்படும் மொழியாகும். இம்மொழியின் இலக்கணத்தை பேரா.வின்.ஃ.பீல்டு என்பார் படைத்துள்ளார். பெரா என்பவரும் இலக்கண நூலை எழுதியுள்ளார்.

**கோண்டா**

ஆந்திர எல்லைப் பகுதிகளில் கோண்டா மொழி பேசப்படுகின்றது. பத்தாயிரம் பேர் மட்டுமே பேசவரும் இம்மொழியை, பட்டாச்சார்ய, பர்ரோ ஆகியோர் ஆராய்ந்துள்ளனர்.

**கொலாமி**

இந்திய மத்தியப் பகுதியில் ஆந்திரப் பிரதேசத்திலும் மகாராட்டிரத்திலும் இம்மொழி பேசப்படுகின்றது. மராத்தி மொழியாளர்கள் கோலாமீ என்று தலைப்பிட்டு, ஆதிவாசிகளான கோலாம் இனத்தினர் அம்மொழியைப் பேசுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதனைத் தென்கிழக்கு கொலாமி, வடகிழக்கு கொலாமி என இரு மொழிகளாக வகைப்படுத்துவர். பேரா.சேதுமாதவராவ் இம்மொழியின் இலக்கணத்தை எழுதியுள்ளார். எமனோ பர்ரோ, பட்டாச்சாரியா ஆகியோரும் இம்மொழிகளை ஆராய்ந்துள்ளனர்.

**நாயகி, பர்ஜி**

நாய்க்கி மொழி மத்தியப் பிரதேசப் பகுதிகளிலும் மகாராட்டிரத்திலும் பேசப்படுகின்றது. பர்ஜி மொழி மத்தியப்பிரதேசப் பகுதிகளில் பேசப்படுகின்றது. இம்மொழிகள் பஸ்தர் கோறாபுட் ஜகதல்பூர் ஜெய்ப்பூரும் ஆகிய இடங்களை எல்லையாகக் கொண்டு உள்ளடங்கிய பகுதிகளில் அமைந்திருக்கின்றன. பேரா.பரோவும் பேரா.பட்டாச்சாரியாவும் இணைந்து இம்மொழியை விரிவாக ஆய்ந்து தனிமொழியென முதன் முதலில் நிறுவிச் சென்றனர். மேலும் இவர்கள் இம்மொழிக்கு நான்கு வட்டார வழக்குகள் இருப்பதையும் சுட்டிச் செல்கின்றனர். முன்னதாக இம்மொழியைத் தவறுதலாகக் கொண்டி மொழியின் வட்டார வழக்கு என்று குறித்து விட்டனர்.

**கடபா**

ஒரிசாவிலும் மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளிலும் கடபா மொழி பேசப்படுகின்றது. கடபா ஒல்லாரி, கடபா சில்லூர் ஆகிய இரண்டையும் ஒரே மொழியாகச் சிலர் கருதினாலும், பேரா.பரோ, பட்டாச்சாரியா ஆகியொர் இவற்றைத் தனிக் கிளைகள் என்று கருதுகின்றனர்.

**பெங்கோ, மண்டா**

பெங்கோ மொழியைப் பேசும் மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. இம்மொழி பேராசிரியர் பரோவால் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தனிமொழி என்று ஆய்ந்து கூறப்பட்டது. மண்டா மொழி பற்றி பேரளவிலான ஆய்வுகள் நிகழவில்லை.

**நடுத் திராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்**

- ✓ தென் திராவிட மொழிகளில் முன்னுயிர்களின் முன் வரும் மொழிமுதல் ககர ஒலி சகர ஒலியாக மாறுவதைக் காணலாம். ஆனால் நடுதிராவிட மொழிகளில் இக்ககரம் திரிவதில்லை.
- ✓ நாவளை ளகரம் நாய்கி தவிர வேறு எந்த மொழியிலும் வருவதில்லை.
- ✓ நடுத் திராவிட மொழிகள், நெடிலற்ற ஒரியா போன்ற மொழிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட போதிலும் தமக்யேரிய குறில் நெடில் ஒலியன்களை இழக்காமல் பேணிக் காக்கின்றது.
- ✓ மூலத் திராவிட மூக்கொலியான ணகரம் பெரும்பாலும் ‘ன’கரம் ஒலியாக இம்மொழிகளிலும் மாறுகின்றது. எனினும் கோண்டா, பெங்கோ மண்டா போன்ற மொழிகளில் திரியாமல் வழங்குவதும் உண்டு.
- ✓ தென் திராவிட மொழிகளில் மொழி முதலில் டகர ஒலி வருவதில்லை. நடுத்திராவிட மொழிகளில் இது அருகி மொழி முதலில் வருவதுண்டு.
- ✓ ஒலியன்கள் இடம் பெயர்ந்து நிற்றலை குயி, குவி, பெங்கோ போன்ற மொழிகளில் அதிகமாகக் காண முடிகின்றது.
- ✓ நடுத் திராவிட மொழிகளில் ஆண்பால், ஆண்பால் என்ற இருவகைப் பாகுபாட்டினை ஒருமையிலும் பன்மையிலும் காணலாம். தெலுங்கில் இப்பாகுபாடு ஒருமையில் மட்டுமே காணமுடியும்.
- ✓ தென் திராவிட மொழிகளிலும் வட திராவிட மொழிகளிலும் பன்மையினை உணர்த்துவதற்குப் பலவின்பால் விகுதியைக்

கட்டாயமில்லை. ஆனால் இம்மொழிகளில் அஃறிணைச் சொற்கள் பன்மையுணர்த் வேண்டும் என்றால் பலவின்பால் விகுதி கட்டாயம் இணைக்கப்பட வேண்டும்.

- ✓ தென் திராவிட மொழிகளில் 'அவன்' என்பது படர்க்கை ஆண்பால் ஒருமை சுட்டுப் பெயராக உள்ளது. ஆனால் நடுத் திராவிட மொழிகளில் இதற்கு ஒத்த அவண்ட் என்ற வடிவம் உள்ளது. இது தெலுங்கு வழக்கில் வாண்டு எனத் திரிந்துவிட்டது.

## வடதிராவிட மொழி சிறப்பும் வழங்கும் இடங்களும்

பலுசிஸ்தான் பகுதிகளில் பேசும் பிராகூயி, மத்திய இந்தியப் பகுதிகளில் வழங்கும் மால்டோ, பீகார் ஒரியப் பகுதிகளில் பேசும் குருக் ஆகியனவற்றை வட திராவிட மொழிகள் என்பர். வட ஆந்திரத்தில் வழங்கும் கோயா மொழியை வட திராவிடம் என்று குறிப்பர். ஆனால் அதனை கோண்டி மொழியின் வட்டாரத் திரிபு மொழி என்று அறிஞர்கள் கருதுவதை ஜி.ஜான்சாமுவேல் சுட்டிச் செல்கின்றார். வட திராவிட மொழிகளில் பிராகூயி தொடக்க நிலையில் பிரிந்திருக்க வேண்டும். பின்னைய காலத்தில் குருக், மால்டோ, ஆகியன ஒரு மொழியாக வழங்கிப் பின் நெடுங்காலம் கடந்து இவை தனி மொழிகளாக உருப்பெற்றிருக்க வேண்டும்.

### மால்டோ

பீகார், ஒரியா, வங்க மாநிலங்களில் மால்டோ மொழி வழங்கப்படுகின்றது. மால்டோ மொழி பேசும் மக்கள் தங்களை மாலர்கள் என்று குறித்துக் கொள்வர். மாலர் என்பது மலை என்பதன் திரிபாகும் என்றும் மலையில் வாழுவோர் எனும் பொருளுடையது என்று கிரியர்சன் தம் ஆய்வில் குறிக்கின்றார். பேராசிரியர் ஹாட்ஜன், கேம்பல் ஆகியோர் இம்மொழிச் சொற்களை ஆராய்ந்துள்ளனர்.

எர்னஸ்ட் டிரெளஸ் 1884 ஆம் ஆண்டில் மால்டோ மொழி பற்றிய அறிமுகநூல் ஒன்றைப் படைத்துள்ளார். இலக்கியவளம் இல்லையெனினும் ஐரோப்பியர்களால் சிற்சில நூல்கள் படைக்கப்பட்டுள்ளன.

இம்மொழிகளில் குறில் நெடில் வேறுபாடு பொருளை வேறுபடுத்தும் ஒலி மாற்றமாக அமைகின்றது. சொற்களுக்கு இடையில் உயிரொலிகள் பயின்று வந்தாலும் நெட்டோசை உயிர்கள் மொழியிறுதியாக வருவதில்லை. அடைப்பொலிகள், உரசொலிகள், மூக்கொலிகள், வருடொலிகள், பிரிவளி ஒலிகள், ஆடொலிகள், அரை உயிர்கள் என இம்மொழியின் மெய்யொலிகள் ஏழாகக் கூறுபடுத்தப்படுகின்றன.

**குருக்**

டாக்டர் கால்டுவெல் ஒரோவன் என்று தம் நூலில் குறிக்கும் மொழியே குருக் ஆகும். பிகார், அஸ்ஸாம், வங்கம் மாநிலப் பகுதிகளில் இம்மொழி பேசுவார் பரவி வாழ்கின்றனர். கொலானியல் டால்டன் என்பார் வங்காள வரலாறு பற்றிய நூலில் குருக் மொழி பேசுவோரைக் குறிப்பிடுகின்றனர். கிறித்தவப் பாதிரியார் பட்ஸச் இம்மொழியின் இலக்கணத்தை எழுதியுள்ளார். இம்மக்கள் தங்களை மேற்கு கொங்கணப் பகுதிகளிலிருந்து வந்தவராகக் குறிப்பிட்டுக் கொள்வதாகவும் பாட்னா மலைப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் என்றும் குறிப்பிடுவதாகவும் அறிஞர்கள் கருத்துரைக்கின்றனர். குருக் மொழி மக்களுக்கும் மாடோ மக்களுக்கும் தொடர்பு இருந்ததைச் சொல்லாராய்ச்சியில் கால்டுவெல் நிறுவியுள்ளார். ஏ.க்ரிக்நாட் என்பாரும் ∴பெண்ட் ஹான், சி.பி.லீஸ் ஆகியோரும் குருக் மொழியின் அகராதிகளை உருவாக்கியுள்ளனர்.

**பிராகூயி**

தற்போதைய பாகிஸ்தானின் தெற்கு பலுசிஸ்தான் பகுதிகளில் பிராகூயி தம் நூலில் குறித்துள்ளார். எனினும் திராவிட மொழிக்குடும்பத்தில் இணைத்துக் காணவில்லை. டென்னிஸ் டி.எஸ்.பிரே என்பாரே திராவிட மொழிக்கூறுகளுடன் பிராகூயி ஒன்றிச் செல்வதை ஆராய்ந்து நிறுவியுள்ளார். இம்மொழி பற்றிய ஆய்வுகளில், பிராகூயி முதலில் மூலத் திராவிட மொழியிலிருந்து வழங்கியிருக்க வேண்டும் என்றும் திராவிட மொழி பேசும் மக்களுடன் கலப்பு ஏற்பட்டதால் மொழி உறவு ஏற்பட்டு இருக்கலாம் என்றும் இருவகையாகச் சுட்டுகின்றனர். இம்மொழி பார்சி மொழியுடன் தொடர்புடையதாக அமைந்துள்ளது.

**வடதிராவிட மொழிகளின் சிறப்பியல்புகள்**

- ✓ மூலத் திராவிட மொழியில் காணப்படும் வகரம் இவ்வகை மொழிகளில் பகரமாக (டி) எனத் திரியும்.

| | | |
|---|---|---|
| தமிழ் | குருக் | பிராகூயி |
| வாய் | பாய் | பா |

- ✓ மூலத் திராவிட மொழியான ககரம் இ, ஈ, தவிர்த்த முன்னுயிர்களின் முன் இடம்பெறும்போது க்ஸ கரமாகத் திரிகின்றது. இதனை உரசொலியாதல் எனலாம்.

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | மால்டோ | பிராகூயி | குருக் |
| கண் | Xanu | xan | xann |

- ✓ மொழிமுதல் சகரம், உகரம், ஊகார, எகர, ஏகாரங்களுடன் இணைந்து வரும்போது ககரமாகத் திரியும்.

| | | |
|---|---|---|
| தமிழ் | மால்டோ | குருக் |
| சுடு | Kur | kur |

- ✓ குருக் மால்டொ மொழிகளில் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை ஆகியவற்றின் வேற்றுமை உருபேற்கும் வடிவங்கள் நான்காம் வேற்றுமையில் அமைகின்றன.
- ✓ இம்மொழிகளில் இறந்த கால இடைநிலையாக - க்கும் இறப்பல்லாக் கால இடைநிலையாக ஒ உம உள்ளன.

# அலகு - 4

## தமிழ்மொழி வரலாற்றுக்கான அடிப்படைச் சான்றுகள்

மொழி வரலாறு என்பது காலத்திற்கு காலம் அல்லது காலந்தோறும் ஒரு மொழியில் ஏற்பட்டு வருகின்ற மாற்றங்களைப்பற்றி மொழியினூடாக ஆராய்வதாகும். மொழி ஆய்வுகள் பண்டைக்காலந்தொட்டு நடந்து வந்தாலும் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் அறிவியல் அடிப்படையில் நோக்குகின்ற முறைமை ஆரம்பமானது. அறிவியல் துறையின் ஏற்பட்ட விரைவான மாற்றங்களையும் முன்னேற்றத்தையும் போலவே மொழியியல் துறையிலும் ஏற்படலாயிற்று. உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி டார்வினின் பரிணாமக் கொள்கை திருப்பு முனையை ஏற்படுத்தியது போல அதே கொள்கை இயற்கை மொழிகளின் தோற்றம் வளர்ச்சி பற்றி ஆராய வழிவகுத்தது. மொழி வளர்வது பரிணாம வளர்ச்சியினாலும் கடன்வாங்கலாலும் ஆகுமென மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். ஒரு மொழியில் பல்வேறு காலங்களில் அடைந்த மாற்றங்களை கால முறைப்படி ஆராய்வதற்கு சான்று ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. சான்றுகள் இன்றி அமையும் வரலாறுகள் உண்மை வரலாறாக இருக்க முடியாது. எந்தொரு விடயத்தையும் அறிவியல் அடிப்படையில் ஆராய்ச்சிக்கு உட்படுத்த வேண்டுமாயின் சான்றுகள் கொண்டே ஆராயப்பட வேண்டும். இவ் அடிப்படையில் தமிழ் மொழி வரலாற்றை ஆராய பின்வருவனவற்றை சான்றுகளாக கொள்ள முடியும்.

- **இலக்கியங்கள்**
- **இலக்கணங்கள்**
- **அகராதிகள்**
- **நிகண்டுகள்**

- **உரையாசிரியர்களின் உரைகள்**
- **கல்வெட்டுகள்**
- **பிறமொழிகல்வெட்டுக்கள்**
- **அயல்நாட்டார் குறிப்புகள்**
- **பிற நாட்டாரின் தமிழ்மொழி இலக்கண நூல்கள்**
- **ஒப்பியல் ஆய்வுகள் (கால்டுவெல்)**
- **பேச்சு மொழி வழக்குகள்**
- **கிளை மொழிகள்**

ஆகியவற்றை மொழிவரலாற்றின் அடிப்படைச் சான்றுகளாக ஏற்றுக்கொள்ளலாம்.

**இலக்கியங்கள்**

ஒரு நாட்டின் வரலாற்றிற்கும் மொழியின் வரலாற்றிற்கும் இன்றியமையாத சான்று இலக்கியங்கள் ஆகும். சங்க இலக்கியங்களை வைத்து சங்கத்தமிழை ஆராய முடியும். எனவே அந்தந்த காலங்களில் எழுந்த இலக்கியங்களை வைத்து அந்தந்த காலத்து மொழியைப் பற்றி ஆராயலாம். இலக்கிய சான்றுகளை வகையாக பிரிக்கலாம்.

- **இலக்கிய நடையில் அமைந்த செய்யுள் நூல்கள்**
- **பேச்சுவழக்கை அடிப்படையாகக் கொண்ட வாய்மொழி இலக்கியங்கள்.**

வாய்மொழி இலக்கியங்களை உண்மையான மொழியில் இயல்பைக் காட்டுவனவாகும். மொழிபேசும் சமுதாயம் என்பது படித்தவர்களும் பாமரர்களும் அடங்கியதாகும். ஆகவே வாய்மொழி இலக்கியங்கள் பெரும்பாண்மையான மக்கள் பேசும் மொழியின் இயல்பைக் காட்டுகின்றன. இன்று எமக்கு கிடைக்கின்ற பண்டைய கால இலக்கியங்கள் யாவும் காலத்திற்கு காலம்

ஏடுகளில் பிரதி பண்ணப்பட்டு வந்திருக்கின்றன. இவை பிரதி பண்ணப்பட்டும் போது பல்வேறு மாற்றங்களுக்கு உள்ளாகி வந்திருக்கின்றது. குறிப்பாக இடைச்செருகல், விடுபடல், சொற்களை மாற்றி அமைத்தல், எழுத்துகளை மாற்றியமைத்தல் என பல மாற்றங்களுக்கு உள்ளாகி வந்துள்ளன. அதற்காக இவை ஆதாரபூர்வம் அற்றவை என ஒதுக்கிவிட முடியாது. கிடைப்பவற்றில் எது மூலத்தோடு நெருங்கிய தொடர்புடையவை எனக் கண்டு கொண்டு மொழி வரலாற்றை ஆராய்வதற்கு பயன்படுத்தலாம்.

**இலக்கணங்கள்**

தமிழ்மொழி வரலாற்றிற்கு இலக்கியங்களைப் போன்ற இலக்கணங்களும் சான்றாகும். இலக்கியம் மொழி இயல்பை ஆராய்வதற்கு ஆதாரமானதாகும். இலக்கணம் நேரடியாக மொழி இயல்பைக் கூறுவதாகும். இலக்கியம் ஒலியன்களையும் உருபன்களையும் தன்னகத்தை கொண்டது. இலக்கணம் ஒலியன்களையும் உருபன்களையும் சொற்களின் அமைப்பையும் நேரடியாக எடுத்தியம்புகின்றது. எனவே இலக்கணங்கள் விளக்க மொழியியல் அடிப்படையில் அமைந்ததாகும். காலத்துக்கு காலம் தோன்றிய தமிழ் இலக்கண நூல்களும் அவற்றிற்கான உரைகளும் பல்வேறு காலகாலகட்டங்களில் பல்வேறு வகைப்பட்ட இலக்கண ஆசிரியர்களாலும் உரையாசிரியர்களாலும் எழுதப்பட்டிருகின்றன. இதனால் இவற்றை ஒரு வரலாற்று ஒழுங்கில் விஞ்ஞான ஆய்வுகளாக நோக்கின் இலக்கணங்கள் சான்றுகளாக அமையும் போது சில சந்தர்ப்பங்களில் சாதகங்களும் சில சந்தர்ப்பங்களும் பாதகங்களும் உண்டு. ஆனால் இலக்கண நூல்களை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டு வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். உதாரணமாக தமிழ் எழுத்துக்களின் ஒலிப்பு முறைகள் பற்றி தொல்காப்பியர் கூறுவதற்கும் இடையே சில வேறுபாடுகள் காணப்படுகின்றன. இத்தகைய வேறுபாடுகளை பின்வந்த இலக்கணகாரர்கள்

கவனத்தில் கொள்ளவில்லை. ஆகவே இலக்கண நூல்களை மொழி ஆய்விற்கு பயன்படுத்தப்படும் போது மிக அவதானமாக செயற்படுதல் அவசியம்..

**பிற நாட்டாரின் தமிழ்மொழி இலக்கண நூல்கள்**

தமிழ் மொழிக்கு இலக்கண நூல்கள் எழுதிய தமிழ்சான்றோர்கள் தவிர பிற நாட்டார்களும் தமிழ் மொழி தொடர்பான இலக்கண நூல்களை எழுதியுள்ளனர். குறிப்பாக 1672இல் பால்டீஸ் (டச்சு) என்பவர் எழுதிய இந்தியா பற்றிய தனது நூலின் தமிழ் மொழியின் உச்சரிப்புக்கள், வேற்றுமைப்பாகுபாடுகள், வினை விகர வாய்ப்பாடுகள் என்பவற்றை குறிப்பிட்டுள்ளார். 1680இல் கோஸ்டா, பலித்தாரா போன்றோர் இலத்தீன் மொழியில் தமிழ் இலக்கணமொன்றை எழுதியுள்ளார். 1685இல் புருணோ என்பவரும் 1786இல் சீகன்பால்கு ஐயர் அவர்களும் தமிழ் இலக்கணம் என்னும் நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

இவருக்குப் பின்னர் வீரமாமுனிவர் குறிப்பிடத்ததக்கவர். இவர் **பேச்சுத்தமிழ் இலக்கணம்** என்ற நூலையும் **தொன்னூல் விளக்கம்** என்ற நூலையும் எழுதியுள்ளார். இவர் எடுத்து சீர்திருத்தம் என்பது தொடர்பாகவும் புதிய சிந்தனைகளை முன்வைத்துள்ளார். ரேனியஸ் என்பவர் 1836 இல் தமிழ் மொழியின் இலக்கணம் என்ற நூலை எழுதியுள்ளார்.

19ம், 20ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்களான எல்லீஸ், போப்ஐயர், கிரானின், கால்டுவெல் முதலியோர் எழுதிய இலக்கண நூல்களும் தமிழ் மொழி வரலாற்றின் குறிப்பிட்டத்தக்கவை. எனவே மொழிவரலாற்றுச் சான்றுகளாக வெளிநாட்டார் எழுதிய இலக்கண நூல்களை ஆய்வுக்கு உட்படுத்துவது மிக முக்கியமாகும்.

**நிகண்டுகளும் அகராதிகளும்**

ஒரு மொழியிலுள்ள சொற்கள் அனைத்தும் அகர எழுத்து வரிசையில் அமையும் படி ஒரு சேர்த்தொகுத்து அவற்றின் பொருள்களை அம் மொழயிலேனும் பிறமொழியிலேனும் விளக்கும் நூல் அகராதி ஆகும். இதனை உரிச்சொல், பனுவல் என பழைய இலக்கண நூல்கள் கூறும் சமணத்தமிழ் சான்றோர் பலரும் இத்தகைய நூல்களை இயற்றி நிகண்டு என வழங்கினார்கள். 19ம் நூற்றாண்டு வரையில் நிகண்டுகள் எழுதப்படுகின்றன. ஐரோப்பிய வருகையின் பின்னர் நிகண்டுகள் அருகிப்போக அகராதிகள் வெளிவரத் தொடங்கின. மொழிவரலாற்றிற்கு இவை பெரிதும் உதவுகின்றன.

1679இல் அந்தம் த பிறைன்ஸா என்ற பாரதியாரால் செப்பமான முறையில் அகராதி ஒன்று தொகுக்கப்பட்டு கேரளத்தில் உள்ள அம்பலக்காட்டில் வெளியிடப்பட்டது. இன்று இது கிடைக்கவில்லை. கி.பி. 1732இல் வீரமாமுனிவர் இது மட்டுமன்றி மொத்தமாக ஏழு அகராதிகளை வெளியிட்டுள்ளார்.

1.தமிழ் இலத்தீன் அகராதி

2.இலத்தீன் தமிழ் அகராதி

3.தமிழ் பிரெஞ்சு அகராதி

4.தமிழ் ஆங்கில அகராதி

5.போத்துகீசம் இலத்தீன் தமிழ் அகராதி

6.வட்டார வழக்கு தமிழ் அகராதி

7.சதுரகராதி

எவ்வாறெனினும் தமிழ் அகராதி வரலாற்றில் சென்னைப் பல்கலைக்கழகம் வெளியிட்ட தமிழ் பேரகராதி (Tamil Lexcaion) 1044005 சொற்கள் கொண்டதாக தொகுக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் திராவிட மொழியியல் அறிஞர்களான பரோவும் (Burrow) எமனோவும் (Emeneau) இணைந்து வெளியிட்ட திராவிட சொற்பிறப்பியல் அகராதி திராவிட மொழியியல் உலகில் மிகப் பெரிய சாதனையாகும். எனவே தமிழ்மொழி வரலாற்றை ஆராய்கின்றவர்கள் நிகண்டுகள் அகராதிகள் ஆகியவற்றையும் கவனத்திற் கொள்ளுதல் அவசியமாகும்.

**உரையாசிரியர்கள்**

உரையாசிரியர்கள் மூலநூல் முழுவதற்குமே விளக்கம் கூறப் பெரிதும் முற்பட்டிருக்கிறார்கள். தம் காலத்திய வழக்காறுகளுக்கெல்லாம் தொல்காப்பியத்தைத் தக்க முறையில் விளக்கவதன் மூலம் அந்நூலிலேயே விதிகளைக் காண முற்படுவதை இங்குச் சான்றாகச் சுட்டலாம்.

பல்வேறு காலங்களில் எழுதப்பட்ட இவ்வுரை வேறுபாடுகள், பழைய நூல்களில் குறிப்பிட்டுக் கூறப்படும் வழக்காறுகளிலிருந்து மாறுபட்டனவும், புதிதாய் நிலைபெற்றனவுமான தம் காலத்திய வழக்காறுகளைப் பற்றிய பொதுவான செய்திகளை அறிய உதவுகின்றன. இம்முறையில் இவ்வுரைகளுக்கு இடையிலுள்ள வேறுபாடுகளெல்லாம் கால வேறுபாட்டின் காரணமாக மாறிய வழக்காறுகளின் அடிப்படையில் அமைகின்றன. நிலைபெற்ற வழக்காறுகளிலிருந்து தம் காலகட்டத்தை ஒட்டி மொழியமைப்பில் ஏற்பட்ட சில மாறுதல்களை இந்த உரையாசிரியகள் உணர்ந்தே உள்ளனர். எனவே மொழியானது மாறுதலுக்கு உள்ளாகிறது என்பதையும் அவர்கள் உணர்ந்தே இருந்தனர் எனக் கருதலாம். உரையாசிரியர்களின் அடிப்படை ஆதார நூலான

தொல்காப்பியமே **“கடிசொல் இல்லை காலத்துப் படினே”** எனக் கூறுகிறது. எனவே மொழியில் நிகழும் மாறுதல்களுக்கு அவை இலக்கிய வழக்கினைக் குறிப்பனவாயிருப்பினும், சான்றுகள் இவ்வுரை நூல்களில் உள்ளன எனலாம். எனவே மொழி வரலாற்றின் பல்வேறு காலகட்டங்களின் அடிப்படையில் பல்வேறு மொழி வழக்காறுகளை வேறு பிரித்து அறிந்து கொள்வதற்கு இவ்வுரை நூல்களையும் அவ்வுரை விளக்கத்திற்கு அடிப்படையான இலக்கியங்களையும் கவனமாக ஆராய்ந்து ஒப்பிட்டுக் காணல் வேண்டும்.

**கல்வெட்டுக்களும் புறமொழிக்கல்வெட்டுக்களும்**

தமிழ்மொழி வரலாற்றுக்கு உதவும் சான்றுகளும் கல்வெட்டுக்களும் புற மொழிக் கல்வெட்டுக்களும் மிக முக்கியமானவையாகும். ஏனெனில் ஏடுகள் மாற்றங்களுக்கும் அறிவுகளுக்கும் உட்பட கூடியவை. ஆனால் கல்வெட்டுக்கள், சாசனங்கள், செப்பேடுகள் என்பன இலகுவில் அழியக்கூடிய அல்ல. இதன் காரணமாக இவை நம்பகத்தன்மை கொண்டனவாகவும் ஆய்வுக்கு எப்பொழுதும் பயன்படுத்தக்கூடியவையாகவும் காணப்படுகின்றன. அத்துடன் இத்தகைய கல்வெட்டுக்கள் பேச்சு வழக்கை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. முனிவர்களும், துறவிகளும் குகைகளிலும் மலைச்சாரல்களிலும் வாழ்ந்த காலத்தில் அவர்களால் இத்தகைய இடங்களில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டன. இவற்றிலே பேச்சுவழக்கே கையாளப்பட்டிருக்கிறது.

உதாரணமாக:

1. ஏற்றம் - ஏத்தம்
2. இவருடைய - இவரிடைய
3. அரசர் - அரசெர்

4. வாய்க்கால் - வாக்கால்

இவை மட்டுமின்றி கல்வெட்டுகளில் உடன்படு மெய் இல்லாமல் உயிர் எழுத்துக்கள் தொடர்ந்து எழுதப்படுகின்றன.

உதாரணமாக:

1. கோயிலுக்கு - கோஇலுக்கு

எனவே கல்வெட்டுக்கள் தமிழ் மொழி வரலாற்றை அறிந்து கொள்ள மிக முக்கிய சான்றுகளாக அமைகின்றன.

தமிழ் மொழியில் காணப்படும் கல்வெட்டுக்கள் மட்டுமன்றி பிறமொழியில் அமைந்த கல்வெட்டுக்களும் மொழி வரலாற்றுக்கு உதவுகின்றன. குறிப்பாக இலங்கையில் கிடைத்த சிங்களக் கல்வெட்டுகளில் தமிழ்பெயர்களும், தமிழ்ச் சொற்களும் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி தமிழ் நாட்டிலும் பிற நாட்டுக் கல்வெட்டுக்கள் நிறையவே கண்டெடுக்கப்பட்டுள்ளன. உச்சரிப்பு வேறுபாடுகளை உணர்ந்து கொள்வதற்கு இக் கல்வெட்டுக்கள் துணை செய்கின்றன. அரிக்கமேட்டில் கண்டெடுக்கப்பட்ட மட்கள ஓட்டில் பிராமிய எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இவை தமிழ் மொழி எழுத்துக்களின் வரிவடிவ ஆய்வுக்கும் மிகமுக்கியமானவை.

**அயல் நாட்டார் குறிப்புக்கள்**

வேற்று மொழிகளில் எழுதப்பட்ட தமிழ்ப் பெயர்களும், தமிழ் சொற்களும் தமிழ் மொழி வரலாற்றை கட்டியெழுப்ப உதவுகின்றன. கி.மு.2ம் நூற்றாண்டைச் சார்ந்த பதஞ்சலியும் கி.மு. 4ம் நூற்றாண்டைச் சார்ந்த வரருசியும் தென்னிந்தியா பற்றியும் தென்னிந்திய சொற்களைப்பற்றியும் குறிப்பிடுகின்றனர். குமரிலப்பட்டருடைய தந்திரவர்த்திகா ‘விலும் பானி, சமஸ்கிருதம், பிராகிருதம்,

தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற மொழிகளிலும் தமிழ் மொழி பற்றிய குறிப்புக்கள் நிறையவே உள்ளன.

இதன் பின்னர் ஐரோப்பியர்களின் வியாபார வருகையும் மதப்பரப்புதலும் காரணமாக அவர்களின் குறிப்புக்கள் அதிகமாக கிடைக்கின்றன. குறிப்பாக மார்க்கோபாலோ, யுவான்சுவாங், தொலமி ஆகியோர் எழுதிய கடிதங்களும் இத்தகைய ஆய்வுக்கு முக்கியமாயுள்ளன.

**கிளை மொழிகள்**

ஒரு மொழி வரலாற்றை ஆராய்வதற்கு கிளை மொழிகளும் முக்கியமானதாக கருதப்படுகின்றது. காரணம் ஒரே மொழி பிரதேசத்திற்கு பிரதேசம் பேசப்படும் முறையிலும் பயன்படுத்தப்படும் பொருளிலும் மாற்றங்களை கொண்டிருக்கின்றன. உதாரணமாக மிகச் சிறந்த நாடான இலங்கையில் தமிழ் மொழி பேசப்படுகின்ற விதங்களில்

- யாழ்ப்பாணத் தமிழ்
- வன்னித் தமிழ்
- மட்டக்களப்புத் தமிழ்
- மலையகத் தமிழ்
- கொழும்புத் தமிழ்

என் பல்வேறு பிரிவுகளை காண முடிகிறது. இதே நேரம் குறித்த சமூகத்தின் கிளை மொழிகளாகவும் பல இனம் காணப்பட்டன. குறிப்பாக விவசாயச் சமூகம், மீனச்சமூகம் என்பன முக்கியமானவையாகும்.

எனவே ஒரு மொழியின் வரலாற்றை அறிந்து கொள்வதற்கு மேற்கூறப்பட்ட எல்லா அம்சங்களும் முக்கியமானவையாக காணப்படுகின்றன.

## மூலத்திராவிட மொழி

நீண்ட காலமாகத் திராவிட மொழிகள் பற்றிய மொழியியல் ஆய்வில் மூலத்திராவிடக் கொள்கை என்று ஒன்று கூறப்படுகிறது. திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மூல மொழியிலிருந்து கிளைத்து வந்துள்ளன. அம்மொழிதான் ‘மூலத்திராவிடம்’ அல்லது ‘தொல் திராவிடம்’ ஆகும் என மொழியியல் அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

‘திராவிட மொழிகள் அனைத்தும் ஒரு மூல மொழியிலிருந்து பிறந்து வளர்ந்தவைகளாகும். மொழிக்குடும்பம் என்பது தொல் மொழி (Proto Language) ஒன்றிலிருந்து பிரிந்து காலத்தாலும் இடத்தாலும் வெவ்வேறு மாற்றமடைந்து ஒரு பிரிவுமொழியும் மற்றொரு பிரிவு மொழியும் வெவ்வேறு மொழி எனக் கருதும் பல மொழிகளின் தொகுதியாகும். இம் மொழிகளை இன மொழிகள் (Cognate languages) என்பர். இம்மொழிகளை ஒப்பிட்டு ஆராய்ந்து இவை அனைத்தும் தொல் மொழி ஒன்றிலிருந்து பல்வேறு மொழிகளாகக் கிளைத்திருக்க வேண்டும் என ஒப்பியல் ஆய்வு மொழியியலாளர்கள் கூறுவர். எல்லாத் திராவிட மொழிகளுக்கும் மூலமாக இருந்த மொழியினை மூலத்திராவிட மொழி அல்லது தொல் திராவிட (Proto Dravidian Language) மொழி என வழங்கினர்’

என்று மூலத் திராவிட மொழியைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தமிழ் உள்ளிட்ட அனைத்துத் திராவிட மொழிகளும் ஒரு மூல மொழியிலிருந்து தோன்றியிருக்கக் கூடும் என்னும் கருத்து பெறப்படுகின்றது. ஆயினும் மூலத்திராவிட மொழி எது என்பது பற்றிய முடிவு இன்னும் சரியாகக் கண்டறியப்படவில்லை. திராவிட மொழிகளில் சிறப்பாராய்ச்சி செய்த கால்டுவெல் மூலத் திராவிடக் கொள்கையில் கருத்துச் செலுத்தியுள்ளார்.

ஆனால் இவரும் மூலத்திராவிட மொழி எது என்பது பற்றி கருத்துரைக்கவில்லை. ஆயினும் மூல மொழிக்கு மிக நெருங்கிய மொழியாகத் தமிழைக் குறிப்பிட்டுள்ளார்.

**“திராவிட மொழிகள் அனைத்தினும் தமிழே பழமை வாய்ந்தது என்பதும், இக்காலத் திராவிட மொழிகளின் வேறுபாடுகள் அனைத்திற்கும் மூலமான பழந்திராவிட வடிவங்களை ஆராயும் வகையில் பேருதவி தருவது அதுவே என்பதும் பெறப்படும்”** எனவும்,

**“மூலத்திராவிடத்தின் நிலைமையை உணர்த்தும் வகையில் பிறமொழிகள் அனைத்தையும்விட தமிழே, அதிலும் சிறப்பாகச் செந்தமிழே மிகவும் பயன் தருவதென்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் திராவிட மொழிகள் அனைத்துள்ளும் முன்னதாக திருத்தமுற்ற மொழி தமிழ் என்பதேயாம்”** எனவும், கால்டுவெல் கருத்துரைத்துள்ளார்.

இவருடைய கருத்தின் வழி, தமிழ் மூலத்திராவிடத்திற்கு நெருங்கியது என்னும் செய்தி பெறப்படுகின்றது. ஆயினும் மொழியியலாரிடையே இக்கருத்துப் பற்றி முரண்பாடு தெரிகிறது. பெரும்பாலும் தொல் திராவிடம் என்னும் ஒரு மொழி, வழக்கில் இருந்திருக்க வேண்டும் என ஊகிக்கப்படுகிறது.

**“தமிழ்மொழி என்று இன்று போற்றப்படும் இது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நாட்டின் ஒரு பகுதியில் பேசப்பட்டு வந்த கிளை மொழியிலிருந்து வளர்ந்திருக்கலாம். அதை அடுத்திருந்த கிளைமொழிகள் படிப்படியே மறைந்து போவதற்கு வேண்டிய காரணங்கள் ஏற்பட்டு, இந்தக் கிளை மொழியே பொது மொழியாய் நாடெங்கும் பரவியது எனலாம்”.**

என்று மு.வ. குறிப்பிட்டுள்ளார். கிளைமொழி ஒன்றிலிருந்து தமிழ் கிளைத்து வந்ததாக மு.வ. வின் கருத்து அமைந்துள்ளது. ஆனால், பாவாணர் இக்கருத்துக்களை வன்மையாக மறுத்துள்ளார். அவர் தமிழைத் திராவிட மொழியாகவே சுட்டவில்லை. தெலுங்கு முதலான திராவிட மொழிகள் அனைத்திற்கும் தமிழே மூலம் என்பது அவர் கருத்தாகும். தமிழுக்கு முன்னதாக ஒரு மொழி இருந்ததில்லை என்பதைத் தமிழ் அல்லாத ஒரு மொழி, திராவிடத் தாயாகத் தமிழுக்கு முற்பட்டு இருந்ததே இல்லை என அறுதியிட்டு உரைத்துள்ளார்.

இராமச்சந்திர தீட்சிதர், தம் நூலில் **“திராவிட முன்னர் என்றோ, மூலத் திராவிடர் என்றோ, திராவிடர் என்றோ வேறுபாடு இருந்ததாக நமக்குத் தோன்றவில்லை”** என குறிப்பிட்டுள்ளார். எனவே, பாவாணரின் மூலத்திராவிட மறுப்புக் கொள்கைக்கு இராமச்சந்திர தீட்சதரின் கருத்து அரண் சேர்ப்பதாக அமைந்துள்ளது. மூலத் திராவிடக் கொள்கையை மறுத்துரைக்கும் பாவாணர், திராவிட மொழிகள் அனைத்திற்கும் தமிழே மூலம் என்பதைத் தம் நூல்கள் அனைத்துள்ளும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

**‘தென்னிந்திய மொழிக் குடும்பத்தைக் கால்டுவெல் கண்காணியார் முதன் முதலாக ஆராய்ந்ததினால் தமிழையும் அதனோடு தொடர்புள்ள பிற மொழிகளையும் வேறுபடுத்தாது திராவிடம் என்னும் ஒரே பெயரால் குறித்தார்’** எனக் குறிப்பிடும் பாவாணர் தமிழைத் தமிழ் என்றும் அதன் இன மொழிகளையே திராவிடம் என்றும் பிரித்துக்கூற வேண்டும் என விளக்கியுள்ளார். எனவே, தமிழைப் பாவாணர் திராவிடமாகக் கொள்ளவில்லை என்பதை அறிய முடிகின்றது.

## சங்ககாலத் தமிழ்

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்குகின்ற மொழி தமிழ் மொழியாகும். ‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி’ என்று புறப்பொருள் வெண்பா மாலை என்ற புற இலக்கண நூல் கூறுவதைக் கொண்டு தமிழின் பழமையை உணரலாம். தொடக்க காலத்தில் தமிழ் எந்தப் பகுதியில் பேசப்பட்டது என்பதைத் தொல்காப்பியம் என்ற பழம்பெரும் இலக்கணநூல் கூறுகிறது.

**“வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்**

**தமிழ்கூறும் நல்லுலகம்”**

என்று தமிழ்நாட்டின் எல்லையைக் கூறுகின்றார். எனவே, வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை தமிழ் பேசப்பட்டதாக நாம் இதன் மூலம் அறிகிறோம். தமிழ்நாட்டைச் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தரர்களும் பல குறுநில மன்னகர்களும் ஆண்டதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. சேர நாட்டிற்கு வஞ்சி மாநகரும், சோழ நாட்டிற்குப் பூம்புகாரும், பாண்டிய நாட்டிற்கு மதுரையும் தலைநகர்களாக இருந்துள்ளன. மூவேந்தர்களில் பாண்டிய மன்னர்கள் தமிழ்மொழியைப் போற்றி வளர்க்கும் வண்ணம் தமிழ்ச் சங்கங்கள் வைத்து நடத்தியதாகப் பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன.

### சங்க காலம் - விளக்கம்

பல்லாயிரம் ஆண்டுக் காலப் பழமையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ் மொழி விளங்குகின்றது. அதனால் அம்மொழி

நீண்டகால இலக்கிய வரலாற்றினைக் கொண்டிருக்கிறது. இதில் முதன்மையான இலக்கிய வரலாற்றுக் காலம் சங்க காலமாகும்.

**முச்சங்கள்**

பாண்டிய மன்னர்கள் தொடக்கத்தில் கடல் கொண்ட தென்மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டனர். அங்கு, தமிழ் அறிஞர் பெருமக்களைக் கொண்டு தமிழ் இலக்கிய ஆய்வும், செய்யுள் இயற்றுதலும் நடைபெற்றன. அதுவே முதற்சங்கம் எனப்பட்டது. தென்மதுரை கடல் பெருக்கெடுத்து வந்ததால் அழிந்தது. அதன் பிறகு கபாடபுரம் என்ற ஊரைத்தலைநகராகக் கொண்டு பாண்டியர்கள் ஆண்டார்கள். அங்கும் ஒரு தமிழ்ச் சங்கம் தொடங்கப்பட்டுப் புலவர்களும், அரசர்களும் தமிழ் ஆய்ந்தனர். இது இடைச்சங்கம் என்று அழைக்கப்பட்டது.

கபாடபுரம் கடலால் அழிவுற்ற பிறகு இன்றைய மதுரைக்குப் பாண்டியர் தலைநகரை மாற்றினர். இங்கும் ஒரு தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்று கி.பி.200 வரை நடைபெற்றது. இது கடைச்சங்கம் என்று அழைக்கப்பட்டது. இவ்வாறு மூன்று சங்கங்கள் நடத்தப் பெற்று, புலவர்களும் அரசர்களும் பல்வேறு செய்யுட்களைப் பாடி தமிழை வளர்த்தனர். இம் முச்சங்களின் காலமே சங்க காலம் என்று இன்றுவரை அழைக்கப்படுகிறது.

**முதற் சங்கம்**

கடல்கொண்ட தென்மதுரையில் பாண்டிய மன்னர்களால் நிறுவப் பெற்ற சங்கம் தான் முதற்சங்கமாகும். இச்சங்கத்தை நிறுவிய மன்னன் காய்சின வழுதி என்பவனாவான். காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் என்ற பாண்டிய மன்னன் ஈறாக 89 அரசர்கள் 4440 ஆண்டுகள் இச்சங்கத்தை நடத்தியதாக இறையனார் களவியல் உரை கூறுகிறது. இச்சங்கத்தில் அகத்தியர், திரிபுரம்

எரித்த விரிசடைக் கடவுள், குன்றெறிந்த முருகவேள், முரஞ்சியூர் முடிநாகராயர், நிதியின் கிழவன் போன்ற புலவர்கள் இருந்து தமிழ் ஆராய்ந்தனர். 4449 புலவர்கள் தமிழ் ஆராய்ந்து செய்யுள் பாடினர். அவர்களால் பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை போன்ற நூல்கள் பாடப்பட்டன.

**இடைச்சங்கம்**

தென்மதுரையைக் கடல் கொண்ட பிறகு கபாடபுரத்தில் தொடங்கப்பெற்ற இடைச்சங்கம், 3700 ஆண்டுக் காலம் நடைபெற்றது. வெண்தேர்ச் செழியன் என்ற பாண்டிய மன்னனால் தொடங்கப்பெற்ற இச்சங்கம் முடத்திருமாறன் முடிய 59 மன்னர்களால் நடத்தப் பெற்றது. இச்சங்கத்தில் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர் கருங்கோழியார் வெள்ளூர்க் காப்பியனார் போன்ற 3700 புலவர்கள் பாடினர். இவர்களால் பாடப்பெற்றவை கலி, குருகு, வெண்டாளி, வியாழ மாலை அகவல் போன்ற நூல்களாகும்.

**கடைச் சங்கம்**

கபாடபுரம் கடலால் அழிந்த பிறகு தற்போது உள்ள மதுரையில் கடைச் சங்கம் எனப்படுகின்ற மூன்றாம் சங்கம் தொடங்கப் பெற்றது. இரண்டாம் சங்கத்தை நடத்தி, கபாடபுரம் அழியும் போது அங்கிருந்து பிழைத்து வந்த முடத்திருமாறானால் இது, தொடங்கப் பெற்றது. இச்சங்கம் முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதி ஈறாக 49 அரசர்களால் நடத்தப் பெற்றது. 1850 ஆண்டுகள் இச்சங்கம் நடைபெற்றது. இச்சங்கத்தில் சிறுமேதாவியார், சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார்: மருதன் இளநாகனார், நக்கீரனார் என 449 புலவர்கள் பாடினர்.

**சங்க இலக்கியங்கள்**

சங்கம் என்ற ஓர் அமைப்பு இருந்ததாகப் பல்வேறு ஆதாரங்கள் கிடைத்தாலும், சங்கத்திலே அமர்ந்து புலவர்கள் பாடிய பாடல்கள் சிலவாகத் தான் இருக்க முடியும். பெரும்பாலான பாடல்கள், பல்வேறு இடங்களில், பல்வேறு காலங்களில், பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவையாகத்தான் இருக்க வேண்டும். அவை கி.மு.600 முதல் கி.பி.200 முடிய உள்ள காலத்தில் பாடப்பட்டவையாக இருக்கலாம். சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை நூல்கள் என்றும், பத்துப்பாட்டு என்றும் பிரிக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது. ஏராளமான பாடல்கள் ஓலைச் சுவடிகளில் இருந்து அழிந்துபோக, எஞ்சியவற்றைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அக்காலத்து அரசர்கள் புலவர்களின் துணையொடு செயல்பட்டனர்.

அவ்வாறு தொகுக்கப்பட்டவையே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமாகும். இக்காலப்பகுதியில் படைக்கப்பட்ட இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் மட்டுமே கிடைத்துள்ளது. எட்டுத் தொகுதிகாளகத் தொகுக்கப்பட்ட எட்டு நூல்கள் எட்டுத்தொகை என்றும் பத்துப் பெரிய பாடல்கள் பத்துப் பாட்டு என்றும் பெயர் பெற்றன.

**தொல்காப்பியம்**

சங்க இலக்கியங்களை நாம் அறிந்து கொள்வதற்கு முன்னால் சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த தொல்காப்பியம் பற்றி அறிந்து கொள்வது தேவையான ஒன்றாகும். சங்க இலக்கியங்களை அகம், புறம் எனப் பிரித்துப் பார்ப்பதற்கும், தமிழ் மொழியின் முழுமையான இலக்கணத்தை அறிந்து கொள்வதற்கும் தொல்காப்பியம் துணை நிற்கிறது. சங்க இலக்கியங்களுக்கு முன்னால் பல நூறு ஆண்டுகாலத் தமிழிலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும்.

கடல் பெருக்கெடுத்து ஊர்களை அழித்ததாலும், ஓலைச் சுவடிகள் பல்வேறு காரணங்களால் அழிந்ததாலும் அவ்விலக்கியங்கள் இன்றைக்குக் கிடைக்கவில்லை.

அவ்விலக்கியங்களுக்கு அகத்தியர் எழுதிய அகத்தியம் என்ற இலக்கண நூல் இருந்ததாகவும் அதனைத் தொடர்ந்து அகத்தியரின் மாணவரான தொல்காப்பியர் தொல்காப்பியத்தை எழுதியதாகவும் தமிழ் ஆய்வாளர்கள் இறையனார் களவியல் உரையை அடிப்படையாகக் கொண்டு கூறுகின்றனர். தொல்காப்பியர் கி.மு.500 அளவில் வாழ்ந்ததாக, பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியமே சங்க இலக்கியத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தது. தொல்காப்பியம் மூன்று, பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இலக்கண நூலாகும். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பன அவை. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

**எட்டுத்தொகை நூல்கள்**

எட்டுத்தொகையில் உள்ளவை எட்டு, தொகை நூல்களாகும். இவற்றைக் குறிக்கும் பழம் பாடல் ஒன்று உள்ளது. இப்பாடலை மனப்பாடம் செய்து கொண்டால் இந்நூல்களின் பெயர்களை நாம் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளலாம்.

**“நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்குப் பரிபாடல்**

**கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று**

**இத்திறத்த எட்டுத் தொகை”**

இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை அகநூல்களாகும். பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறநூல்களாகும். பரிபாடல் அகமும், புறமும் கலந்த நூலாகும்.

**பத்துப்பாட்டு**

சிறிய பாடல்கள் எல்லாம் எட்டுத்தொகையுள் அடங்கிவிட, பத்துப் பெரிய பாடல்களின் தொகுதி பத்துப்பாட்டு எனப் பெயரிடப்பட்டது. இப்பத்துப் பாடல்களையும் குறிக்கும் பழம்பாடல் ஒன்று உள்ளது.

> **"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை**
>
> **பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய**
>
> **கோலநெடுநல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்**
>
> **பாலை கடாத்தொடும் பத்து"**

இவ்வெண்பாவில் உள்ள முருகு என்று கூறப்படுகின்ற திருமுருகாற்றுப்படை, பொருநாறு என்று சொல்லப்படுகின்ற பொருநர் ஆற்றுப்படை, பாணிரண்டு என்று கூறப்படுகின்ற சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கடாம் என்று அழைக்கப்படுகின்ற மலைபடுகடாம் ஆகியவை ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தவை. இவை புறப்பாடல்கள் ஆகும். இவை தவிர மதுரைக்காஞ்சியும் புறப்பாடல் ஆகும். முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, ஆகியவை அகப்பாடல்களாகும். நெடுநல்வாடை அக இலக்கியமா, புற இலக்கியமா என்ற ஆய்வு இன்னும் நிகழ்ந்து வருகின்றது. இவற்றள் முல்லைப்பாட்டு 103 அடிகளை உடைய மிகச் சிறிய பாடலாகும். மதுரைக் காஞ்சி 782 அடிகளை உடைய மிகப் பெரிய பாடலாகும்.

இப்பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் இணைந்து பதினெண்மேற்கணக்கு எனவும் பெயர் பெறும்.

**சங்க இலக்கியத்தின் சிறப்புப் பிரிவுகள்**

சங்க இலக்கியங்களை அகம், புறம் என்று பிரிப்பர். காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை அகம் என்றும், காதல் தவிர, பிற செய்திகளைப் பாடும் பாடல்களைப் புறம் என்றும் கூறுவர். இதற்கான இலக்கணத்தைத் தொல்காப்பியம் கூறுகிறது. அகப்பாடல்கள் கற்பனையான தலைவன், தலைவியின் காதலைப்பற்றி விளக்கியுரைக்கின்றன. புறப்பாடல்கள் நாட்டை ஆளும் அரசனின் வீரம், கொடை, சமூகத்திற்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகள், கல்வியின் சிறப்பு போன்றவற்றைக் கூறுகின்றன. பெரும்பாலான புறப்பாடல்கள் அரசனின் புகழைப் பாடுவனவாகவே உள்ளன. பூம்புகார், உறையூர், மதுரை, வஞ்சி போன்ற நகரங்களைத் தவிர, பெரும்பாலும் சிற்றூர்களே அக்காலத்தில் இருந்தமையால் மக்கள் இயற்கையோடு இயைந்த சீரிய வாழ்க்கையை வாழ்ந்ததைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

## பல்லவர் காலத் தமிழ்

திராவிட மொழிகளுள் பழமையான இலக்கிய இலக்கணப் பாரம்பரியத்தை உடையதாகத் தமிழ்மொழிதான் விளங்கி வருகிறது. **“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே”** என்ற நன்னூல் நூற்பாவின்படி, மொழி காலந்தோறும் மாறிவரும் தன்மையுள்ளது எனலாம். தொல்காப்பியர் காலம், சங்க காலம், சங்கம் மருவிய காலம் என்று பல்வேறு காலக்கட்டங்களில் தமிழ்மொழி வளர்ச்சியடைந்து கொண்டே வந்துள்ளது. பல்லவர் காலத் தமிழிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலக் கட்டத்தில்

எழுந்த இலக்கியங்களே அன்றிக் கல்வெட்டுகளும் பல்லவர் காலத் தமிழ் மொழியின் தன்மையை அறியப் பேருதவி புரிகின்றன எனலாம்.

சங்க காலத்தை அடுத்த சங்கம் மருவிய காலம் **இருண்ட காலமாகக் கருதப்பட்டது. களப்பிரர்** என்ற அயலவர் தமிழகத்தில் ஊடுருவி இங்குத் தம் ஆட்சியை நிலைநிறுத்தினர். இவர்களது ஆதிக்கத்தால் சைவ, வைணவ சமயங்கள் தம் செல்வாக்கை இழந்தன. இதனால் தமிழ் இலக்கியமும் தேக்கம் அடைந்தது. எனினும் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் சில சிறந்த இலக்கியங்கள் இக்காலக் கட்டத்தில் தோன்றிய நூல்களாகக் கருதப் படுகின்றன. சமண, பௌத்த சமயத்தினர் செல்வாக்குப் பெற்று விளங்கினர்.

கி.பி.ஆறாம், ஏழாம் நூற்றாண்டுகளில் புத்த சமயம் வீழ்ச்சியடைந்து விட்டது. சமண சமயம் சங்க காலத்தில் நுழைந்து, களப்பிரர் காலத்தில் காலூன்றிப் பல்லவர் காலத்தில் ஆட்சிப் பீடத்தையே கைப்பற்றிவிட்டது. இதனால் தமிழ் இலக்கியமும், தமிழர் சமயங்களான சைவமும் வைணவமும் கி.பி.ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வீழ்ச்சி அடைந்திருந்தன.

இந்நிலையை முற்றிலும் மாற்றி அமைத்த பெருமை சைவக்குரவர் நால்வருள் ஒருவரான திருநாவுக்கரசரையே சாரும். சமணராக இருந்த அப்பெரியார்தான் சைவத்திற்கு மாறியதோடு அல்லாமல் மகேந்திர வர்ம பல்லவனையும் சமயம் மாற்றினார். இதுவே சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக் காலம் எனலாம். சமணப் பள்ளிகள் இடிக்கப்பட்டுப் பல சைவ ஆலயங்கள் எழுப்பப்பட்டன. **நாவுக்கரசர், ஞானசம்பந்தர்** முதலிய சைவ நாயன்மார்கள் மட்டும் அன்றி, பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார் போன்ற வைணவ ஆழ்வார்களும் பக்திப் பாடல்களைப் பாடி, பக்தியுடன் தமிழ்மொழியும் வளரத் துணை புரிந்தனர் எனலாம். கி.பி.ஏழாம்

நூற்றாண்டு முதல், பிற்காலச் சோழர் ஆட்சி தொடங்கிய பத்தாம் நூற்றாண்டு வரையுள்ள அக்காலக் கட்டத்தை, சைவ-வைணவ மறுமலர்ச்சிக் காலம் எனலாம்.

செந்தமிழ் நிலத்தில் சைவம் புத்துயிர் பெற்றது போல வைணவமும் புத்துயிர் பெற்று வளரத் தொடங்கியது. அச்சமயங்களுடன் தமிழ்மொழியும் வளரத் தொடங்கியது. சமண. பௌத்தத் தாக்கத்தால் தமிழ்மொழியுடன் வடமொழிச் சொற்கள் சில கலந்துவிட்டன. தேவாரம், திருவாசகம், போன்ற சைவ நூல்களும் ஆழ்வார்கள் இயற்றிய நாலாயிரத் திவ்வியப் பிரபந்தமும் பக்தி இலக்கியக் காலத்தில் தமிழ் மொழிக்குக் கிடைத்த மாபெரும் இலக்கியச் செல்வங்களாகக் கருதப்படுகின்றன. இவையும் அவிநயம் போன்ற இலக்கண நூல்களும் பல்லவர் காலத்திய தமிழ்மொழியை அறிந்து கொள்ளத் துணையாக விளங்குகின்றன. சாசனம், செப்பேடு, கல்வெட்டுகள் போன்றனவும் அக்கால மக்கள் பேச்சு மொழியை அறியப் பெருந்துணை புரிகின்றன.

## சோழர் காலத் தமிழ்

சங்ககாலத் தமிழுக்கும் இடைக்காலத் தமிழுக்கும் இடையே மாறுபாடுகள் பல உள்ளன. சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பல மொழிக் கூறுகள் இடைக்காலத்தில் நிலைத்துவிட்டதைக் காண முடிகிறது. சோழர் காலத்துத் தமிழ் மொழியின் வளர்ச்சி உயர்ந்த நிலையில் இருந்தது. இலக்கிய, இலக்கண நூல்கள் தோன்றின. இவை மொழியின் சிறப்பை அறிய உதவுவனவாக விளங்குகின்றன. இவையேயன்றிக் கல்வெட்டுகள், சாசனங்கள் போன்றனவும் சோழர் காலத் தமிழ் மொழியின் பண்புகளை உணர்த்துவனவாக விளங்குகின்றன. தமிழ்மொழி அடைந்த மொழி மாற்றங்களையும் சோழர் காலத்துத் தமிழ் மொழியின் எழுத்தியல் தன்மைகளையும் கூறப்படுகிறது.

### சோழர் காலத்துத் தமிழ்மொழி

கி.பி.9ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.13ஆம் நூற்றாண்டு வரை ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் பிற்காலச் சோழர்கள் தமிழகத்தில் அரசாண்டனர். தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு தழைத்தது. சமுதாயப் பொருளாதார நிலை உயர்ந்தது. எனவே, கலை வாழ்வில் கருத்தூன்றி மிகப் பெரிய கோயில்கள் பலவற்றைப் பெரும் பொருட்செலவில் கட்டினர். இலக்கியத் துறையிலும் பல கலைக் கோயில்கள் எழுந்தன. பௌத்தர்களும் சமணர்களும் பல காவியங்களைப் படைத்தனர். கம்பர் போன்ற பெருங்கவிஞர்கள், வடமொழிக் காப்பியங்களைத் தம் இயல்பு குன்றாமல் தமிழில் படைத்தனர். பலர் புராணங்களை அப்படியே மொழி பெயர்த்தனர். சிலர் புராணங்களில் அமைந்த கிளைக் கதைகளை நூலாக்கினர். சிற்றிலக்கியங்கள் பலவும் இக்காலத்தில் எழுந்தன. இலக்கண நூல் ஆசிரியர்கள் பலர் தோன்றிப் பற்பல வகை இலக்கண நூல்களை இயற்றினர்.

### இலக்கிய இலக்கணங்கள்

பல்லவர் காலத்தில் தோன்றி நாடெங்கும் பரவிக் கிடந்த பக்தி இலக்கியங்களான தேவார, திருவாசகங்களும் பிற நூல்களும் தொகுக்கப்பட்டு வகைப்படுத்தப்பட்டது. சோழர் காலத்தில்தான், சைவ சமயக் குரவர்கள் முதலான சைவ அடியார்களால் பாடப்பட்ட பாடல்களையெல்லாம் நம்பியாண்டார் நம்பி **பன்னிரு திருமுறைகள்** எனப் பெயரிட்டுத் தொகுத்தார்.

திருமால் அடியார்களான ஆழ்வார்கள் பாடிய பாடல்களையெல்லாம் நாதமுனி தொகுத்து **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** என்று பெயரிட்டார். அது வைணவ இலக்கியங்களின் தொகுதியாக உள்ளது.

ஐம்பெருங் காப்பியங்களில் **சிலப்பதிகாரம், மணிமேகலை, தவிரச் சீவக சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி** ஆகிய மூன்று காப்பியங்களும் இக்காலத்தில் தோன்றின. சோழர் காலத்தில் ஐஞ்சிறுகாப்பியங்களும் தோன்றின. சோழர் காலத்தைக் **காப்பியக் காலம்** என்றே கூறலாம்.

காப்பியங்கள் மட்டுமன்றிக் **கம்பராமாயணம், பெரியபுராணம், கந்தபுராணம், நளவெண்பா** போன்ற புராணங்களும் **மூவருலா, குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப் பரணி** போன்ற சிற்றிலக்கியங்களும் தோன்றின.

இத்தகைய இலக்கிய வளம் கொண்ட சோழர் காலத்தில்தான் நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, வீரசோழியம், வச்சணந்தி மாலை போன்ற சிறந்த இலக்கண நூல்களும் எழுதப்பட்டன.

**பிற ஆதாரங்கள்**

சோழர் காலத் தமிழை அறிய இலக்கிய, இலக்கண நூல்களேயன்றிக் கல்வெட்டுகள், சாசனங்கள், ஆவணங்கள், செப்பேடுகள் ஆகியனவும் மூல ஆதாரங்களாக விளங்குகின்றன. பல்லவர் காலக் கோயில் கல்வெட்டுகள், வேள்விக்குடிச் சாசனம், சின்னமனூர்ப் பெரிய செப்பேடு, அன்பில் செப்பேடுகள், முதலாம் இராசேந்திரன் கல்வெட்டுகள், வீர இராசேந்திரன் கல்வெட்டுகள், சுந்தர சோழன் ஆவணங்கள், இராஜ ராஜ சோழன் ஆவணங்கள், இராசேந்திரன் ஆவணங்கள், வீர இராசேந்திரன் ஆவணங்கள் ஆகியன சோழர் காலத் தமிழ்மொழியின் பண்புகளை உணர்த்துவனவாக விளங்குகின்றன.

## நாயக்கர் காலத் தமிழ்

தமிழ்மொழி வரலாற்றில் நாயக்கர் கால மொழிநிலை ஒரு திருப்புமுனை என்று கூறலாம். இடைக்காலத்தில் காணப்பட்ட மொழிக் கூறுகள் சில நாயக்கர்

காலத்திலும் நிலைத்து விட்டன. நாயக்கர் காலம் வடமொழிச் செல்வாக்கு மிகுந்திருந்த காலம். அக்காலக் கட்டத்தில்தான் புதிய உரைநடை வடிவமும் தோன்றியது. இத்தகைய சூழலில் தமிழ் மொழியில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. பல புதிய மாற்றங்களையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை மொழிக்கு உண்டாகிவிட்டது. அக்காலக் கட்டத்தில் ஏற்பட்ட மொழிமாற்றங்கள் பெரும்பாலும் ஒலிகளையும் இலக்கண அமைப்பையும் அடிப்படையாகக் கொண்டவை. இத்தகைய பல்வேறு மொழி மாற்றங்களை விளக்குவதாக இப்பாடப் பகுதி அமைந்துள்ளது.

**நாயக்கர் கால இலக்கிய இலக்கணங்கள்**

தமிழகத்தில் சோழர் ஆட்சிக்குப் பிறகு பாண்டியர் ஆட்சி தோன்றியது. ஆனால் பாண்டியர்களிடையே ஏற்பட்ட ஒற்றுமையின்மை காரணமாக இசுலாமியர் ஆட்சி தமிழகத்தில் ஏற்பட்டது. இந்த இசுலாமியர்கள் இந்துக்களின் சமய உணர்விற்குப் பாதகம் செய்தனர். அதன் காரணமாக இசுலாமியர் ஆட்சியை ஒழிக்கத் திட்டமிட்டனர். இம்முயற்சியின் பயனாக விஜயநகரப் பேரரசு துங்கபத்திரா நதிக்கரையில் உருவானது. அதே நேரத்தில் கி.பி.1538இல் **குமாரகம்பண்ணன்** என்பவர் இசுலாமியர்களை வென்று மதுரையில் நாயக்கர் அரசுக்கு அடிகோலினார். அது முதல் நாயக்கர் ஆட்சி மதுரையில் ஏறக்குறைய 400 ஆண்டுகள் நிலைத்திருந்தது.

அக்காலக் கட்டத்தில் சோழர் ஆட்சிக் காலம் போன்று பெரிய காப்பியங்களும் புராணங்களும் தோன்றவில்லை. எனினும், பல சிற்றிலக்கியங்களும் சில இலக்கண நூல்களும் தோன்றின. அக்காலத்திய மொழி வரலாற்றை அறியச் சிறந்த ஆதாரங்களாக இவை விளங்குகின்றன.

**இலக்கியங்கள்**

நாயக்கர் காலத்தைச் சிற்றிலக்கியக் காலம் என்று கூறலாம். **நெஞ்சு விடு தூது, அழகர் கிள்ளைவிடு தூது, தமிழ் விடு தூது,** போன்ற தூது நூல்கள் நாயக்கர் காலத்தில் தோன்றின. **மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற** சிறந்த பிள்ளைத்தமிழ் நூல்களும் அக்காலக் கட்டத்தில் வெளிவந்தவை. **நந்திக் கலம்பகம்** நாயக்கர் காலத்தின் தொடக்கக் காலத்தில் தோன்றியது. கி.பி. 18ஆம் நூற்றாண்டில் தோன்றிய **திருக்குற்றாலக் குறவஞ்சி, முக்கூடற் பள்ளு, சீர்காழிப் பள்ளு** போன்ற பள்ளு நூல்களும் சிற்றிலக்கிய வகைகள் நாயக்கர் கால மொழி மாற்றங்களை அறிந்து கொள்ள உதவுகின்றன.

புகழேந்தியரின் **நளவெண்பாவும்,** பரஞ்சோதி முனிவரின் **திருவிளையாடற்புராணமும்** வில்லிபுத்தூராரின் **வில்லிபாரதம்** அருணகிரியாரின் **திருப்புகழும்** தாயுமானவரின் **தனிப்பாடல்கள்** பலவும் நாயக்கர் கால மொழிநிலையை அறியப் பேருதவி புரிகின்றன.

**இலக்கணங்கள்**

மேலைநாட்டினரான வீரமானமுனிவர் எழுதிய் இலக்கண நூல்களான செந்தமிழ் இலக்கணமும், கொடுந்தமிழ் இலக்கணமும் மிகவும் குறிப்பிடத்தக்கன. அவற்றை முறையே செய்யுளுக்குரிய இலக்கணம் என்றும், பேச்சு வழக்கிற்குரிய இலக்கணம் என்றும் கூறலாம். மேலும், அவர் எழுதிய சதுரகராதி பிற்கால அகராதி நூல்களுக்கு முன்னோடியாக விளங்குகிறது. பெயர், பொருள், தொகை, தொடை என்ற நான்கின் அடிப்படையில் தமிழ்ச் சொற்களுக்கு விளக்கம் தருவதாக அமைந்துள்ளது இந்நூல்.

வீரமாமுனிவர் எழுதிய **போர்த்துக்கீசியம் - தமிழ் - இலத்தீன் அகராதி** மக்கள் பேசும் பேச்சு வழக்குக் கூறுகளைக் கொண்டுள்ளது. சீகன்பால்கு ஐயர்

1709இல் தரங்கம்பாடிக்கு வந்தவர். கிறித்துவ வேதமான பைபிளைத் தமிழ்ப்படுத்தியவர். தமிழ்-இலத்தீன் ஆகிய இரு மொழிகளுக்கும் பொதுவாக வழங்கும் பல சொற்களை எடுத்துக்காட்டியுள்ளார்.

இவ்வாறு மேலைநாட்டினர் சிலர், இலக்கண நூல்களையும் மொழி ஆய்வு நூல்களையும் எழுதினர். அவை நாயக்கர் கால இறுதியில் தமிழ்மொழிக் கூறுகள் சிலவற்றை அறிவதற்குச் சிறந்த ஆதாரங்களாகவும் விளங்குகின்றன.

**ஒலி மாற்றங்கள்**

தமிழ்மொழி வரலாற்றை நோக்கும் போது மொழி வளர்ச்சியடைந்து உள்ளதை அறிய முடியும். ஒரு மொழியில் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவது இயற்கையே. அம்மாற்றங்கள் ஒரு மொழியின் பல்வேறு மொழிக்கூறுகளில் காணப்படும். மொழி பெரும்பாலும் ஒலி நிலையில்தான் மிகுதியான மாற்றத்திற்கு உள்ளாகின்றது. பிறமொழிச் செல்வாக்கு, முயற்சிச் சிக்கனம், எளிமை, சோம்பல் போன்ற பல்வேறு காரணங்களால் ஓர் ஒலி வேறொரு ஒலியாக மாற வாய்ப்புள்ளது. இத்தகைய மாற்றத்திற்கு அண்மை ஒலிச் சூழலும் காரணமாக அமைகின்றது.

**உயிர், மெய் ஒலிகள்**

பல்லவர், சோழர் காலத்தில் வழங்கிய உயிர் ஒலிகளும் மெய் ஒலிகளும் நாயக்கர் காலத் தமிழிலும் ஒலிகளாக விளங்கின.

**வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம்**

நாயக்கர் காலமான பதினைந்து, பதினாறாம் நூற்றாண்டுகளில்தான் ஐரோப்பியர், கிறித்தவ சமயத் தொண்டு செய்வதற்குத்தமிழகம் வந்தனர்.

இவர்களுள் தத்துவ போதகர், வீரமாமுனிவர், சீகன்பால்கு ஐயர், போப் ஐயர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுள் வீரமாமுனிவர் தமிழ் அகராதி அமைப்புக்கு வித்திட்டவர். பேச்சு வழக்குச் சொற்களுக்கு இலக்கணம் வகுத்தவர். அவற்றோடு தமிழில் சிறந்த எழுத்துச் சீர்திருத்தம் செய்த பெருமை அவரையே சாரும்.

மெய்யெழுத்துப் போலவே **எ,ஒ** என்னும் குறில் எழுத்துகள் இரண்டும் புள்ளி பெறும் என எழுத்து வரிவடிவங்களைப் பற்றி இலக்கண நூல்களான தொல்காப்பியமும் நன்னூலும் குறிப்பிடுகின்றன. வீரமாமுனிவர் தொன்னூல் விளக்கம் என்னும் தம் நூலில் இவ்வரி வடிவங்களின் சில மாற்றங்களைக் குறிப்பிடுகின்றார்.

**மொழி மாற்றக் காரணிகள்**

நாயக்கர் கால இறுதியில் மேலை நாட்டினரின் வருகை மிகுந்தது. அவர்களுள்ளும் ஐரோப்பியர் வருகையால் தமிழகத்தில் அச்சுக் கூடங்கள் நிறுவப்பட்டன. பதினாறாம் நூற்றாண்டிலேயே கி.பி.1570களில் அச்சு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. கிறித்தவப் பாதிரிமார்கள் நூல்களை அச்சிட்டார்கள். செய்யுள் வழக்கு ஒழிந்து உரைநடை என்ற புதிய வடிவம் வழக்கிற்கு வந்துவிட்டது. இதன் காரணமாகப் பாமர மக்களும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எளிய நடையில் நூல்கள் பல எழுதப்பட்டன.

**உரைநடையின் தோற்றம்**

ஐரோப்பியர் வருகையால் தமிழகத்தில் அச்சு இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டன. முதலில் சமய நூல்கள் அச்சிடப்பட்டன. பிறகு இலக்கிய

நூல்களும் அச்சிடப்பட்டன. புதிய உரைநடைப் போக்கு வளரத் தொடங்கியவுடன் உரைநடை நூல்கள், திங்கள் இதழ், வார இதழ், ஆகியன அச்சேறின. ஆங்கிலேயரின் கல்விமுறை பின்பற்றப்பட்டதால் பாட நூல்கள் அச்சிடப்பட்டன. அந்தப் பாட நூல்களின் மூலமாகவும் தமிழில் உரைநடை வளர்ந்தது. கடிய நடை மாறி எளிய நடையில் நூல்கள் எழுதப்பட்டன.

நாயக்கர் கால இறுதியில் உரைநடை என்ற புதிய நடையின் போக்கும், பல நாட்டுப்புற இலக்கியங்களும் பேச்சு வழக்குக் கூறுகளும் மொழிமாற்றங்களை வெளிப்படுத்தும் சிறந்த ஆதாரங்களாக விளங்குகின்றன.

# அலகு - 5

## தமிழ் மொழியின் புற வரலாறு

தமிழ்மொழி பல்வேறு காலக் கட்டங்களில் எவ்வாறு இருந்தது என்று வரலாற்று அடிப்படையில் ஆராய்வது அவசியம். அவ்வரலாற்றினைக் அறிய மூன்று கோணங்கள் அவசியமாகிறது.

- தமிழ் மொழி அக வரலாறு
- தமிழ் மொழி அகப்புற வரலாறு
- தமிழ் மொழி புற வரலாறு

இவ்வாறு பகுத்துக் கொண்டு நுணக்கமாக ஆராயும்போது முழுமையான பார்வை கிடைக்கும், ஒரு தெளிவு பிறக்கும்.

**அக வரலாறு**

தமிழ்மொழியில் இடம் பெற்றிருக்கும் உயிர் ஒலியன்கள்(Vowels), மெய் ஒலியன்கள் (Consonants), சார்பொலியன்கள், பெயர்ச்சொற்கள் (Nouns), அடிச்சொல் (Root Morpheme), மூவிடப் பெயர்கள், (Pronouns), எண்ணுப் பெயர்கள் (Numerals), வேற்றுமை (Case), வினைச்சொற்கள் (Verbs), இடைநிலைகள் (Suffixes), தொடரமைப்பு முறைகள் (Syntactic Strructures) முதலியன பழங்காலத்தில் எவ்வாறு இருந்தன என்பதையும், பின்பு அவை ஒவ்வொரு காலக் கட்டத்திலும் எவ்வகை மாற்றங்களை அடைந்தன என்பதையும் 21ஆம் நூற்றாண்டு வரை ஆராய்ந்து காண்பதைத் தமிழ்மொழி **அக வரலாறு** என்று வரையறை செய்யலாம்.

சான்றாக,

**“எழுத்து எனப்படுப**
**அகரம் முதல்**
**னகர இறுவாய் முப்பது என்ப”**

**(தொல்.எழுத்து.நூன்மரபு.நூ.1)**

எழுத்து என்பது தமிழில், ‘அ’ என்பதில் தொடங்கி ‘ன்’ என்பது வரையிலான முப்பது என்று தொல்காப்பியத்தின் முதல் நூற்பா வரையறுக்கிறது.

**அகப்புற வரலாறு**

ஒரு குறிப்பிட்ட காலக் கட்டத்தில் தமிழ் ஒலியன், தமிழ் உருபன், தமிழ்த் தொடர் எங்ஙனம் இருந்தன என்பதை அந்தந்தக் காலக் கட்டத்துத் தரவுகளின் அடிப்படையில் ஆராயலாம். தொல்காப்பியர் காலத் தமிழில் ஒலியன், உருபன், தொடர் அமைப்பு எவ்வாறிருந்தன என்பதைத் தொல்காப்பியத்தையே அடிப்படையாகக் கொண்டு ஆராயலாம். சங்க காலத் தமிழ் எங்ஙனம் இருந்தது என்பதைச் சங்க இலக்கியங்களின் துணை கொண்டு ஆராயலாம். பல்லவர் காலத் தமிழ் பற்றி அறிந்து கொள்ளப் பக்தி இலக்கியத்தை உதவியாகக் கொள்ளலாம். சோழர் காலத் தமிழைப் பற்றி அறிய அவர்கள் வெளியிட்ட கல்வெட்டுகளைப் பயன்படுத்தலாம். இப்படி ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமிழ்மொழி எவ்வாறு இருந்தது என்று ஆராய்வதை **அகப்புற வரலாறு எனலாம்.**

தொல்காப்பிய விதிப்படி ‘ச’கரம் எந்தவொரு சொல்லுக்கும் முதல் எழுத்தாக வராது. ஆனால் சிலப்பதிகாரத்தில் சகடு, சண்பகம், சதுக்கம், சந்தனம், சந்தி, சதங்கை, சக்கரம், சகடம், சங்கமன் போன்ற சொற்கள் சகரத்தை முதல் எழுத்தாகக் கொண்டு இடம் பெற்றுள்ளன. அதேபோல்

மணிமேகலையில் சம்பாபதி, சண்பகம் சரவணம், சனமித்திரன், சரண், சலம், சபக்கம், போன்ற சொற்கள் உள்ளன. இவை போன்றவற்றை ஆராய்வது அகப்புற வரலாறு ஆகும்.

**புற வரலாறு**

வெவ்வேறு மொழி பேசுவோர் கலந்து பழகும்போது ஒரு மொழியில் உள்ள சொற்கள் மற்றொரு மொழியில் கலப்பது உண்டு. அவ்வாறு கடன் வாங்கப்பட்ட சொற்கள் இல்லாத மொழியே உலகில் இல்லை என்பார்கள். அவ்வகையில் தமிழில் வந்து கலந்த பிற மொழிச் சொற்களின் கலப்புப் பற்றியும் ஒரு சொல்லுக்கு உரிய பொருள் ஒவ்வொரு காலத்திலும் மாறி வருவது பற்றியும் கிளைமொழிகள் பற்றியும் ஆய்வதைப் **புற வரலாறு** எனலாம்.

**தண்ணீர், நீர், வெள்ளம்,** என்பன நீரைக் குறிக்கும் தமிழ்ச்சொற்கள். கடலில் மீன் பிடித்து வாழ்வதை வாழ்க்கை முறையாகக் கொண்டுள்ள தமிழக மீனவர்களின் மத்தியில்,

**ஏறிணி, வத்தொம், கலக்கு, தெளிவு, பணிச்சல், மிதாவது, சுரப்பு, மேமுறி** என்று நீரைக் குறிக்கும் சொற்கள் இன்றும் புழக்கத்தில் உள்ளன. இதைப் பற்றி ஆய்வது புறவரலாறு எனல் பொருத்தம் ஆகும்.

தமிழ்மொழியை இப்படி எல்லாக் கோணங்களிலும் எல்லாக் காலக் கட்டங்களையும் முன்னிறுத்தி ஆராய்வதற்குச் சான்றுகள் அவசியம் வேண்டும். மக்கள் எப்படிப் பேசினார்கள் என்பதை இன்று போல் கணினிக் குறுந்தகட்டில் பதிவு செய்யும் நிலை பழங்காலத்தில் இல்லை. என்றாலும் பிற வகைச் சான்றுகள் கிடைத்துள்ளன. பழங்காலத்திய கல்வெட்டுகள், இலக்கணங்கள், இலக்கியங்கள், உரையாசிரியர்கள், அகராதிகள், அயல்நாட்டார் குறிப்புகள்

முதலானவை தமிழ்மொழி வரலாறு அறிய உதவும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம் குறிப்பாக உரைநடை, கவிதை, நாடகம் ஆகியவை மக்களிடத்து சிறந்த வரவேற்பை பெற்றன. இத்துறைகளில் பல படைப்புகள் அளிக்கப்பட்டன. சிறுகதைகள், புதினங்கள், நாட்டியம், இசை, திரைப்படம் ஆகியவை பெருமளவில் வளர்ச்சி பெற்றுள்ளன. எனவே தற்கால தமிழ்நாட்டு வரலாற்றில் இலக்கியம் மற்றும் பண்பாட்டு துறைகளின் வளர்ச்சியானது குறிப்பிடத்தக்க பணியினை செய்துள்ளது. தமிழக மக்களின் வாழ்க்கை நிலையை மாற்றி அமைக்கும் ஒரு சான்றாக இலக்கியங்கள் திகழ்கின்றன. இலக்கிய வளர்ச்சியானது அரசியல், சமுதாய, பொருளாதார மற்றும் பண்பாட்டு வளர்ச்சியில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

**உரைநடை வளர்ச்சி**

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு புகழ் பெற்ற தமிழறிஞர் டாக்டர் உ.வே.சாமிநாதஐயர் சிறந்த பங்காற்றியுள்ளார். இவர் சங்க கால இலக்கியங்களின் பழம் ஏடுகளை சேகரித்து எதிர்கால சந்ததியினருக்காக அவற்றை பாதுகாத்த பெருமைக்கு உரியவர். தமிழ்மொழி வளர்ச்சிக்கு தமிழறிஞர் மறைமலை அடிகள் அதிக தொண்டாற்றியுள்ளார். பூண்டி இரங்கநாத முதலியாரின் கச்சிகலம்பகம், திரு.வி.கல்யாண சுந்தரனாரின் (திரு.வி.க) முருகு மற்றும் பெண்ணின் பெருமை, டாக்டர் மு.வரதராசனாரின் 'அகல்விளக்கு' ஆகியவை சிறப்பாக குறிப்பிடப்படுகின்றன. இராஜாஜி வியாசர் விருந்து, சக்கரவர்த்தி திருமகன் ஆகிய நூல்களை எழுதினார். பண்டிதமணி கதிரேசன் செட்டியார், கனகசபை பிள்ளை, இராகவ ஐயங்கார், வெங்கடசாமி நாட்டார்,

C.N.அண்ணாதுரை, ஔவை துரைசாமி பிள்ளை ஆகியோர் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு சிறந்த பணியாற்றியுள்ளனர். தேவநேயப்பாவாணர் ‘அகரமுதலி’ என்ற தமிழ் அகராதியை படைத்துள்ளார்.

**தமிழ்ப் புதினங்களின் வளர்ச்சி**

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் புதினம் எழுதும் முறை தோன்றியது. தமிழில் எழுதப்பட்ட முதல் புதினம் வேதநாயகம்பிள்ளை எழுதிய ‘பிரதாப முதலியார் சரித்திரம்’ ஆகும். இதைத் தொடர்ந்து பல புதினங்கள் தமிழ்நாட்டில் எழுதப்பட்டன. வரலாற்று புதினங்கள் கல்கி என்கிற கிருஷ்ணமூர்த்தியினால் மக்களிடையே மிகவும் புகழ்பெற்றன. இந்த வகையில் கல்கியின் ‘பொன்னியின் செல்வன்’ என்ற புதினம் குறிப்பிடத்தக்கது. மற்றொரு புகழ்பெற்ற நாவலாசிரியர் அகிலன், தனது ‘சித்திரப்பாவை’ என்ற நாவலுக்கு ‘ஞானபீட’ விருதைப் பெற்றார். சாண்டில்யன் எழுதிய ‘கடல்புறா’ குறிப்பிடத்தக்கது. ஜெயகாந்தன், டி.ஜானகிராமன், நா.பார்த்தசாரதி, சுஜாதா, வை.மு.கோதைநாயகி அம்மாள், சிவசங்கரி, இந்துமதி, லக்ஷ்மி, இராஜம்கிருஷ்ணன் ஆகியோர் சமூக கருத்துகளை மையமாக கொண்டு எழுதிய சில முக்கியமான புதின ஆசிரியர்கள் ஆவார். இது தவிர தற்காலத்தில் துப்பறியும் புதினங்களும் எழுதப்பட்டன. ஜே.ஆர் ரங்கராஜனின் ‘சந்திரகாந்தா’ என்ற துப்பறியும் புதினம் மிகவும் புகழ்பெற்றதாகும். எனவே இக்காலக்கட்டத்தில் பலவிதமான புதினங்கள் தோன்றின.

**கவிதை**

விடுதலைக்கு முன்பிருந்தே மக்களது கவனத்தை கவர்ந்த மற்றொரு இலக்கிய வடிவம் கவிதையாகும். தேசியக்கவி பாரதி தேசபக்தி பாடல்கள் வாயிலாக தமிழ்நாட்டு மக்களை தூண்டினார். நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, பாரதிதாசன் ஆகியோர் நாட்டுப்பற்றை வளர்ப்பதிலும், பெண் விடுதலைக்காகவும் பல கவிதைகளை இயற்றியுள்ளார். சமீப காலங்களில் கண்ணதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், வாணி தாசன், புலமைப்பித்தன், சுஜாதா போன்றோர் கவிதை வளர்ச்சிக்கு ஏராளமான கவிதைகளை படைத்துள்ளனர். இக்கவிதைகள் தமிழகத்தில் காணப்பட்ட சமுதாய பிரச்சினைகளை அடிப்படையாக கொண்டது. இக்கவிஞர்கள் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளனர் என்பதில் ஐயமில்லை.

**சிறுகதைகள்**

புதுமைப்பித்தனின் ‘சாபவிமோசனம்’, ராஜாஜியின் ‘தெய்வானை’, க.ப.ராஜகோபாலனின் ‘விடியுமா”, கல்கியின் ‘திருடன்’, அண்ணா துரையின் ‘ராஜபார்ட் ரங்கதுரை’ முதலியவை சிறப்பாக குறிப்பிடத் தக்க சிறுகதைகளாகும்.

**நாடகங்கள்**

தமிழ்நாடகத்தின் தந்தை என்று பம்மல் சம்மந்த முதலியார் அழைக்கப்படுகிறார். பேராசிரியர் சுந்தரம்பிள்ளயையின் ‘மனோன்மணியம்’, சூரிய நாராயண சாஸ்திரியின் ‘ரூபாவதி’, அண்ணாதுரையின் ‘ஓர் இரவு’, கிருஷ்ணசாமி பாவலரின் ‘பாம்பேமெயில்’ போன்றவை புகழ்பெற்ற நாடகங்கள்

ஆகும். புதழ்பெற்ற காளிதாசனின் நாடகங்கள் சங்கரதாஸ் சுவாமிகளால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டன. இதுதவிர டி.கே.எஸ். சகோதரர்கள், ராஜமாணிக்கம் மற்றும் ஆர்.எஸ்.மனோகர் போன்றோர் தமிழ் நாடகத்திற்கு புத்துயிர் ஊட்டினர்.

**நடனம்**

நடனம் தமிழ் கலாச்சாரத்திற்கு ஏராளமான பங்கினை ஆற்றியுள்ளது. நுண்கலை வளர்ச்சியில் தமிழகம் சிறப்பான இடத்தை பெற்றுள்ளது. பக்தி நிலை அடைந்து இறைவனுடன் கலக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நடனக்கலை கோயில்களில் தோன்றியது. தமிழகத்தின் அனைத்து கலைகளும் பக்தியை மையமாக வைத்தே வளர்ச்சி பெற்றன. சமகாலத்தில் நடனக்கலைகளிலே பழமையானதும் குறிப்பிடத்தக்கதும் ‘பரதநாட்டியம்’ ஆகும். பரதநாட்டியம் இன்றும் நம் கலாச்சாரத்தில் முக்கிய இடம் பெறுகிறது. சுமார் கி.மு.4000 ஆம் ஆண்டில் பரத முனிவரால் எழுதப்பட்ட ‘நாட்டிய சாஸ்திரம்’ என்ற நூலிருந்து பரதநாட்டியம் தோன்றியது. பரத முனிவரால் எழுதப்பட்டதால் அவரது பெயரைக்கொண்டு பரதம் என்ற சொல் ‘நாட்டியம்’ என்னும் பொருளில் அறியப்பட்டு பரதநாட்டியம் என்ற பெயர் பெற்றது. ‘ப’ என்பது பாவனை அல்லது அபிநயம் மற்றும் வெளிப்பாடு என்பதாகும். ‘ர’ என்பது இராகத்தை அல்லது இசையையும் ‘த’ என்பது தாளத்தையும் குறிப்பிடுகிறது. இதுவே பரதம் எனப்படுகிறது. இந்த நூற்றாண்டில் பரதநாட்டியம் சமுதாயத்தில் மிகச்சிறந்த நடனமாக அங்கீகரிக்கப்பட்டு நல்ல புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி வருகின்றது.

பரதநாட்டியம் இந்தியாவிலும், மேலை நாடுகளிலும் தனது அடிச்சுவடுகளை பதித்துள்ளது. நுண்கலைகளை வளர்ப்பதற்கென்றே 1963 ஆம் ஆண்டில் தமிழக அரசு ‘இயல், இசை, நாடகமன்றம்’ என்ற ஒன்றை துவக்கியது. பின்னர் பரதநாட்டியத்தை வளர்ப்பதற்கென்றே ருக்மணிதேவி அருண்டேல் என்பவரால் ‘கலாக்ஷேத்ரா’ என்ற நிறுவனம் சென்னையில் துவங்கப்பட்டது. சிதம்பரத்தில் உள்ள நடராஜர் கோயிலில் உள்ள கடவுள் சிவபெருமானின் பிரபஞ்சநாட்டியம் குறிப்பிடத்தக்கது. நமது நாட்டின் கலாச்சாரத்தை வளர்க்கவும் மக்களுக்கு ஊக்கம் அளிக்கவும் பத்மினி, பத்மா சுப்பிரமணியம், வைஜெயந்தி மாலா, சித்ரா விஸ்வேஸ்வரன், சுதாராணி மற்றும் பலர் இக்கலைப்பணியை செய்து வருகின்றனர்.

இதைத்தவிர கிராமப்புறங்களில் நாட்டுப்புற நடனங்களான கரகாட்டம், மயிலாட்டம், மற்றும் கும்மி போன்ற பல்வேறு கிராமிய கலைகள் திருவிழாக்காலங்களில் நடைபெறுகின்றன. பல சபைகள் நடனக்கலைஞர்களை ஆதரித்து அவர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல ஊக்கமளித்து நம் கலாச்சாரத்திற்கு பெருமையும், புகழையும் ஈட்டி வருகின்றன.

**இசை**

மக்களின் கலாச்சார வாழ்வில் இசை முக்கிய பங்கு வகிக்கிறது. நவீன காலத்தில் வாய்பாட்டு மற்றும் இசைக்கருவியின் மூலம் இசைக்கப்படும் இசையும் பிரபலமானவை. மூன்று விதமான வாய்ப்பாட்டு இசை அமைப்புகள் உள்ளன. அவை கர்நாடக சங்கீதம், கிராமபுற பாட்டுகள், இன்னிசை போன்றவை. 17,18ஆம் நூற்றாண்டுகளில் சர் தியாகராய சுவாமிகள், முத்துசுவாமி தீட்சிதர், சிமாலா சாஸ்திரி போன்றோர் கர்நாடக இசைக்கு புத்துயிர் அளித்தனர். கர்நாடக இசையை, சென்னை இசைக்கல்லூரி,

திருவையாறு இசைப்பள்ளி மற்றும் இசைச்சங்கம் போன்றவை வளர்ந்து வருகின்றன. ஐக்கிய நாட்டு சபையில் கீர்த்தனைகளை இசைத்த தமிழகத்தை சார்ந்த எம்.எஸ். சுப்புலட்சுமி குறிப்பிடத்தக்கவர். இதை தவிர செம்பை வைத்தியநாதர், செம்மங்குடி சீனிவாச ஐயர், எம்.எஸ். வசந்த குமாரி, மாராஜபுரம் சந்தானம், பாலமுரளிகிருஷ்ணா மற்றும் பலர் கர்நாடக சங்கீதத்தில் பிரசித்தி பெற்றவர்கள் ஆவார்.

தமிழிசையையும் அதன் தொடர்பான கலைகளையும் வளர்க்க 1932 ஆம் ஆண்டு சிதம்பரத்தில் சர் அண்ணாமலை செட்டியார் என்பவர் தமிழிசைக் கல்லூரியை துவக்கினார். இவர் 1943-ஆம் ஆண்டில் சென்னையில் ‘தமிழிசைச் சங்கம்’ ஒன்றை நிறுவினார். 1955 ஆம் ஆண்டு சர் அண்ணாமலைச் செட்டியாரின் (பேரரான) டாக்டர் ஏ.சி.முத்தையா செட்டியார் இசைக்கல்லூரியை முழு நேரக்கல்லூரியாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். அதனால் 1955 - ஆம் ஆண்டிலிருந்து பகுதி நேரக்கல்லூரியாக இருந்ததை முழுநேரக்கல்லூரியாக மாற்ற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார். அதனால் 1955-ஆம் ஆண்டிலிருந்து பகுதி நேரக்கல்லூரியாக இருந்ததை முழுநேரக்கல்லூரியாக மாற்றினார்.

ஒவ்வோர் ஆண்டும் தமிழ் இசைச்சங்கம் டிசம்பரில் 12 அல்லது 13 நாட்களுக்கு இசைவிழாவை நடத்துகிறது. இவ்விழாவில் மூத்த கலைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ள இளம் கலைஞர்களுக்கு கச்சேரி வாய்ப்புகள் தரப்படுகின்றன. இசைவிழாவின் துவக்க நாளில் ஒரு மூத்த இசைக்கலைஞரை அழைத்து அவருடைய தலைமையில் இசைவிழா துவக்கப்படும். விழாவின் முடிவில் அவருக்கு ‘இசைப்பேரறிஞர்’ என்ற பட்டம் அளிக்கப்படுகிறது. 1993 -

ஆம் ஆண்டு தமிழிசைச்சங்கம் மற்றும் தமிழ் இசை விழா இவ்விரண்டின் பொன்விழாவும் மிக்க ஆர்வத்துடன் கொண்டாடப்பட்டது.

நாட்டுப்புற இசையும், பாடலும் படிப்படியாக மக்களுடைய கவனத்தை ஈர்த்தன. இத்துறையில் கொல்லங்குடி கருப்பாயி, புஷ்பவனம் குப்புசாமி மற்றம் விஜயலட்சுமி நவநீதகிருஷ்ணன் போன்றோர் புகழ் பெற்று விளங்குகின்றனர். தமிழக இளைஞர்களை பெரிதும் கவர்ந்த இசை மெல்லிசையாகும். சீர்காழி கோவிந்தராஜன், டி.எம். சௌந்தர ராஜன், ஜேசுதாஸ், எஸ்.பி.பாலசுப்பிரமணியம், பி.சுசீலா, எஸ்.ஜானகி மற்றும் பலர் மெல்லிசைத்துறைக்கு சிறப்பாக பணியாற்றியுள்ளனர். இசைக்கருவிகள் அடங்கிய இசையும் வரவேற்பை பெற்றுள்ளது. வயலின் வித்தகர் குன்னக்குடி வைத்தியநாதன், வீணை காயத்ரி, நாதஸ்வரக் கலைஞர் காருக்குறிச்சி அருணாச்சலம் போன்றோர் இசைக்கலையில் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

**திரைப்படத்துறை**

20ஆம் நூற்றாண்டில் தமிழகத்தில் மிகவும் செல்வாக்கு பெற்ற கலையாக திரைப்படம் விளங்கியது. சமுதாய அரசியல் மற்றும் மதச்சார்பான கருத்துகளை மக்களின் மனங்களில் பரப்பும் சக்தி வாய்ந்த சாதனமாக திரைப்படம் விளங்குகிறது. தற்போது திரைப்படம் பொழுது போக்கிற்காக பயன்படுகிறது. சென்னையில் 1931 - ஆம் ஆண்டில் முதன் முதலாக பேசும் படம் அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னையில் ஏவி.எம். மற்றும் விஜயவாஹினி போன்ற திரைப் படப்பிடிப்பு நிலையங்களும், கோயம்புத்தூர் பக்ஷிராஜா நிறுவனம், சேலம் மாடர்ன் தியேட்டர் நிறுவனம் போன்றவை திரைப்படத்துறையில் புகழ்பெற்ற நிறுவனங்களாகும். திரைப்படத்துறையில் ஏ.பி.நாகராஜன்,

டி.ராமண்ணா, ஸ்ரீதர், கே.பாலசந்தர், எஸ்.பி.முத்துராமன், பாரதிராஜா, பாக்கியராஜ், மணிரத்னம் போன்றோர் புகழ்பெற்ற இயக்குநர்கள் ஆவார்.

எனவே தமிழ் இலக்கியத்திலும் நுண்கலைகளிலும் ஏற்பட்ட வளர்ச்சி தமிழக மக்களின் சமூக, அரசியல் கருத்துகளை பிரதிபலிப்பதாக உள்ளது. தொன்மையான பழக்கங்கள், கருத்துகளையும் புதிய புரட்சிகரமான கருத்துகளால் மாற்றி, நவீன கால சமுதாயத்தை உருவாக்குவதில் கலைகள் பெரும்பங்கு ஆற்றியிருக்கின்றன.

## தற்காலத்தமிழ்

தமிழைக் **'கன்னித் தமிழ்', 'என்றுமுள தென்தமிழ்'** என்றெல்லாம் புலவர் போற்றினர். இப்புகழ்ச்சி பழைமை பாராட்டுவதாக உள்ளது. வளர்ச்சி பற்றிச் சிந்தனை செய்யவில்லையா? வளர்ச்சியே இல்லையா? என்ற வினா தோன்றக் கூடும். நானூறு ஆண்டுக்கு முன் கூட வளர்ச்சி வரையறுக்கப்பட்டதாகத்தான் இருந்தது. வெளியீட்டுச் சாதனங்கள் குறைவாக இருத்தமையால் வளர்ச்சி சிறிதே இருந்தது என்பாரும் உளர்.

முன்பெல்லாம் தமிழ் ஓலையிலும் கல்வெட்டிலும் இருந்தது. ஓதுவார் நாவிலும் தவழ்ந்து வந்தது. எழுத்தாக இருக்கும் தமிழுக்கு அடிப்படை பேச்சுத் தமிழாகும். தமிழ் பேசும்மொழியாக உள்ள வரையிலும் வாழ்கிறது. வளர்கிறது என்றே கூற வேண்டும்.

தமிழ் நாட்டின் எல்லை வடவேங்கடம் - தென்குமரி என்றிருந்தது இன்று குறுகி இருக்கிறது. அதனால் தமிழ் வளர்ச்சி இல்லையா? தமிழர் எண்ணிக்கை இப்போது பெருகியிருக்கிறது. ஆகவே தமிழ் வளர்ந்திருக்கிறது எனலாமா? தமிழர் எண்ணிக்கைக்கு ஏற்பக் கல்வியறிவு பெருகவில்லையானாலும்கூடத்

தமிழ் வளர்ச்சி அடைந்துள்ளது. பத்திரிகை உலகில் தமிழ் முன்னேறி வருகிறது. தமிழ் நூல்களும் அழகான நிலையில் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

தமிழ்நாட்டின் அரசியல் மொழியாகத் தமிழ் உயர்ந்துள்ளது. உயர்நிலைப் பள்ளிகளின் கல்வி மொழியாகவும் வாழ்கிறது. தமிழ் மேடையின் முழக்கமாகவும் உள்ளது. ஆனால், கல்லூரி மொழியாக முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை.

கம்பனைப் போற்றியவர்கள், குடியரசு வந்ததும் பாரதியையும் போற்றத் தொடங்கினர். பாரதி வாழும்போதே உலகம் அவன் பாடலைப் பாடத்தொடங்கி விட்டது. பாரதியால் தமிழ் வளர்ந்தது. தமிழால் பாரதியும் வளர்ந்தார். பாரதியால் வளர்ந்த தமிழ் பாரதிதாசன், கவிமணி முதலியோரால் மேலும் வளர்ந்தது.

இடையில் மறக்கப்பட்ட தமிழிசைப் பாடல்கள் இன்று புதுவாழ்வு பெற்று வருகின்றன. நாட்டுப்புறப் பாடல்களை நாட்டின் செல்வமாய்க் கொள்ளும் குடியரசுக் காலத்தில் அந்த நடையிலும் நூல்கள் வெளிவருவது இயல்பேயாகும். வளர்ச்சியுமாகும்.

**இலக்கியங்களில் வளர்ச்சி**

சிறுவர் இலக்கியம் ஒரு புத்தம்புது முயற்சி. முதியோர் இலக்கியத்தையே வழங்கி வந்த நிலை மாறி, குழந்தைகளுக்கெனத் தனிப் பாடநூல், பாடல், கதை என வளர்ந்து வருகிறது. இளைஞர்களுக்கென்று பாடல்களும், கதைகளும் விளக்கங்களும் படங்களோடும் சுவையோடும் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் வெளிவருகின்றன. அவர்கள் மனநிலையையும் மொழிப்பாங்கினையும் ஆராய்ந்தறிந்து எழுதப்பட்டு வருகின்றன.

புதினங்கள் முதலில் மொழிபெயர்ப்புகளாகவும் தழுவல்களாகவும் இருந்தன, பின்னர் புதிய தமிழ்ப் படைப்புகளாக வெளிவரலாயின. சிறந்த மொழிப்பெயர்ப்புகளும் பலப்பல திறத்தில் வருகின்றன. சிறுகதை வளர்ச்சியும் தமிழின் வளர்ச்சியைக் காட்டுகிறது.

நாடகத் துறை, அதன் சிக்கல்களை அறிந்து திகைப்பின்றி இயங்குவதே பெரிய வளர்ச்சி, புதிய அறிவியல் போக்கினைப் பயன்படுத்தி உலகை மயக்கும் வெள்ளித் திரையில் வளருவது நாடகமேயாகும். வானொலி நாடகம் ஒரு புதுமை, கற்பனையில் அனைத்தையும் காணும் புதுமைக்கு ஏற்ற நுண்ணிய ஒலி வேறுபாட்டினையும் இனிமையினையும் ஆற்றலினையும் இடத்திற்கு ஏற்பத் தமிழ் பெற்று வளர்கிறது. கலைகளை, வளர்க்கும் தமிழ் தானும் வளர்கிறது. வரலாறு, உளவியல், இலக்கிய ஆராய்ச்சி என்று பல துறைகளிலும் தமிழ் வளர்ச்சி உள்ளது என்று தெ.பொ.மீனாட்சி சுந்தரனார் நிறுவியுள்ளார்.

மொழிப் பயன்பாட்டில் ஆங்கிலம், இந்திய மொழிகளைக் காட்டிலும் ஆற்றல் பெற்றது என்ற மனப்பாங்கு இருந்தது. தமிழரும் விதிவிலக்கல்லர். இம் மனப்பாங்கு, சிறுகச் சிறுக மாறத் தொடங்கியது. மொழியின் வளர்ச்சியிலும் முன்னேற்றம் தொடங்கியது. பார்வையிலும் படத் தொடங்கியது. இன்றைய நிலையில் மிக வேகமாக வளர்ந்து வரும் சமுதாய அறிவியல் வளர்ச்சியைத் தமிழ்வழி அறிந்து கொள்வதும் கற்பிப்பதும் ஓரளவு எளிதாக உள்ளது. அதற்குத் தமிழின் பல பிரிவுகளில் புதுமையாக்கம், நிலைபேறாக்கம் முதலியன நிகழ்ந்திருக்கின்றன. தமிழின் வளர்ச்சியாக இவற்றை உறுதியாகக் கூறலாம்.

தமிழ் எழுத்துக்கள், சந்தி, சொற்றொடர் அமைப்பு முதலியனவற்றை எளிமைப்படுத்தும் முயற்சி பல ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. தமிழ் மொழிப் பயன்பாட்டில் ஒப்புமையாக்கத்தின் மூலம் சில புதுச் சொற்கள்

ஆக்கப்பட்டு வருகின்றன. இன்று வழக்கிலுள்ள மொழிநடை பல துறைகளிலும் பயன்படும் வகையிலும் மாற்றியமைக்கப்பட்டு வருகிறது.

கல்வி கற்பித்தலுக்கென ஒரு மொழி நடை, ஆட்சித் துறைக்கென ஒரு மொழி நடை, அறிவியல் துறைக்கென ஒரு மொழி நடை, செய்தித் தொடர்புக்கேற்ற ஒரு மொழி நடை என்று பல சமுதாயப் பணிகளுக்கேற்ப மொழி நடையில் வளர்ச்சி நிகழ்ந்து வருகிறது.

**கலைச் சொல்லாக்கம்**

தற்காலத் தமிழ் மொழியின் வளர்ச்சியில் கலைச் சொல்லாக்கம் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றுள்ளது. கலைச் சொல்லாக்கம் எம்முறையில் உருவாக்கப்படுகிறது என்பதைப் பலரும் அறிவதால் பல புதிய சொற்கள் பெருகும் கலைச் சொற்கள், பேசும் மொழிக்கு எந்த அளவில் பயன்படுகிறது என்ற ஆய்வும் தமிழின் வளர்ச்சிக்கு உதவும், இவற்றை உணர்ந்தே, கலைச் சொல்லாக்கம் தமிழில் பெருமளவில் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. கலைச் சொற்களின் வளர்ச்சியால், தமிழ் மொழியின் சொற்களஞ்சியம் பெருகி வருகிறது. இச்சொற்களைப் பயன்படுத்துவதற்கெனச் சில பது அமைப்புகளும் மொழி நடையும் தோன்றி வளர்ந்து வருகின்றன.

சொல்லாக்கத்தினைக் கருத்தில் கொண்டு, எல்லாத்துறைகளுக்குமுரிய கலைச் சொற்களைத் தமிழில் ஆக்க, தமிழக அரசு பல அமைப்புகளை ஏற்படுத்தி உள்ளது. தமிழ் வளர்ச்சித் துறையில் மட்டும் இதுவரை 78 துறைகளுக்குரிய சிறப்புச் சொல் துணை அகராதிகள் வெளியிடப்பட்டுள்ளன. பழைமையைப் போற்றுவோரும் புதுமையை விரும்புவோரும் தொடர்ந்து தத்தம் வழிகளில் சொல்லாக்க ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர். இருவரும் இணையும்போது விரைவும் கூடுதலாகும்.

**உலக அரங்கில் தமிழ்**

இந்திய மொழிகளாலும் ஆங்கிலத்தாலும் இந்திய நாட்டின் பலதுறைகள் ஆளப்பட்டு வரும் சூழலிலும் தமிழின் வளர்ச்சி தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டுமன்றி உலக அரங்கிலும் தமிழின் வளர்ச்சி குறிப்பிடத் தக்க அளவில் உள்ளது. பல நாடுகளில் தமிழ் வாழும் மொழியாக இருப்பதால் வளரும் மொழியாகவும் விளங்குகிறது. தமிழின் வரலாற்றுச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு ஆகியவற்றால் பல நாடுகள், தமிழ்மொழிக் கல்வியில் ஆர்வம் காட்டுகின்றன. இந்த ஆர்வம் உலக அரங்கில் தமிழ் மொழி வளர்ச்சியும் பயிற்சியும் பெற்றுள்ளதை உறுதி செய்கிறது.

தமிழ் நாட்டில் மட்டுமன்றி இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா, பிஜி, மொரிசியஸ், பர்மா, தென் ஆப்பிரிக்கா, வியட்நாம் முதலிய நாடுகளிலும் பேசப்படுகின்றது. பல நாடுகளில் பேசப்படுகிற நிலையில் உள்ள உலக மொழிகளில் ஒன்றாகத் தமிழ் மொழி திகழ்கின்றது என்று செக் நாட்டு மொழியியல் பேரறிஞர் கமில் சுவலபில் கூறியுள்ளார். யுனெசுகோ நிறுவனம் தமிழ் மொழியில் கூரியர் இதழ் வெளியிடுவது தமிழுக்குக் கிடைத்த சிறப்பாகும்.

இலங்கை, கண்ணகி வழிபாட்டிற்கு முக்கிய இடமாகத் திகழ்கின்றது. அங்குள்ள சைவக் கோயில்கள் வளர்க்கும் தெய்வத் தமிழ் சிந்தையை உருக வைக்கும். இரகுவமிச காவியம் இலங்கைத் தமிழரசர் மொழிபெயர்த்ததாகும். சிங்களச் செய்யுள் அமைப்பும் தமிழ் யாப்பையொட்டி வளர்ந்த நிலையைக் காணலாம்.

இலங்கையை அடுத்து, தமிழர் அதிகமாக வாழும் நாடு மலேசியாவாகும். மலேசியப் பல்கலைக்கழகத்திலுள்ள இந்தியத்துறை தமிழ் மொழிப் பயிற்சியில்

மிகச்சிறந்த பங்கு வகிக்கின்றது. இத்துறை உலகப்பெருமை பெற்ற துறையாகும். கோலாலம்பூரில் உள்ள இப்பல்கலைக்கழகந்தான் முதன் முதலில் உலகத் தமிழ் மாநாட்டினைக் கூட்டியது.

சிங்கப்பூரில் மூன்று தேசிய மொழிகளுள் ஒன்று தமிழாகும். தொலைக்காட்சி முதலியவற்றில் தமிழ் மொழி முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது. கணினிக்கு ஏற்பத் தமிழை வளர்க்கும் முயற்சியில் ஈடுபடும் தமிழர் அங்குள்ளனர்.

கீழை நாடுகளில் மட்டுமல்லாமல் மேலை நாடுகளிலும் தற்போது தமிழ் வளர்ந்திருக்கிறது. அமெரிக்காவில் தமிழ்மொழிக்கு வடமொழி போலவே சிறப்பிடம் தருகின்றனர். சிகாகோ பல்கலைக்கழகத்திலும் இதாகாவிலுள்ள கார்னல் பல்கலைக்கழகத்திலும், பெர்க்கிலியிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்திலும், சியாட்டியிலுள்ள வாஷிங்டன் பல்கலைக் கழகத்திலும் ஹோனாலுவிலுள்ள ஹவாய்ப் பல்கலைக்கழகத்திலும் ஆஸ்டினிலுள்ள டெக்சாஸ் பல்கலைக் கழகத்திலும் தமிழ்க் கல்விக்கும் தமிழாய்வுக்கும் வழி செய்துள்ளனர்.

சிகாகோ பல்கலைக்கழகம் அமெரிக்க நாட்டில் இன்று தமிழ்ப் படிப்புக்குச் சிறந்த இடமாக உள்ளது. டாக்டர் இராமானுஜம் போன்றோர் தமிழை நன்கு வளர்த்தனர். தமிழ்க் கவிதைகள் உலக அரங்கில் வெளிப்பட இராமானுஜம் மிகச் சிறந்த தொண்டாற்றினார். தமிழ்த் தொடரியல் பற்றிய பல ஆய்வுகள் இப்பல்கலைக் கழகத்தில் நிகழ்ந்தன.

**தமிழ் வளர்ச்சி அமைப்புகள்**

இந்தியாவின் பிற இடங்களிலும், உலக அரங்கிலும் தமிழ் வளர்ந்திருப்பதைக் கண்டோம். தமிழ் வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டில் பல

அமைப்புகள், சங்கங்கள், நிறுவனங்கள், அரசு அமைப்புகள், பத்திரிகைகள், பதிப்பகங்கள் முதலியன தொடர்ந்து பணியாற்றி வருகின்றன. தென்காசித் திருவள்ளுவர் கழகம் திருக்குறளைப் பற்றியே சொற்பொழிவுகள் பலவற்றை ஏற்பாடு செய்து வருகிறது. அரிய மலர்களை வெளியிட்டு அரும்பணியாற்றி வருகின்றது. புதுக்கோட்டை வள்ளுவர் கழகம் திங்கள்தோறும் அறிஞரை அழைத்துச் சொற்பொழிவாற்ற வைத்துத் தொண்டாற்றியது. தமிழகப் புலவர் குழுவின் தமிழ்ப்பணி போற்றற்குரியதாக உள்ளது. சென்னைத் தமிழ்ச் சங்கம் கலைச் சொல்லாக்கக்குழு ஒன்றை அமைத்துக் கலைச் சொல்லாக்கப் பணியிலும் ஈடுபட்டது.

மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் தலைமையில் இயங்கிய தனித்தமிழ் ஆர்வலரின் இயக்கம் உலகத்தமிழ்க் கழகமாகும். அவருக்குப் பின்னும் பல ஆக்கப்பணிகள் இதன் உறுப்பினர்களால் நடைபெற்று வருகின்றன. உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் தமிழ் மாநாடுகளை நடத்தி வருகிறது. தமிழ்நாட்டுத் தமிழர் பேரவை, சேரன் கொற்றம், தமிழியக்கம், உலகத் தமிழின் முன்னேற்றக் கழகம் முதலியனவும் பல பணிகளை ஆற்றி வருகின்றன.

## மொழி வளர்ச்சியும் திட்டமிடலும்

தொடக்க கல்வியில், மொழியின் முக்கியத்துவத்துடன் குழந்தையின் மொழித் திறமையும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டதாகும். பரவலான பலரும் ஒப்புக்கொள்ளப்பட்டதற்கான காரணங்களை ஆராய்ந்து தெரிவது என்பது மிகவும் கடினம். குழந்தைகளுக்கு மட்டுமின்றி, நம் ஒவ்வொருவருக்கும் தொடர்பு கொள்ள மொழி மிகவும் அவசியம் என்பது கண்கூடு. ஆகையால், எல்லாப் பாடங்களையும் புரிந்து தெளிவதற்கு மொழி அறிவு அவசியமாகிறது.

உண்மையில், மொழியின் துணைகொண்டுதான் குழந்தை சிந்திக்க, முடிவெடுக்க, செயல்பட முடிகிறது. கல்வியின் அனைத்துத் தன்மைகளையும் தொடர்புப்படுத்திப் பார்க்கிறது. நினைப்பது, முடிவெடுப்பது, செயல்படுவது - ஆகிய அனைத்தையும் மொழி மூலமாகவும் மொழியின் உதவியாலுமே குழந்தை செய்கிறது. சமூகத்தின் ஓர் அங்கமாக குழந்தை இருப்பதற்கு, மொழிதான் முதன்மை இடத்தை வகிக்கிறது. இது குழந்தைக்கு மட்டுமின்றி, அனைவருக்கும் பொருந்தும்.

**உணர்வும் செயற்பாடும் தேவை**

அரசு தன்னாலான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. உரையாடலிலோ, மேடைப்பேச்சிலோ, குடும்பச் சூழலிலோ மொழியின் பயன்பாட்டில் தடை இல்லை. ஆனால் ஆட்சித்துறை, நீதித்துறை, கல்வித்துறை, சமயத்துறை, வழிபாட்டுத்துறை இவற்றில் தமிழ் மொழி முழு அளவில் மேம்பட்டிருக்கிறதா? பயன்பாடு எந்த அளவு உள்ளது?

தமிழக அரசு 1956 இலேயே தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தை உருவாக்கியது. 1957 இல் ஆட்சிமொழிக்குழு அமைக்கப்பட்டது. அந்த ஆட்சிமொழிக்குழுவிற்குத் துணை செய்ய 1959இல் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றம் அமைக்கப்பட்டது. பின்பு தமிழ் வளர்ச்சி இயக்ககம் உருவாக்கப்பட்டது. இன்று தமிழ் வளர்ச்சிக்கென ஒரு தனி அமைச்சகமே உருவாக்கப்பட்டுள்ளது. தனி அமைச்சர் அமையப் பெற்றது போற்றுதலுக்குரியது என்றாலும் தமிழ் வளர்ச்சி நோக்கில் பார்க்கும்போது நாற்பதாண்டுகளுக்குப் பின்பல்லவா இவ்வெண்ணம் தோன்றியது. தமிழுக்குச் செய்ய வேண்டும் என்ற உணர்வுள்ள தமிழ் முதலமைச்சரால் தான் இது முடிந்தது.

தமிழ் வளர்ச்சிக்காக முடிவெடுக்கும்போது எங்கெங்கே தமிழ் நாட்டிலேயே எதிர்ப்புத் தோன்றுகிறது என எண்ணிப் பார்க்க வேண்டும். எப்படியெல்லாம் தோன்றுகின்றது எனக்கூர்ந்தறிய வேண்டும். தடைகளைக் களைய முழுமூச்சோடு செயற்பட வேண்டும். நீதி மன்றங்களில் தமிழில் தீர்ப்பு வழங்க வேண்டும் என்று 1982இன் தொடக்கத்திலேயே ஆணை பிறப்பிக்கப்பட்டது. தமிழில் கையொப்பம் இட வேண்டும் என்பதற்கே கூட ஆணை 1978 இல் பிறப்பிக்கப்பட்டது. மடல், குறிப்பு, முதலியன தமிழில் அமைதல் வேண்டும் என்ற ஆணையும், பெயர்ப்பலகை முதலியவற்றில் தமிழில் எழுதவேண்டும் என்ற ஆணையும் இப்போது முனைப்புடன் செயற்படுத்தப்படுகின்றன. தாமாகச் செய்யாத தமிழ்நாட்டுக்காரர்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறதே!

கல்வித்துறையிலும் மொழிவளர்ச்சிக்காக அரசு திட்டம் கொண்டு வந்தது. 1963க்கு முன்பாகவே அந்தந்த மாநில மொழியில் கல்வி தரவேண்டுமென்று இந்திய மையக்குழு முடிவு செய்தது. இன்னமும் முழுமையாகத் தமிழ்நாட்டில் நிறைவேறவில்லை. ஆனால் தமிழில் மருத்துவம், பொறியியல், சட்டம் படிக்க வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

‘எங்கும் தமிழ், எதிலும் தமிழ்’ என்பதை மக்களே நடைமுறைப்படுத்த விழிப்புணர்வை ஊட்டியாக வேண்டும். ஆட்சித்துறையில் தமிழ் முழுமையாக வருவதற்குரிய சூழல்களை ஆராய வேண்டும். அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் தமிழின் மீது ஈடுபாடு காட்டுமாறு செய்திட வேண்டும். இந்தியாவில் உள்ள மாநில மொழிகள் சிக்கலுக்குரியன என்ற எண்ணத்தை மாற்றியாக வேண்டும்.

மொழி மேம்பாட்டுத்திட்டத்தினை முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எழுத்துச் சீர்திருத்தத்தின் தேவையை உணர வேண்டும்.

எழுத்தமைப்பை ஒழுங்காக்குவதும், அதனை எதிர்ப்போரைத் தக்க முறையில் உணர வைப்பதும் தேவையானதாகும். மொழியையும் இலக்கியத்தையும் வேறுபடுத்தி அறியாதவர் பலர் உள்ளனர். அதனால் மொழி வளர்ச்சி என்பதை இலக்கிய வளர்ச்சியாகவே நினைத்துக் கொள்கின்றனர். மொழயறிவை இலக்கிய அறிவாகவும் மொழிப்புலமையை இலக்கியப் புலமையாகவும் எண்ணுகின்றனர். பாடத்திட்டங்களும் பெரும்பான்மை இலக்கியத்தையே சொல்லித் தருமாறு அமைந்துள்ளன. மொழி எல்லாவற்றையும் விடப் பெரியது, வலியது, பரந்தது.

அதனால் இருபதாம் நூற்றாண்டுக்குப் புதிய, பொருத்தமான இலக்கணம் எழுதப்பட வேண்டும். தொல்காப்பியத்திற்குப் பின் நன்னூல் இலக்கணம் எழுதப்பட்டது போன்று அதற்கு மேல் வளர்ந்த தமிழுக்குப் புதிய இலக்கணம் எழுதப்பட வேண்டும். அதற்காக இலக்கணக்குழு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது.

தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்ட கல்வியைப் பெற்றோர் விரும்புமாறு செய்தல் வேண்டும். மொழியைச் சரியாக ஆளுவதற்குப் பயிற்சி தர வேண்டும். மொழிக்கல்வி முறை மாற வேண்டும். ஆங்கில மோகம் நீக்கப்பட வெண்டும். அம்மொழிக்கு அவ்வளவு பெரிய இடம் தர வேண்டுவதில்லை. உலகப் பெருமொழியைப் பயிலலாம். வேற்றுமொழியைத் தெரிந்து கொள்ள அதை ஊடகமாகக் கொள்ள வேண்டுவதில்லை. இவற்றில் வெற்றி கண்டால் விரைவாகத் தமிழ் வளரும்.

வாழ்க்கைக்குப் பயன்படுகிற தமிழை - நடைமுறைத் தமிழைச் சரியாகப் புரிந்து கொண்டு மேம்படுத்திடப் பாடுபட வேண்டும். கலைச் சொற்களை உருவாக்க வேண்டும். மக்கள் அவற்றை எளிதில் பயன்படுத்துமாறு உருவாக்க வேண்டும். நம்மால் வளர்வது மொழி, நம்மை வளர்ப்பதும் மொழி என்ற

உண்மையை அனைவரும் உணரும் வண்ணம் பரப்பிட வேண்டும். மக்களைச் சென்றடைய வேண்டிய கல்வியறிவு முழுதும் மக்கள் மொழியில் இருக்க வேண்டும். அறிவுத்துறைகள் பலவற்றுக்கும் பயன்படும் மொழியாகத் தமிழை மேம்படுத்த வேண்டும். இதுவரை நடந்துள்ள வளர்ச்சிப் பணிகளை நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டும். ஆட்சித்துறை, கல்வித்துறை, நீதித்துறை, வழிபாட்டுத்துறை முதலிய பலதுறைகளிலும் முழு அளவில் தமிழைப் பயன்படுத்தும் எண்ணம் வலுப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்குமேற்பத் தமிழும் வளரும்.